விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 21 சனிக்கிழமை (07.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# ஏமாற்றப்பட்டோம்!

## சாகும்வரை மீண்டும் போராட தமிழ் அரசியல் கைதிகள் முடிவு

(கொழும்பு)

அரசியல் கைதிகளின் முழுமையான விடுதலைக்குரிய தீர்வை இன்று 7-ம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக உறுதியளித்த ஜனாதிபதி அதனை நிறைவேற்றத்தவறியுள்ள நிலையில் நாளை 8-ம் திகதி தொடக்கம் மீண்டும் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரசியல் கைதிகள் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## வாக்காளர் இடாப்பு இறுதிச் சந்தர்ப்பம்

(கொழும்பு)

2015-ம் ஆண்டு வாக்காளர் இடாப்பிற்கான பெயர்களை உள் வாங்கும் இறுதிக்கட்ட நடவடிக் கைகள் தற்போது முன்னெடுக்கப் பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பிற்கு பெயர் உள்வாங்கப்ப டாத, வாக்களிக்க தகுதியானவர்

24ஆம் பக்கம் பார்க்க....

## 23 - 29-ம் திகதி வரை தேசிய சட்ட வாரம்

(கொழும்பு)

இம்மாதம் 23ம் திகதி முதல் 29-ம் திகதி வரை தேசிய சட்ட வாரம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இவ்வாரத்தில் நீதி அமைச்சு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு ஆகியன இணைந்து நாடு முழுவ தும் பல்வேறு செயற்பாடுகளை ஏற் பாடு செய்துள்ளன.

அதற்கமைய கொழும்பு,

24ஆம் பக்கம் பார்க்க....

## விசேட அமைச்சரவை கூட்டம் 9-ம் திகதி

(கொழும்பு)

நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலை மையில் விசேட அமைச்சரவை கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது என அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று அரசாங்க தகவல் திணை க்கள கேட்போர்கூடத்தில் நடைபெ ற்ற அமைச்சரவை தீர்மானங்கள்

## அளவுக்கதிகமான மதுபானசாலைகளை மிகவிரைவில் குறைக்க நடவடிக்கை



### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அளவுக்கதி கமாகவுள்ள மதுபானசாலைகள் மிக விரைவில் குறைக்கப்படும் என யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேத நாயகன் தெரிவித்துள்ளார்

யாழ். மாவட்டச்செயலர் அலுவ லகத்தில் நேற்றைய தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள்

(கொழும்பு)

எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு சேவைகள் ஆணை க்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகிய வற்றுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் ஜனா திபதியின் அனுமதியைப் பெறுவத ற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக

24ஆம் பக்கம் பார்க்க....

சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர்கூடத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்கள்

24 ஆம் பக்கம் பார்க்க....



யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்

யாழ். மாவட்டச்செயலர் அலுவ

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

24 ஆம் பக்கம் பார்க்க....

திபதியின் அனுமதியைப் பெறுவதற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக

24 ஆம் பக்கம் பார்க்க....

## ஓய்வுபெற்றோருக்கு இலத்திரனியல் அட்டை

(கொழும்பு)

ஓய்வுபெற்றோருக்கான இலத்திரனியல் அடையாள அட்டைகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஹெட்டியாராச்சி அரச தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு தெரிவித்துள்ளார்.

இப்புதிய அடையாள அட்டை

24 ஆம் பக்கம் பார்க்க....

## தாக்குதல் சம்பவம் விசாரணை நிறைவு

(கொழும்பு)

எச்.என்.டி.ஏ மாணவர்கள் மீது கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட பூர்வாங்க விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

எச்.என்.டி.ஏ மாணவர்கள் மற்றும் ஜாதிக்க பலய அமைப்பு ஆகிய தரப்பினரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செய்

24 ஆம் பக்கம் பார்க்க....

# பொன்சேகாவுக்கு எதிராக வழக்குத் தொடருவேன்

## நீதியமைச்சர் விஜயதாச தெரிவிப்பு

(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, பீல்ட் மாஷல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக வழக்க தாக்கல் செய்யப் போவதாக தெரிவித்துள்ளார்.

பொன்சேகா நேற்று முன்தினம் கூறிய தவறான குற்றச்சாட்டுக்காக, 500 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவன்காட் ஆயுத கப்பல் விசாரணை சம்பவத்தின் மூலம் விஜயதாச ராஜபக்ஷ லஞ்சம் பெற்றதாக

24 ஆம் பக்கம் பார்க்க....


# ஒலிவாங்கி செயற்படவில்லை; அறிக்கை கோருகிறார் ரணில்

(கொழும்பு)

தாம் உரையாற்றும் போது திடீரென ஒலிவாங்கி செயற்படாமல் போனமை தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற செயலாளர் தம்மிக தசநாயக்கவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வாய்மூல பதிலை எதிர் பார்த்து

24 ஆம் பக்கம் பார்க்க....



# ஆயுத களஞ்சியசாலை விவகாரம்; கோத்தபாய கைது செய்யப்படலாம்?

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்துக்கு சொந்தமான ஆயுத களஞ்சியசாலை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன இவ்விடயத்தை சூசகமாக கூறியுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையினை வைத்து அவரை கைது செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மிதக்கும் ஆயுத களஞ்சியசாலை

24 ஆம் பக்கம் பார்க்க....



## மு.கடற்படை தளபதியிடம் 6 மணிநேர விசாரணை

(கொழும்பு)

ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும பாரிய ஊழல் மோசடி தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதி சோமதிலக திஸாநாயக்கவிடம் நேற்று சுமார் 6 மணித்தியாலம் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தி வாக்கு மூலம் பதிவு செய்துள்ளது.

இதேவேளை, முன்னாள் கடற்படை தளபதியான ஜயனாத் கொலம்பகேயும் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பெண்ணை கேலி செய்த இளைஞன் பொதுமக்களால் தாக்கப்பட்டார்

(கரணவாய்)

வீதியில் சென்று கொண்டிருந்த யுவதி ஒருவரை தகாத வார்த்தைகள் கூறி கேலி செய்த இளைஞர் ஒருவரை பொதுமக்கள் தாக்கிய சம்பவம் நேற்றையதினம் நெல்லியடி மாலு சந்தியில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் தனியாக சென்று கொண்டிருந்த குறித்த பெண்ணினை பின் தொடர்ந்த இளைஞர் ஒருவர் அப் பெண்ணிடம் தகாத வார்த்தைகளைக் கூறி கேலி செய்துள்ளார்.

இதனால் அப் பெண் உரத்த சத்தமிட்டு வீதியால் சென்றவர்களது கவனத்தை தன்பக்கம் திருப்பி உதவி கோரியுள்ளார்.

அவ் இளைஞர் தன்னிடம் தகாத முறையில் நடக்க முயற்சித்துள்ளார் என யுவதி பொது மக்களிடம் முறையிட்டு அழுது புலம்பியுள்ளார்.

அதனையடுத்தே அங்கு திரண்ட பொதுமக்கள் அவ் இளைஞரை தாக்கியதுடன் மேற்படி தகாத செயலுக்காக எச்சரித்தும் உள்ளனர் எனத் தெரியவந்தது. (செ-5,60)

## அத்தியாவசிய தேவைகள் பற்றாக்குறையினால் தீவக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது

### விரைந்து கவனமெடுக்க வேலணை பிரதேச செயலர் வலியுறுத்து

(வேலணை)

தீவகத்தில் காணப்படும் அத்தியாவசிய தேவைகளின் பற்றாக்குறையினால் தீவக மாணவர்களின் கல்வி மட்டம் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவித்துள்ள வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், இவற்றை உடனடியாக திருப்திகரமாக ஏற்படுத்தி தருமாறு உயர் அதிகாரிகளிடம்கோரிக்கைவிடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தொலைநோக்கு சிந்தனையின் கீழ் மழை நீர் சேமிப்பு திட்டத்தின் கீழ் வேலணை சரவணை பகுதியிலுள்ள ஒருவருடைய வீட்டில் மழை நீர் சேமிப்பு தொட்டி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இவ் மழை நீர் சேகரிப்பு திட்டம் முழுமையாக தீவகத்தை முன்னுரிமை படுத்தி எடுக்கப்பட்ட திட்டமாகும்.

. எமதுபிரதேசத்தைபொறுத்தவரையில் முப்பது கிராம சேவையாளர் பிரிவுகளை கொண்ட தீவக தெற்கு பரதேசத்தில் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகள் மாத்திரம் குடிதண்ணீர் கொண்ட இடங்களாக காணப்படுகின்றது.

அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் ஆகிய பிரதேச்ங்களிலேயே குடிநீர் காணப்படுகின்றது. இந்த இடங்களில் இருந்து தான் ஏனைய இருபத்தியெட்டு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் தண்ணீர் கொண்டு செல்லப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களுக்கான தண்ணீரை பவுசர் மூலமாக வழங்கி வருகின்றோம்.

இந்த வகையில் தனியார் நிறுவனங்களின் ஊடாகவும், பிரதேச சபைகள் மூலமாகவும் வேறுவகையில் தண்ணீரை காசு கொடுத்து வாங்குகின்ற நிலையும் வருடம் முழுவதும் தொடர்கின்றது. சில வேளைகளில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினூடாக எமது அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய இலவச நீர் விநியோகத்தினை மேற்கொண்டு வருகின்றோம்.

யூலை, செப்டெம்பர், ஓகஸ்ட் ஆகிய மாதங்களிலேயே இந்த இலவச குடி தண்ணீர் வழங்க கூடியதாக உள்ளது.

கடந்த வருடம் எமது பிரதேசத்தில்மழை போதாத நிலையில் குடிநீருக்கான தேவைக்கு அல்லைப்பிட்டியிலிருந்து நீர் எடுக்க முடியாத நிலை காணப்பட்டிருந்தது.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து தண்ணீரை பவுசர் மூலமாக எடுத்து எமது மக்களுக்கு விநியோகிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டிருந்தது.

ஆகவே இவ்வாறன கஷ்டமான சூழ்நிலையில் மழை நீர் சேகரிப்பு தொட்டியினை முழுமைப் படுத்தி தந்தமைக்கு அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

ஆளுநர் எமது தீவக பிரதேசத்திற்கு உரிய திட்டங்களை வழங்கி வருகின்றார். யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட ஆயிரம் தொட்டிகளில் ஐந்நூறு தொட்டிகளை எமது தீவக பிரதேசத்திற்கு கிடைக்க அரச அதிபர் வழியேற்படுத்தியுள்ளார்.

எமது தீவக பிரதேசம் மிகவும் வறுமையான பிரதேசம். எங்களிடத்தில் தண்ணீர் பிரச்சினை அதிகமாக காணப்படுகின்றது.

அதேபோல வீட்டுத்திட்டங்கள், அரச திட்டங்கள் மற்றும் ஏனைய வறுமை நிவாரணங்களுக்காக எமது மக்கள் எம்மிடம் வந்து அணுகிக்கொண்டு உள்ளார்கள்.

இவற்றையும் எதிர்காலத்தில் எமக்கு வழங்கி உதவ அனைவரும்முன்வர வேணடும்.

மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை, போக்குவரத்து பிரச்சினை, வீதிகள் சீரின்மை, மருத்துவ ரீதியான சுகாதார பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளால் எமது கல்வி தராதரம் கூட பாதிக்கப்பட்டு கொண்டுள்ளது. ஆகவே இது தொடர்பில் உடனடியாக உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (செ-4)

## யாழ்.சமூக விரோத செயல்களை தெரிவிக்க தொலைபேசி இல.அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இடம் பெறும் சமூக விரோத செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளையும் இரகசிய தகவல்களையும் யாழ.மாவட்டச் செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 0212225000 என்ற புதிய தொலைபேசி இலக்கத்தினூடாக பொதுமக்கள் தெரிவித்துக்கொள்ள முடியும் என யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச்செயலர் அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் இடம் பெறும் சமூக விரோத செயல்களை தடுப்பதற்கு பல்வேறு விதமான நடவடிக்கைகளை அனைத்து தரப்பினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றோம்.

அதிலும் சமூக விரோத செயற்பாடுகளை தடுக்க பொது மக்களின் உதவியும் ஒத்துழைப்பும் எமக்கு மிக முக்கியமாக தேவைப்படுகின்றது.

அந்த வகையில் எமது மாவட்டத்தில் துரதிர்ஷ்டவசமாக நடைபெற்று வரும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை, சிறுவர் பெண்களுக்கெதிரான வன்முறைகள், அதிகாரிகள் லஞ்ச ஊழல் பெற்றால் அது தொடர்பான தகவல்கள் போன்ற சமூக விரோத செயற்பாடுகள் பற்றிய இரகசிய தகவல்களை எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

பொதுமக்களால் தெரிவிக்கபபடும் தகவல்கள் அனைத்திலும் இரகசியம் பேணப்படும் என்பதோடு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது இந்த தொலைபேசி இலக்கத்திற்கு அலுவலக நேரத்தில் மட்டும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

அடுத்த வருடத்தில் இருந்து 24 மணித்தியாலமும் இத் தொலைபேசி இலக்கம் சேவையில் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**அருளானந்தம் -சீராளன்**

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
தலைமைக்காரியாலயம் (கணக்காய்வு)
கூட்டுறவுத் திணைக்களம், முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடைமையாற்றி இலங்கை நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதல் நிலையை பெற்று தெரிவு பெற்றமைக்காக இவர் இறைவனின் அருட்கடாட்சத்தோடு மேன்மேலும் பல பதவி உயர்வுகளையும் பட்டங்களையும் பெற பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்-
முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் இணையமும் அங்கத்துவ நிறுவனங்களான

1. பாண்டியன்குளம் /துணுக்காய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்-வவுனிக்குளம்
2. ஒட்டுசுட்டான் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுசங்கம் - கற்சிலைமடு
3. முல்லை மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் - முள்ளியவளை
4. முல்லை கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் - முல்லைத்தீவு நகர்
5. முல்லை தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் - செம்மலை
6. முல்லை வடக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் - வலைஞர்மடம்
7. புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் - புதுக்குடியிருப்பு
8. விசுவமடுக்குளம் பனை தென்னை வளஅபிவிருத்தி கூட்டுறவு சங்கம் - விசுவமடு

(C-2633)


## மரண அறிவித்தல்

### அமரர் வேலுப்பிள்ளை சரஸ்வதி



வடலியடைப்பை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

**வேலுப்பிள்ளை சரஸ்வதி**

நேற்று 6.11.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்துவாத்தியார் - தங்கமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற அருணாசலம்-பாருப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இராசம்மா, நாகரத்தினம், சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவஇன்பநாயகி மற்றும் மங்கையற்கரசி, சச்சிதானந்தம் நிர்மலாதேவி, பரமானந்தம் (நேபாட் நிறுவனம்), சரோசாதேவி விவேகானந்தன் (கனடா), ஆனந்தராசா (வலம்புரி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் சுப்பிரமணியம், நீலாதேவி, பரமேஸ்வரன், கிருகாம்பிகை காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் சரோஜினிதேவி (கனடா), சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07-11-2015 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவரத்தினராசா வீதி,
ஸ்ரேசன், கோண்டாவில்.

(C-2636)

தகவல்
குடும்பத்தினர்.

# சிங்களப் பெயர்களை மாற்றியமைக்க வடக்கு மாகாண சபையில் பிரேரணை!

(யாழ்ப்பாணம்)

**நயினாதீவிலுள்ள சில இடங்களுக்கு சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இவற்றை உடனடியாக மாற்றியமைக்க ஜனாதிபதி, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரைக் கோரும் பிரேரணையொன்று நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

2015.08.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1928/26 ஆம் இலக்கம் கொண்ட அவ்விசேட வர்த்தமானி அறிவித்தலின் படி வேலணை பிரதேச சபையின் இரண்டு வட்டாரங்களின் பெயர்கள் நாகதீபம் என குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றினை முன்னர் இருந்தது போல் நயினாதீவு என மாற்றியமைக்குமாறு கோரும்பிரேரணையொன்றே நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டது.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தின் 2012 ஆம் ஆண்டின் புள்ளிவிபரக்கையேட்டின் பக்கம் 17 இன் படியும்,

வடக்கு மாகாணசபையின் திட்டமிடல் செயலகத்தின் 2011 ஆம் ஆண்டின் புள்ளி விபரக்கையேட்டின் பக்கம் 3 இன் படியும் ஜே/34 கிராம சேவையாளர் பிரிவு- நயினாதீவு வடக்கு என்றும்,

ஜே/35 கிராம சேவையாளர் பிரிவு - நயினாதீவு மத்தி என்றும்,

ஜே/36 கிராம சேவையாளர் பிரிவு- நயினாதீவு தெற்கு என்றும் கூறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களது வரலாற்றின் ஆதி காலத்திலிருந்து இன்று வரை இந்தத் தீவகப் பிரதேசம் நயினாதீவு என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது.

சகல ஆவணப் பதிவுகளும் இவ்வாறே பேணப்பட்டு வந்துள்ளன. அப்படியிருக்க இந்த வர்த்தமானிப் பிரகடனம் நயினாதீவு என்ற தமிழ்ப்பெயரை சத்தம் சாவடியின்றி மாற்றி நாகதீபம் என்ற பெயரை உட்புகுத்தி வரலாற்றை திரிவுபடுத்தும் நடவடிக்கையாகவும், நல்லெண்ண உருவாக்கத்துக்கு குந்தகமானதாகவும் பார்க்கும் வடக்கு மாகாண சபை இந்த நடவடிக்கை கவலைக்குரியதும் கண்டிக்கத்தக்கதும் எனத் தெரிவிப்பதுடன் இந்த இரண்டு வட்டாரங்களினதும் பெயர்களையும் அவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளையும் நயினாதீவு எனும் பெயர் கொண்டு தொடர்ந்தும் பேணும் பொருட்டு வர்த்தமானி பிரகடனத்தில் உடனடிமாற்றம்செய்ய வேண்டும் என அதி உத்தம ஜனாதிபதியையும், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சரையும் இச்சபை கோருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் வவுனியாவிலுள்ள கொக்கஞ்சான்குளம் என்னும் இடமும் கலாபொஸ்பல எனும் சிங்களப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப பிரேரணை அனைவரது ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ-4)

# 16 துவிச்சக்கரவண்டிகள் பொலிஸாரால் பறிமுதல்

(கரணவாய்)

துவிச்சக்கரவண்டிகளில் முகப்பு வெளிச்சமின்றி வீதியால் பயணித்தவர்களின் 16 துவிச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் இரவு நெல்லியடிப் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நெல்லியடிப் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை இடம்பெற்ற போதே மேற்படி 16 துவிச்சக்கர வண்டிகள் கைப்பற்றப்பட்டன.

துவிச்சக்கர வண்டிகளில் முகப்பு வெளிச்சம் இன்றி இரவு நேரங்களில் பயணிக்க முடியாது என பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் மேற்படி நெல்லியடிப் பகுதியில் முகப்பு வெளிச்சம் இன்றி துவிச்சக்கர வண்டிகள் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தன.

இதற்கமையவே முகப்பு வெளிச்சமின்றி பயணித்த துவிச்சக்கர வண்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைப்பற்றப்பட்ட துவிச்சக்கர வண்டிகளது உரிமையாளர்கள் தத்தமது துவிச்சக்கர வண்டிகளுக்கு முகப்பு வெளிச்சங்களை பொருத்தி துவிச்சக்கர வண்டிகளை பெற்றுக்கொள்ளுமாறு நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5-60)

# முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு உதவி



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள அரசியல் கைதிகளின் 41 குடும்பங்களுக்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தலைமையில் நேற்றைய தினம் அவரது அலுவலகத்தில் வைத்து வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின்செயலாளர்எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சர்வேஸ்வரன், கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜெ.ஜெ.சி.பெலிசியன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிக்கான பொருட்களை வழங்கி வைத்தனர். (இ-9)

# அமரசிங்கவை அரவணைத்து அடுத்த தேர்தலில் குதிப்பேன்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுடன் இணைந்து தேர்தலுக்கு முகங்கொடுக்கப் போவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வரவன்ச தெரிவித்தார். பத்தரமுல்லையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தனம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு சகல கிராமங்களையும் உள்ளடக்கி புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த வேலைத்திட்டம், இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் உள்ள 10 அரசியல் கட்சிகள் மற்றும் வெளியில் உள்ள கட்சிகளுடன் இணைந்து புதிய கூட்டணியில் போட்டியிட, பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார். இதேவேளை, "முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னத்தை கைது செய்ததை ஏற்றுக்கொள்ள முடியாது.

விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு விடுதலை வழங்கி அவர்களுக்கு குடியுரிமை வழங்கிய அரசாங்கம், குடிவரவு-குடியகல்வுச் சட்டத்தை மீறியதாக குற்றஞ்சாட்டி அவரை கைதுசெய்து நாட்டை விட்டு வெளியேற்ற முயற்சிக்கின்றது"என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# உள்ளூர் மன்றங்கள் தனியொருவரின் கீழ் இயங்கும் விதத்தில் சட்ட திருத்தம்

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை தனியொருவருக்கு வழங்கும் வகையில் அதனை திருத்தவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் நகர சபைத் தலைவர்கள் மற்றும் முதல்வர்கள் வசமே காணப்படுவதனால், மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் தற்போதுள்ள உள்ளூராட்சி மன்ற சட்டத்தை திருத்துவதன் ஊடாக, உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை தனியொருவருக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறுகின்ற பாரிய மோசடிகள் குறித்து ஆராய்வதற்காக இணைப்பு பிரிவொன்றை ஸ்தாபிக்கும் வகையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில்' கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் நல்லாட்சி திட்டங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கையாகவே இந்த பிரிவை ஸ்தாபிப்பதாக அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

சில உள்ளூராட்சி மன்றங்கள் உறுப்பினர்களை மையமாக கொண்டு இயங்கி வருவதாகவும், அதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை மாற்றியமைக்கும் வகையில், இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான ஆணைக்குழுவின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொண்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த பிரிவு ஸ்தாபிக்கப்படுவதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறுகின்ற பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பான தகவல்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-7-10)

# மாணவர்களின் பிரச்சினையைத்தீர்க்க அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உயர் கல்வி டிப்ளோமா மாணவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பிலான அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாணவர்களினால் கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது அவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி மதுரட்ட நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைகுழுவில் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

இதன்போது, குறித்த தாக்குதல் அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டதன்று என பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்தில் இருந்த உயர் பொலிஸ் அதிகாரிக்கு மாணவர்களைக் கலைந்து செல்லச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து தானே ஆலோசனை வழங்கியதாகவும் தெரிவித்தார். (இ-7-10)

# 200 மில்லியன் மக்களுக்கு வேலை இல்லை

உலகளாவிய ரீதியில் 200 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்பற்ற நிலையிலுள்ளனர். இவர்களில் 5 சதவீதமானவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களாக உள்ளனரென ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் திட்ட இணைப்பாளர் கே.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் எதிர்வரும் 2050 ஆம் ஆணடளவில் நான்கில் ஒரு பகுதியினர் தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்வார்களென வும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டு 70 ஆவது ஆண்டு நிறைவுபெறுவதை முன்னிட்டும் இலங்கையானது ஐ.நாவில் இணைந்து 60 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டும் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் டேபா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "2000 ஆம் ஆண்டு 100 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாத நிலையிலிருந்தனர். ஆனால், 2015 ஆம் ஆண்டு அது 57 மில்லியனாக குறைந்துள்ளது.

அத்துடன், உலகளாவிய ரீதியில் 2014 ஆம் ஆண்டு 90 மில்லியன் சிறுவர்கள் நிறை குறைந்த சிறுவர்களாக இருந்தனர்" என்றார்.

"உலகளாவிய ரீதியில் காணப்படும் யுத்தம், வறுமை, அவசரகால நிலைமை உள்ளிட்ட பல காரணங்களினால் சிறுவர்களுக்கு தரமான கல்வியை பெறமுடியாத நிலைமை பல நாடுகளில் ஏற்பட்டுள்ளன" எனவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# கம்மன்பில மீது மோசடி வழக்கு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய தொழிலதிபர் பிரயன் சடிக் என்பவர் இலங்கையில் முதலீடு செய்த ஒரு மில்லியனுக்கு அதிகமான அவுஸ்திரேலிய டொலர், பங்குகளை உதய கம்மன்பில சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்த உதய கம்மன்பில இது போலியான குற்றச்சாட்டு எனவும், போலியான ஆவணங்கள் மூலமாக இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னணியில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பான உண்மையான விடயங்கள்.விரைவில் வெளிச்சத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7-10)

# தேசிய டிப்ளோமா பயிற்சிநெறிக்கான நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது

*(யாழ்ப்பாணம்)*

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2015ஆம் ஆண்டுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சிநெறிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். அந்த வகையில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், நடனம் ஆகிய பாடநெறிகளுக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு,*

## கணிதம் (தமிழ்) விபரம்-2015

பி.லாவண்யா-யாழ்ப்பாணம், பி.கஜானா-கொக்குவில், பாஸ்கர் அகிலா-நாவாந்துறை, ஜே.றெவிற்லா-கொட்டடி, ஆர்.ஆர்.காஸ்டன் டெலீசியஸ்-கொழும்புத்துறை, கே.தர்சிகா-கொழும்புத்துறை,

பி.நளாயினி -கொய்யாத்தோட்டம் , என்.சிவதீ-கொட்டடி, ஜே.நிசான்-உயரப்புலம், பி.ஜிந்துசன்-கொக்குவில், எஸ்.நிறோசினி-நாவலர் வீதி,ரி.சனோகா-நாவலர் வீதி, பி.ஜிந்துஜா-கொக்குவில், ரி.பூங்குழலி -கோண்டாவில், ஜே.கிசோவன்-திருநெல்வேலி, எஸ்.அச்சுதன்-கில்னர்லேன், கே.விஜேந்தினி-கொக்குவில், ஜே.சங்கீதா-ஆறுகால்மடம், ஐ.லோகநாதன்-அரியாலை, எஸ்.டிலோசியா-நல்லூர், வி.ரமணன்-குமரநகர் கைதடி, ஆர்.அகலியா-எழுதுமட்டுவாள், என்.சியந்தினி-கரம்பைக்குறிச்சி, பி.தர்சனா-மீசாலை, ஆர்.சர்மிதா-சங்கத்தானை, தி.மதுங்கன்-சாவகச்சேரி, எம்.சர்மி-உசன், எஸ்.தர்மிகா-உபயகதிர்காமம், எஸ்.சுஜிவா-புலோலி, ரி.சுஜீவன்-பருத்தித்துறை, எஸ்.கோபிகா-புலோலி, எஸ்.துளசி-புலோலி,

ஜே.ஜென்சி-தொண்டைமானாறு, எ.அனுசா-யாக்கரு, பி. பிரசாந்-கரணவாய், ஜி.மயூரி-அல்வாய், என்.விமல்ராஜ்-வன்னியர் கோவிலடி, எஸ். கஜானி-பருத்தித்துறை வீதி, கற்பகப் பிள்ளையார் கோவிலடி, கே.நிரூபா-ஆவரங்கால், ஜே.கயாளினி-கட்டைப்பிராய், கே.நிமலன்-நீர்வேலி, பி.தர்சிகாமைலினி-கோப்பாய், வி.மயூரதி-இருபாலை, கே.தமயந்தி-உரும் பிராய், எஸ்.சோபியா-உரும்பிராய், எல்.ராஜ குமார்-நீர்வேலி, கே.மலியா-தாவடி, எஸ். வேணுகேசன்-உடுவில், கே.ஆனந்த குமாரசாமி-அளவெட்டி, கே.பாலேந்திரன்-ஏழாலை, ஆர்.கிருஸ்னோந்திரா-குப்பிளான், ஐ.அன்ரூஅனோச்-சுன்னாகம், வீ.கங்கா -ஏழாலை, ஆர்.சமந்தி-இணுவில், வீ.சுபாகரி -ஏழாலை, யூ.சயந்தன்-வட்டுக்கோட்டை, எஸ்.தேவயானி-பூம்புகார், எஸ்.சுதர்சன்- சுழிபுரம், என்.தர்மினி-வட்டுக்கோட்டை, எஸ்.மயூரி-காஞ்சிபுரம், எஸ்.சுபாமதி-உயரப்புலம், தி.சஜீவன்-சண்டிலிப்பாய், ஜி.தனுபரன்-மானிப்பாய், எம்.லோகனா-கொல்லங்கலட்டி, எஸ்.கோபிநாத்-மல்லாகம், பி.புஸ்பகாந்தன்-மல்லாகம், பி.பரதன்-தங்கோடை, எஸ்.கேதினி-காரைநகர், ரி.துசிதரன்-பாரதிபுரம், ஜே.கோகிலா-மலையாள புரம், வி.மதுஜீவனா, வன்னோரிக்குளம், வி.தனுசியா-கனகாம்பிகைகுளம், எஸ்.வதனராஜ்-புன்னைநீராவி, பி.கார்த்திகா-கல்மடுநகர், ஜே.டக்சலா-தர்மபுரம், கே.அன்பரசன்-கறுக்காய்தீவு, எஸ்.மயூரன்-வற்றாப்பளை, ரி.ஜென்சன் -சிலாவத்தை, எஸ்.ஆரஞ்சன்-வற்றாப்பளை, எஸ்.நிலானி-சிவநகர், எம்.டிசாந்தினி-இந்துபுரம், எம்.பிரியதர்சினி-அராலி, பி.நிதர்சன்-உனபுலவு.

## விஞ்ஞானம் (தமிழ்) விபரம்-2015

எம்.நீலுகா-கொழும்புத்துறை, பி.அனித்தா-குருநகர், பி.அருள் டெபினா-பாசையூர், ஐ.அருட்பிரகாசம்-அல்வாய், ஆர்.ஆர்-காஸ்டன் டெலிசியஸ்-கொழும்புத்துறை, பி.நளாயினி-கொய்யாத்தோட்டம், ஜே.இ.டொறிசா றொசிலி-யாழ்ப்பாணம், என்.சிந்தூதி-வண்ணார்பண்ணை, பி.வேணுயன்-யாழ்ப்பாணம், எம்.வேணுயா-வண்ணார்பண்ணை, வி.ஆனந்தி-திருநெல்வேலி, எஸ்.சஞ்ஜிவா-கோண்டாவில், தி.உருத்திரகுமாரன்-நீர்வேலி, எஸ்.அச்சுதன்-கில்னர்லேன், ரி.வித்தியா-நல்லூர், சி.தினுசா-கொக்குவில், ஜே.சங்கீதா-ஆறுகால்மடம், பி.துஷ்யந்தன்-நாயன்மார்கட்டு, ரி.தனுசியா-மீசாலை, என்.மிருனிகா-மட்டுவில், பி.கோகிலா -மந்துவில், பி.ஞானநிவஞ்சினி-இடைக்குறிச்சி வரணி, என்.கபிசனா-கைதடி, வி.சங்கீதா -கைதடி, எம்.சர்மி-உஷன், கே.கீர்த்தனன்-உஷன், கே.மதீசாயினி-குடத்தனை, கே.நிசாந்தன்-தாளையடி, வை.பிரசாந்-நாகர்கோவில், என்.சிவானந்தம்-செம்பியன்பற்று, வை.நிசாந்தினி-வரணி, பி.வேணுஜா-செல்வச்சந்நிதி, ஜே.அமல்ராஜ்-தும்பளை, எஸ்.லக்ஷனா-வியாபாரிமூலை, ஜே.ஜென்சி-கெருடாவில் தெற்கு, ஜி.பகீந்துசா-பருத்தித்துறை, எம்.ரம்மியா-வல்வெட்டி, ரி.சரண்யா-வல்வெட்டித்துறை, எஸ்.நடேஸ்-வல்வெட்டித்துறை, எஸ்.சர்மிலா-இருபாலை, பி.சர்மியா-அச்சுவேலி, ரி.சதானந்தசிவம்-பத்தமேனி, வை.துசாயினி-உரும்பிராய்,

பி.தர்சிகாமி லானி-கோப்பாய், எ.பத்மநாதன்-உரும்பிராய், வி.மயூரதி-இருபாலை, எஸ்.மகேஸ்வரதாசன்-அச்சுவேலி, எஸ்.செல்வராஜா-கல்வியன்காடு, ஏ.உமாகரன்-உடுவில் தெற்கு, எஸ்.வேணுகேசன்-உடுவில் தெற்கு, எஸ்.ஜென்சி-ஏழாலை மத்தி, கே.அஜந்தா-தெல்லிப்பழை, யு.நிசாந்தன்-புன்னாலைக்கட்டுவன், எஸ்.நாகராசா-உடுவில், ஆர்.ரஜீதரன்-இணுவில், கே.வினோஜா-வட்டுக்கோட்டை, வை.ஜனோஜி-அராலி, எஸ்.சிவானி-சங்கரத்தை, எஸ்.டினோதினி-வட்டுக்கோட்டை, என். அஜித்தா-வட்டுக்கோட்டை, கே.உலக்சினி-சண்டிலிப்பாய், கே.நளாயினி-மாதகல், எஸ்.விதசொரூபி-நவாலி, பி.சுகன்யா-சுதுமலை தெற்கு, எஸ்.தர்மிகா-சுதுமலை வடக்கு, எம்.கிருசாயினி-இளவாலை,

கே.கனகரத்தினம்-மாவிட்டபுரம், ஆர்.கஜாயினி-வேலணை, ரி.துசிதரன்-பாரதிபுரம், ரி.கார்த்திகா-கிளிநொச்சி, எஸ்.இந்துசியா-அம்பாள்குளம், பி.கார்த்திகா-கல்மடுநகர், கே.அன்பர சன்-பூநகரி, வீ.மயூரதி-பல்லவராயன்கட்டு, எல்.கயூசனா-முள்ளிய வளை, ரி.ரம்சியா-சங்கத்தானை, எம்.பிரியதர்சினி-அராலி, பி.நிதர்சன்-முல்லைத்தீவு.

## சங்கீதம் (கர்நாடகம்) விபரம்-2015

எப்.கிறிஸ்ரிகா-பாசையூர், எ.ஜெனிற்றா-குருநகர், ஜே.ஐ.ஜெராட் நிதர்சினி-குருநகர், கே.மனோஜனா-கொட்டடி, எல்.எம்.யூலியட் கிருசாந்தி-யாழ்ப்பாணம், கே.கௌதமி-திருநெல்வேலி, ஜீ.சனோசிலியா-கொழும்புத்துறை, ஆர்.கார்த்தியாயினி-நல்லூர், சி.ஜெலுக்சி-கல்வியங்காடு, ஜே.குணசேகரன்-கொக்குவில் கிழக்கு, எஸ்.தினேசிகா-மீசாலை மேற்கு,

கே.பாமினி-மிருசுவில், ஆர்.ஜெயவித்தியா -மிருசுவில், ஆர்.கிருயா-சாவகச்சேரி, பி.நிந்துசா-வரணி, எஸ்.கீர்த்தனா-மிருசுவில், பி.நிறோஜினி-வேலணை மேற்கு, கே.கிருபதோயினி-கொடிகாமம், எஸ்.யோகேஸ்வரன் -ஊர்காவற்றுறை, வை.நிசாந்தினி-அனலைதீவு, என்.சுபேசன்-உடுத்துறை வடக்கு, ஜே.ஜெயலின்-குடத்தனை கிழக்கு, என். பிரதீபா-அம்பன், கே.சோமசுந்தரம்-செம்பியன்பற்று தெற்கு, கே.கெங்காதேவ்-கொருடாவில் தெற்கு, எ.மேரி றஞ்சனா-பொலிகண்டி, எ.சுபாந்தி-தும்பளை, எம்.இந்துஜா-பருத்தித்துறை, எம்.ரவிச்சந்திரன்-கற்கோவளம், ஜே.ரூபிகா, நாவலடி, ஜே.நிலாஜினி-இமையாணன் கிழக்கு, ரி.சர்மிலா-அல்வாய் கிழக்கு, ரி.தேவசுயா-கரணவாய் மேற்கு, கே.சாதனா -துன்னாலை தெற்கு, என்.தமிழ்செல்வி-அச்சுவேலி வடக்கு, ரி.நிசாந்தினி, நீர்வேலி தெற்கு, எஸ்.கோகுலராம்-உரும்பிராய் கிழக்கு,

கே.ஜனனிகா-நீர்வேலி தெற்கு, ஆர்.கம்சிகா- அச்சுவேலி மேற்கு, எஸ்.துவாரகா-உடுவில் கிழக்கு, என்.சிறிதரன்-கந்தரோடை, ரி.கபிதா-ஏழாலை, எம்.கஜீபா-ஊரெழு வடக்கு, எஸ்.சோபிதா-திருநெல்வேலி, கே.சுதந்தினி -தொல்புரம் கிழக்கு, ரி.ஜெனிஸ்ரனா - அராலி வடக்கு, எஸ்.கீர்த்தனா-அராலி தெற்கு, ஜே.சாருஜா-அராலி தெற்கு, கே.மாசிலாமணி-மூளாய் தெற்கு,எஸ்.சுபாகரி-சுதுமலை தெற்கு, ஜே.டெல்சி-இளவாலை, என்.சுகனியா -பண்டத்தரிப்பு, எம்.தர்சனா-பண்டத்தரிப்பு, ஜே.டிலீப்குமார்-அளவெட்டி மத்தி, எஸ். ராஜினி -சுதந்திரபுரம், வி.லக்சனா-உரும்பிராய் வடக்கு, கே.பிறேமினி-தெல்லிப்பழை, ஏ.சுஜீபன்-கீரிமலை, ரி.கார்த்திகா-வேலணை கிழக்கு, என்.ஜெயநிஷா-வேலணை கிழக்கு, வி.பிரியங்கா-வேலணை கிழக்கு, என்.தர்சனா-வேலணை மேற்கு, கே. தனச்செல்வி-நயினாதீவு, ஆர்.கிரிசா-காரைநகர், ரி.ஆரணி-மணற்பிட்டி, எஸ்.கேசினி-பயரிகூடல், கே.விஜயரட்ணம்-வாரிவளவு, ஆர்.நிசாந்தன்-களபூமி, கே.பஞ்சாட்சரம்-ஸ்கந்தபுரம், என்.கிருஸ்ரிகா-அக்கராயன்குளம், ஆர்.கீர்த்தனா-இரர்மநாதபுரம், எஸ்.தர்மினி-ஜெயந்திநகர், சுபாங்கி-இராமநாதபுரம், ஜே.தர்சிகா-கல்மடுநகர், பி.ஜெயந்தினி-உழவனூர், ஆர்.பவித்ரா - முரசுமோட்டை, எஸ்.நிரோஜினி-கண்டாவளை, எஸ்.சண்முகராசா-புளியம்பொக்கணை, எம்.சுவேதா -எழுதுமட்டுவாழ், வி.சரண்யா-பளை, ரி.நித்தியா-பளை, கே.ஜெயந்தினி-பூநகரி,ரி. தர்சினி- பூநகரி, வி.துயித்தா -பூநகரி, பி.புஸ்பலதா-பூநகரி, எஸ். லக்சலா-பூநகரி, எம்.வி.சிறைவா-மன்னார்,

ஆர். பிரியதர்சினி-தலைமன்னார், ஜே.நிரோஜினி -மன்னார், என்-முகம்மது - மன்னார், எம்-ஹிந்துஜா-மன்னார், எஸ். மேரி சுபானியா- மன்னார், எம்.விக்னேஸ்வரி-மன்னார்.

## நடனம் (பரதநாட்டியம்) விபரம்-2015

பி.நளாயினி-குருநகர், எம்.கஜிபனா-கொக்குவில் மேற்கு, லக்ஷனா-கொக்குவில் மேற்கு, லியானி-அரியாலை, ஜே.கார்த்திகா-அரியாலை, வி.வினோதினி-கோண்டாவில், பி.சசிகலா-கொடிகாமம், எஸ்.கீர்த்தனா-பாலாவி தெற்கு, எஸ்.சிவதர்சினி-சாவகச்சேரி, ஆர்.வேணுகா-நாவற்காடு, என்.கார்த்திகா-கரம்பைக்குறிச்சி கிழக்கு, ஏ.தீவிஷா-அனலைதீவு, மேரி ஆன் டிவிஷா-பருத்தித்துறை, எஸ்.கஸ்தூரி-புலோலி தெற்கு, ஆர்.வித்தியா-பருத்தித்துறை, ஆர்.வைஷ்ணவி-கரவெட்டி, எஸ்.சுபேக்கா-வல்வெட்டி, வை.கௌசிகா-கரவெட்டி, எஸ்.சாலினி-வல்வெட்டி, வி.கனகரட்ணம்-அல்வாய் கிழக்கு, எம்.மகிந்தா-கோப்பாய் தெற்கு, பி.கீர்த்திகா-நீர்வேலி தெற்கு, என்.மதுஷா-உடுவில் கிழக்கு, யு.சிவம்-இணுவில் தெற்கு, எஸ்.ராதிகா-இணுவில் தெற்கு, ஜே.தர்சிகா- உடுவில் கிழக்கு, ஆர்.ரவீந்திரன் -உடுவில் தெற்கு, கே.தனுஷா -மூளாய் தெற்கு, எம்.அருந்தமிழ்ச்செல்வி-வட்டு வடக்கு, எம்.றொசானி-தொல்புரம் மேற்கு, எம்.பிரதீபா-மூளாய் தெற்கு, எஸ்.மதிவாணி-சண்டிலிப்பாய், ஏ.குணேந்தினி-உயரப்புலம், யு.திவ்யா-மானிப்பாய், எஸ்.கீர்த்தனா-சங்கானை, என்.சஸ்மிதா-மானிப்பாய், கே.திகழ்யா-மல்லாகம், எஸ்.சுவேனியா-கீரிமலை, எஸ்.கிருஷ்ணவேணி-இளவாலை, எம். திபக்சனா-அளவெட்டி தெற்கு, ரி.றேணுகா-அளவெட்டி வடக்கு, எஸ்.ரிசாந்தினி-புங்குடுதீவு, ரி.விதுசா-வேலணை மேற்கு, என். நாகசிந்துஜா-ஆயிலி, ரி.மயூரி-காரைநகர், ஜே.நர்மதா-வட்டக்கச்சி, எஸ்.பிரமீரா-வட்டக்கச்சி, பி.யசோதனா-திருவையாறு, ரி.தக்சயா-கனகாம்பிகைக்குளம், வை.நிரோஜினி-வட்டக்கச்சி, ஏ.டிலக்ஷி-புலோப்பளை கிழக்கு, வி.சிந்தாதேவி-பூநகரி, எஸ்.வனலகி-பூநகரி, எஸ். மகிந்தினி-பூநகரி, கே.தனுசியா-முள்ளியவளை, எம்.தாரகா-முள்ளியவளை, பி.ரோகினி பிரியா -புகழேந்திகர், ஏ.அனோஜா-புதுக்குடியிருப்பு, யு.ராஜ்குமாரி-வட்டக்கச்சி, ஜே.றம்சியா -புதுக்குடியிருப்பு, கே.நிரோஜா-உடையார்கட்டு தெற்கு, எஸ்.சுதாயினி-ஆனந்தபுரம், எஸ்.வேணுகா-கற்சிலைமடு.

# சதொச அதிகாரிகளை பணிநீக்க உத்தரவு

கூட்டுறவு மொத்த வர்த்தக கூட்டுத் தாபனத்தில் (சதொச) இடம்பெற்றதாகக்கூறப்படும் மோசடி தொடர்பிலான விசாரணைகளுக்கு முறையற்ற விதத்தில் அழுத்தங்களை கொடுக்கும் உயர் அதிகாரிகள் 6 பேரை உடனடியாக பணிநீக்கம் செய்யுமாறு பாரிய ஊழல் மற்றும் மோசடி விசாரணை தொடர்பான ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

பாரிய ஊழல் மற்றும் மோசடி விசாரணை தொடர்பான இந்த ஆணைக்குழு தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணை அறிக்கையை பெற்றுக் கொள்ளும் போது தேவையற்ற தாமதம் நிலவுவதாகவும், செயற்பாடற்ற நடவடிக்கைகள் முன்னெடுப்பதாகவும் ஆணைக்குழுவிற்கு தகவல்கள் கிடைத்தமையினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபபடுகின்றது. (இ-7-10)


## வாடகைக்கு

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554 A, 554 B, 554 C எனும் இலக்கமுடைய கடைகள் வாடகைக்கு விடப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும்

தொடர்புகளுக்கு :- நா.தயாளன்
இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2225)



## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:18சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5’7”<br>தகைமை/தொழில்:BA/அரச தொழில்<br>தொ.இ: B/5173 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 57செவ் 57 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/<br>தொழில்:ஆயுள்வேதவைத்தியர்<br>தொ.இ: G/2868 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 24<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:BSC/<br>பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5174 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 28செவ் 7 இல<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:BA/வங்கியாளர்<br>தொ.இ: G/2907 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 38செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5175 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 36 3/4செவ் 12 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BA/ அரச தொழில<br>தொ.இ: G/2913 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 59செவ் 8 இல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:A/L/<br>அரசதொழில்<br>தொ.இ: B/5177 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 36<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:B.COM/அரசதொழில<br>தொ.இ: G/2915 |


## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## சிறீரங்கம் ரெக்ஸ்




சிறீரங்கம் ரெக்ஸில்
தீபாவளி தினம் மற்றும்
5ம் ஆண்டு நிறைவு நாளை
முன்னிட்டும்
25.10.2015ல் இருந்து தீபாவளி தினம்
வரை புதிய மொடல் கொட்டன், நெற்சல்வார்,
பட்டுக்கூறை, கொட்டன் சாறி, பட்டுசாறி,
பான்சி சாறி வகைகள், சல்வார் துணிவகைகள்,
Tops, ஸ்கேட், பிளவுஸ் ஆண்களுக்கான
அனைத்து வகை ஆடைத்
தெரிவுகளையும் விசேட விலைக் கழிவில்
பெற்றுக் கொள்வதுடன்




உடுப்பிட்டி சிறீரங்கம் ரெக்ஸிலும் நெல்லியடி சிறீரங்கம்
ரெக்ஸிலும் 5000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு
செய்வோரில் 20 பேருக்கு 5000 ரூபா பணப்
பரிசாகப் பெற்று தீபாவளி தினத்தை
மகிழ்ச்சியோடு கொண்டாடுங்கள்.
(5000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு
தடவையும் ஒவ்வொரு சந்தர்ப்பமாக கொள்ளப்படும்)
(பெற்றோல் செற் Boys & Gents பஷன்
நேஷன்ரஸ்ட் பாங் அருகில் மாற்றப்பட்டுள்ளது)
இடம்:-தீபாவளி அன்று 3.00 மணிக்கு
நெல்லியடி சிறீரங்கம் ரெக்ஸில்

வதிரி வீதி,
உடுப்பிட்டி.
021 373 7455

யாழ்.றோட்
நேஷன்ரஸ்ட் பாங் அருகில்
நெல்லியடி

(சி-2608)


## ராசி பலன்

7.11.2015
(ஐப்பசி 21, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 3.50 மணிவரை
உத்தரம் முழுவதும்
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம்<br>பகல் 11.11 இற்கு<br>கன்-சந்<br>மேல்நோக்கு நாள் | | |
| | | | குரு<br>சந் |
| | சனி | சூரி<br>புத | ராகு<br>செவ்<br>சுக் |

**மேடம்** மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேக நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**இடபம்** மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**கடகம்** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முற்படுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுப செய்திகள் இல்லம் வந்து சேரலாம், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்புண்டு.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில்நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அந்நியதேசத் தொடர்புகள் நன்மைதரும்.

**தனுசு** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், குடும்ப ஒற்றுமை கூடும்.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்** வேலைகள் உடனுக்குடன் முடிய மல் தாமதமாகலாம், நல்லவர் எ நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம் குடும்ப பொறுப்புக்கள் கூடும்.

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

## யாழில் தீவகங்களை முன்னுரிமையாகக் கொண்டு

# மழைநீரை சேகரிக்க ஆயிரம் தொட்டிகள்

## அரச அதிபர் தகவல்



(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு ஆயிரம் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் தீவகங்களை முன்னுரிமையாகக் கொண்டு அமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் தொலைநோக்கு சிந்தனையின் கீழ் மழை நீர் சேமிப்பு திட்டத்தின் கீழ் வேலணை சரவணை பகுதியிலுள்ள ஒருவருடைய வீட்டில் மழை நீர் சேமிப்பு தொட்டி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளில் குறிப்பாக தீவகத்தில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு மிகவும் தட்டுப்பாடாக இருந்தது. இந்தப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக வடக்கு மாகாண ஆளுநர் எங்களிடம் சில திட்டங்களை கேட்டிருந்தார். இங்கு என்னென்ன திட்டங்கள் தேவை, அவற்றை எவ்வாறு செயற்படுத்தல் போன்றவை தொடர்பில் ஏற்கனவே ஆளுநருக்கு நாங்கள் வழங்கியுள்ளோம்.

இதன் அடிப்படையில் ஆளுநர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் முயற்சியினால் இத்திட்டம் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இம் மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் முதற்கட்டமாக ஆயிரம் தொட்டிகளை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிகளான வேலணை, ஊர்காவற்றுறை போன்ற பல இடங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை என்பது அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் மக்கள் பல நீண்ட தூரங்கள் குடிதண்ணீருக்காக செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்நிலை கோடை காலங்களில் மிகவும் கஷ்டமாக காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

ஆகையினால் இத்திட்டம் என்பது இங்குள்ள மக்களுக்கு மிகவும் பிரயோசனமான ஒன்றாக காணப்படும் என்பதில் சந்தேகமில்லை. மழை நீரினை குடிநீராக்கி சாதாரண போத்தல் தண்ணிக்கு நிகராக இந்த தண்ணீர் அமையும் என்பதாக மேற்படி திட்டத்தினர் கூறுகின்றனர்.

முதற்கட்டமாக ஐம்பது தொட்டிகள் அமைக்கப்படும், பின்னர் தொடர்ச்சியாக ஏனைய தொட்டிகள் அமைக்கப்படும். இதை உரிய வகையில் அனைவரும் பயன்படுத்த வேண்டும். மிகவும் பிரயோசனமான இத்திட்டம் வெற்றி பெறுவதற்கு இங்குள்ள அனைத்து மக்களும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். உங்களின் ஆதரவு இருந்தால் தான் இத்திட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும்.

இதன் அடிப்படையில் வேலணைக்கு இருநூறு தொட்டிகளும் ஊர்காவற்றுறைக்கு இருநூறு தொட்டிகளும் மருதங்கேணிக்கு ஐம்பது தொட்டிகளும் என தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவ் ஒதுக்கீடுகளின் அடிப்படையில் முதற்கட்டமாக வேலணையில் ஆரம்பித்து வைக்கும் திட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனை அமைப்பதற்கு இங்குள்ள தொழிலாளர்களே பயன்படுத்தப்பட உள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## கலா சங்கமம்

தீபாவளி தினத்தை முன்னிட்டு யாழ்.இந்தியத்துணைத்தூதரகம் வழங்கும் கலா சங்கமம் எனும் தீபாவளி சிறப்பு கலை நிகழ்ச்சி எதிர் வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீபாவளி தினத தன்று பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் கலந்து கொணடு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

## பெரஹர நிகழ்வு

யாழ்.ஸ்ரீநாக விகாரை சர்வதேச பௌத்த மத்தியஸ்தானத்தில் வருடந்தோறும் நடைபெற்று வரும் கட்டின பெரஹர நிகழ்வு இன்று சனிக கிழமை மாலை 6.30 மணிக்கு துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறும். விளையாட்டு மைதானதில் ஆரம்பமாகும் இக் கட்டின பெரஹர விகாரையை வந்தடையும் பௌத்த மற்றும் இந்து மத, வடக்கு மற்றும் தெற்கு கலாசார நடனங்களுடன் யானை ஒன்றும் பயணிக்கும் இந்த அலங்காரமான பெரஹர நிகழ்வானது காங்கேசன் துறை வீதி வழியாக வைத்தியசாலை வீதியை அடைந்து அங்கிருந்து வேம்படிச் சந்தி சென்று அங்கிருந்து பலாலி வீதி ஊடாக விகாரை வரை சென்றடையும். (இ-5)




## 19 இந்திய மீனவர்களுக்கும் 3வது முறையாகவும் மறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 19 இந்திய மீனவர்களையும் 3ஆவது முறையாக எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா நேற்றைய் தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்றைய தினம் வரை 2தடவைகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்றைய தினம் 3 ஆவது முறையாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(இ-9)

## திருமறைக் கலாமன்றத்தின் கார்த்திகை மாத பொற்தூறல்

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற 'பொற்தூறல்' நிகழ்ச்சித் தொடரின் இம்மாதத்துக்கான நிகழ்வு 'கார்த்திகைத்திங்கள் பொற்தூறல்' என்னும் பெயரில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு, இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித் துறை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்ச்சிகளாக திருமறைக்கலாமன்ற இளையோர் அவை வழங்கும் நாட்டார் பாடல்களும், நல்லைக் கலா மந்திர் நடனாலய மாணவிகள் வழங்கும் "நிருத்தியாஞ்சலி" நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலையார்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.(இ-7-10)

## மழைநீர் சேமிப்புத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வேலணையில்





(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தொலைநோக்கு சிந்தனையின் அடிப்படையில் மழை நீர் சேமிப்பு திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் காலை 9 மணியளவில் வேலணை சரவணை பகுதியிலுள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மேற்படி இடத்தில் மழை நீர் சேகரிப்பிற்கான தொட்டி ஒன்று அமைப்பதற்கான அடிக்கல்லே நேற்றைய தினம் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. இதனை வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.பளிககக்கார நாட்டி வைத்துள்ளார்.

குறித்த திட்டம் தென்னிலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி திட்டம் வடக்கிலும் செயற்படுத்தும் முகமாக யாழ். மாவட்டத்திற்கு ஆயிரம் மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைப்பதற்கு முதற்கட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வேலணைக்கு இருநூறு தொட்டிகளும், ஊர்காவற்றுறைக்கு இருநூறு தொட்டிகளும், மருதங்கேணிக்கு ஐம்பது தொட்டிகளும் என தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவ் ஒதுக்கீடுகளின் அடிப்படையில் முதற்கட்டமாக வேலணையில் ஆரம்பித்து வைக்கும் திட்டம் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் அமைக்கப்படும் ஒவ்வொரு தொட்டிக்குமான செலவுகள் தலா 76 ஆயிரம் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொட்டிகள் அமைப்பதற்கு வடக்கினை சேர்ந்த மேசன் தொழிலாளர்களே பயன்படுத்தப்பட உள்ளதாகவும், அவர்களுக்கான பயிற்சிகளை எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் வேலணை பிரதேச சபையின் செயலாளர் திருமதி ம.மஞ்சுளாதேவி, நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வெளிக்காட்டும் உண்மைகள்

இலங்கையில் தேசிய ரீதியில் பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வியின் தரத்தை மதிப்பிட, இன்றைய காலகட்டத்தில் பரீட்சைத் திணைக்களத்தினால் மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைகளே கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பாடசாலைக் கல்வியின் தரத்தை மதிப்பிடுவதற்கு தேசிய பரீட்சைகளை மட்டுமே பயன் படுத்துவது தொடர்பில் கல்வியி யலாளர்கள் மத்தியில் பல்வேறு நிலைப்பட்ட விமர்சனங்கள் காணப்பட்டாலும், இன்று வரை பரீட்சைப் பெறுபேறுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளையோ, வலயங்களையோ, மாகாணங்களையோ மதிப்பிடும் ஒரு நிலை வலுப்பெற்றதாகவே இருக்கின்றது.

இருந்தனர். இவர்களில் 2 ஆயிரத்து 148 பேர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்றிருக் கின்றனர். இது தோற்றிய வர்களில் 11.38 வீதமாகும். மாகாண மட்டத்தில் இப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில்



முதலிடம் பெற்றுள்ளது. நடைபெற்ற இந்த புலமைப்பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் தோற்றிய மாணவர்களுள், அதிக வீதமான மாணவர்களை வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள வைத்த வலயங்களினது மதிப்பீட்டிலும் வலயங்களில் முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களை எமது வட மாகாண வலயங்கள் தமதாக்கிக் கொண்டிருப்பது மகிழ்ச்சி அடையக்கூடிய ஒரு விடயமே. இது தொடர்பில் நான் இந்த இரு வலயங்களினதும் உரிய அதிகாரிகளையும், அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி நிற்கின்றேன்.

இப்பரீட்சை தொடர்பில் நாம் இன்னுமொரு விடயத்திலும் கவனத்தைக் குவிக்க வேண்டிய தேவை உள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றி, தோற்றிய ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 35 புள்ளிகளையாவது பெறத்தவறிய மாணவர்கள் தொடர்பாகவே நாம் எமது கவனத்தை குவிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு



**இ.இரவீந்திரன்,**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார
அமைச்சு,
வடமாகாணம்.

சவால்களை உருவாக்கி விடுவ தாக, பல பிரச்சினைகளை தோற்றுவித்து விடுவதாக அமையலாம். எனவே இந்

## வடமாகாணம் முதலிடம் பெற்றுள்ளது

குறிப்பாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. (சாதாரணதரப் பரீட்சை), உயர்தரப் பரீட்சை என்பவற்றின் பெறுபேறுகளை வைத்து கல்வியின் அடைவுத் தரத்தை அளவிடல் தவிர்க்க முடியாதவாறு இன்று முக்கியம் பெற்றிருக்கின்றது. எனவே



நாமும் எமது மாகாணத்தினதும் வலயங்களினதும் பாடசாலைகளினதும் கல்வித் தரத்தை அளவிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் இவற்றையே அடிப்படையாகக் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வருடம் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை நாம் ஆராயும் போது இப்பரீட்சை வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் புள்ளிகளை பெற்ற மாண வர்களது வீதத்தைப் பார்க்கும் போது நாம் அனைவருமே மகிழ்ச்சியடையக்கூடிய விடயம் யாதெனில் இப்பெறுபேற்றில் வடமாகாணம் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றிருப்பதாகும்.

வட மாகாணத்தில் இருந்து இப்பரீட்சைக்கு 18ஆயிரத்து 871 மாணவர்கள் தோற்றி

கூடிய வீதமானவர்களை வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற வைத்த மாகாணம் என்பதில் தேசிய ரீதியில் வட மாகாணமே முதலிடத்திலுள்ளது.

10.64 வீதத்தை சப்ரகமுவ மாகாணம் இரண்டாவது இடத்திலும் 10.42 வீதத்தைப் பெற்று தென் மாகாணம் 3 ஆவது இடத்திலும் உள்ளன.

2015இல் நடைபெற்ற இந்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வடமாகாணம் இவ்வாறு முதலிடத்தைப் பெற்றுக் கொள்ள தமது அர்ப்பணிப்புணர்வுடன் கூடிய சேவைகளை வழங்கிய மாகாண, வலய அதிகாரிகள் மற்றும் அதிபர்கள், இம் மாணவர்களிற்கு கற்பித்த பெருமைக்குரிய ஆசிரியர்கள், பல்வேறு விதமான தியாகங்களை புரிந்து, பல இழப்புக்களை எதிர்கொண்டு இப் பரீட்சையை எழுதிய மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட அனைவரையும் நான் பாராட்டி நிற்கின்றேன். நன்றிகளைத் தந்து நிற்கிறேன்.

தேசிய மட்டத்திலும் வலய ரீதியிலும் யாழ்ப்பாண வலயம் தேசிய ரீதியில் யாழ்ப்பாண வலயம் முதலாவது இடத்தையும், வடமராட்சி வலயம் இரண்டாவது இடத்தையும் பெற்று, எமது மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளன.

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளிலிருந்து இப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 525 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளிற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 18.16 வீதமாகும். இதே போன்று வடமராட்சி வலயத்தில் இருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களில் 293 பேர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றிருக்கின்றனர். இது இப் பரீட்சைக்கு இவ் வலயத்திலிருந்து தோற்றிய மாணவர்களில் 16.34 வீதமாகும்.

தேசியரீதியில், வலய அடிப்படையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களது எண்ணிக்கையில் உயர்வான வீதத்தைக் காட்டி நிற்கும் பாடத்திலும் 35 புள்ளிகளுக்கு மேல் பெற்றதனூடாக மொத்தப்புள்ளி 70 க்கு மேல் பெற்ற மாணவர்களது வீதத்தில் முதலிடத்தில் நிற்க வேண்டிய வலயம் உள்ளது. இவ் வலயத்திலிருந்து இப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 88.84 வீதமான மாணவர்கள் 70க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இத்தகைய அளவீட்டின் அடிப்படையில் எமது மாகாணத்தின் வலயங்கள் 77.69 வீதத்திற்கும் (யாழ்ப்பாண வலயம்), 54.74 வீதத்திற்கும் ( மடு வலயம் ) இடைப்பட்ட வீத அளவுகளையே பெற்றிருக்கின்றன.

வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி பற்றி அக்கறை கொள்ளும் அனைவரையுமே கவலைப்படச் செய்யும் ஒரு விடயமாக இந்த கணிப்பீடுகள் அமைந்திருக்கின்றன. யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வுவுனியா தெற்கு ஆகிய வலயங்களில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அண்ணளவாக நான்கில் ஒரு பங்கு மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் 35 புள்ளிகளையாவது பெற்றுக்கொள்ளத் தவறியுள்ளனர். இதேவேளை மன்னார், முல்லைத்தீவு, வலிகாமம், வவுனியா வடக்கு, தீவகம், கிளிநொச்சி ஆகிய வலயங்களில் இது ஏறக்குறைய அரைப்பங்கு என்ற அளவில் காணப்படுவ தையும் அவதானிக்க முடிகிறது.

இந்த நிலைமை ஆரோக்கியமானதாக இல்லை. இவ்வாறான நிலைமை தொடருமாக இருப்பின் அது எதிர்கால எமது சமூக, பொரு ளாதார நிலைமைகளில் மட்டு மன்றி கலாசார, பண்பாட்டு, விழுமிய நிலைகளில் கூட பலத்த நிலையினை மாற்றி அமைக்க, இத்தகைய தாக்கத்தை குறைக்க நாம் அனைவருமே பொருத்த மான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதோடு, அவற்றை நடைமுறைப்படுத்தவும் முன்வர வேண்டும்.

ஏனெனில் இன்று எம்மிடம் உள்ள ஒரேயொரு வழி கல்வியால் முதன்மை பெறுவ தென்பது மட்டுமே. இதற்கு ஏற்றதான செயற்பாடுகளை திட்ட மிட்டு முன்னெடுப்பதனூடாக ஒவ்வொரு ஆரம்பப்பிரிவு பாட சாலையுமே தன்னிடம் வந்து சேரும் மாணவர்களை அந்த அந்த நிலைகளுக்குரிய தேர்ச்சிகளை அடையச் செய்து, அடுத்த நிலைக்கு அனுப்புவதை உறுதி செய்து கொள்வது மிக மிக முக்கியமானதாகும். அத்துடன் பிரதானமாக முதன்மை நிலை ஒன்றில் இருந்து, முதன்மை நிலை இரண்டிற்கு செல்லும் பிள்ளைகள் எழுத, வாசிக்க தெரிந்தவர்கள் என்பதை உறு திப்படுத்துவது அவசியமாகும்.

அதுமட்டுமன்றி இவ்வருடம் தரம் 5 இலிருந்து 2016 இல் தரம் 6 இற்கு உள்வாங்கப்படும் இத்தகைய மாணவர்கள் தொடர்பில் அவர்களது உடல்,உள ஆரோக்கியம் தொடர்பிலான கரிசனை யினையும் இப் பிள்ளைகள் உள்வாங்கப் போகும் பாட சாலைகள் முதன்மைப்படுத்தி கவனிப்பதோடு, இம் மாணவர்கள் அவரவர்களுக்குரிய அடிப்படை தேர்ச்சிகளை அடையச் செய்யவும், எழுத, வாசிக்க கூடியவர்களாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வ தற்குமான பொருத்தமான செயற்பாடுகளை செயற்படுத்தவும் முன்வரல் வேண்டும்.

# பாரம்பரிய நெல்லினங்களை பாதுகாப்பதற்கு விவசாயிகளுக்கு இலவச விதைநெல் விநியோகம்

## முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய நெல்லினங்களை அழிவுகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஆயிரத்து 435 ஏக்கரில் மொட்டைக் கறுப்பன், சீனட்டி, பச்சைப் பெருமாள் ஆகிய நெல்லினங்களை பயிரிடுவதற்கு விண்ணப்பித்த விவசாயிகளுக்கு இலவசமாக ஏக்கர் ஒன்றிற்கு தலா 30 கிலோ நெல் வீதம் 43 ஆயிரத்து 50 கிலோ விதை நெல் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் கமநல சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். விஜயகுமார் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய நெல்லினங்களை அழிவிலிருந்து பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் இயற்கை பசளைகள் மற்றும் இயற்கை பூச்சி நாசினிகளை பயன்படுத்தி நெல் இனத்தை பயிரிடுவதற்கு ஆர்வம் காட்டி விண்ணபித்த விவசாயிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் 270 ஏக்கரிலும் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 165 ஏக்கரிலும் நெல் பயிரிடுவதற்குரிய விதை நெல் இலவசமாக வழுங் கப்படுகின்றது.

இதில் மூன்று மாத இனமான பச்சைப் பெருமாள், சீனட்டி ஆகிய நெல்லினங்களும் 3 1/2 மாதங்கள் கொண்ட மொட்டைக் கறுப்பன் நெல்லினமும் வழங்கப்படுகின்றது.

அத்தோடு இயற்கை கிருமிநாசினி ஏக்கருக்கு ஒரு லீற்றர் வீதமும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

ஒரு விவசாயி ஒரு ஏக்கர் தொடக்கம் 10 ஏக்கர் வரை நெல் பயிரிடுவதற்குரிய விதை நெல், கிருமிநாசினி என்பன இலவசமாக வழங்கப்படும்.

அறுவடையின் பின்னர் விவசாயியிடம் இருந்து கிலோ 60 ரூபா படி நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## மானிய உர விநியோகம்

(மல்லாவி)

துணுக்காய் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட நீர்ப்பாசன குளங்களின் கீழ் மானாவாரியாக நெல் பயிரிட்ட மல்லாவி, திருநகர், சாலம்பன், யோகபுரம் மத்தி, அம்பளப் பெருமாள் குளம், பழைய ம்றிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் வைத்து மானிய உர விநியோகம் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார். (2-15)



இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் கிளிநொச்சி இளைஞர் சேவை மன்றத்தில் இருந்து பளை, கண் டாவளை, பூநகரி, கரைச்சி ஆகிய 4 பிரதேச செயலகங்களுக்கும் நேற்றையதினம் எடுத்துச் செல்லப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட தேர்தல் தொகுதியில் 3 ஆயிரத்து 747 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதோடு 9 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-பொ.சோபிகா)

## 10 இந்திய மீனவர்களுக்கும் 18ம் திகதி வரை விளக்கமறியல்

(கிளிநொச்சி)

கடற்படையினரின் ரோந்து படகை சேதப்படுத்தியதாக கூறி நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜ.வஹாப்தீன் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 2 படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 19 இந்திய மீனவர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 10 பேருக்கு எதிராக கடற்படையினரின் ரோந்து படகை சேதப்படுத்தியதாக கடற்படையினரால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நீதவான் அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.(2-9)

### இளைஞர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட

## வடக்கு மாகாணத்தில் 56 பேர் வேட்பாளர்களாக களத்தில் குதிப்பு

### வடக்கு மாகாண பணிப்பாளர் தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் 160 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல இன்று சனிக்கிழமை நடை பெறுகின்றது. நாடுமுழுவதிலும் 334 பிரதேச செயலகங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தலில் 657 வேட்பாளர்கள் போட்டியிடத்தகுதி பெற்றுளளனர். இந் நிலையில் வடக்கு மாகாணத்தில் 56 பேர் போட்டியிடவுள்ளதாகவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடக்கு மாகாண பணிப்பாளர் எம்.பி. சரத் சந்திரபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத் தேர்தலின் ஊடாக நாடளாவிய ரீதியில் 160 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். மேலும் 65 பேர் மாற்றுத் திறமைகள் கொண்ட இளைஞர் யுவதிகள், பாடசாலை மாணவ மாணவியர், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த தேர்தலில் வாக்களிப்பதற்கு நாடளாவிய ரீதியில் இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 4,38,400 பேர் தகுதி பெற்றுள்ளதோடு வடக்கு மாகாணத்தில் 29, 535 பேர் தகுதி பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் கண்காணிப்புபணிகள் மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மத்திய நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளதோடு மாவட்ட ரீதியில் வாக்களிப்பு நிலையங்களிலும் கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளனர்.

இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 22வேட்பாளர்களும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 9 வேட்பாளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 8 வேட்பாளர்களும். வவுனியா மாவட்டத்திலிருந்து 5 வேட்பாளர்களும் மன்னார் மாவட்டத்திலிருந்து 12வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் 14 உறுப்பினர்களை தெரிவு செய்ய யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 13719 பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 3747 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 3160 பேரும். வவுனியா மாவட்டத்திலிருந்து 4362 பேரும்.மன்னார் மாவட்டத்திலிருந்து 4547 பேரும் வாக்களிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

## குடியிருப்புக்குள் நுழைந்து யானைகள் அட்டகாசம்

### மூன்று கடைகள் சேதம்

(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணி நைனாமடு பகுதியில் நேற்று முன் தினம் நள்ளிரவில் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்து மூன்று கடைகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளன.

நைனாமடு கரப்புக்குத்தி வீதிக்கு அருகாமையில் இருந்த தேனீர் கடை ஒன்றையும் இரண்டு பலசரக்கு கடைகளின் சுவர்களை உடைத்து பொருட்களை சேதப்படுத்தியுள்ளதாக கடை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது விடயம் தொடர்பாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து சேத விபரங்களை பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை தொடர்ச்சியாக இப்பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகமாக காணப்படுவதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (2-250)

## கிளிநொச்சி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மறுவயற்பயிர் விதைகள் விநியோகம்



வடக்கு மாகாண விவசாய அமைச்சால் மீள்குடியேறிய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும நோக்கிலும், மறுவயற் பயிர்ச்செய்கைகைய ஊக்குவிக்கும வகையிலும மறு வயற்பயிர் விதைகள் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

மாவட்டத்துக்கு 123 பேர்என்ற அடிப்படையில் வடக்குமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் மீள்குடியேறிய விவசாயிகளில் இருந்து 615 பயனாளிகள்தேர்வு செய்யப்பட்டு இததிட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஐயாயிரம்ரூபா பெறுமதியான உழுந்து, பயறு, நிலக் கடலை ஆகியவற்றின் விதைகள் அடங்கிய பொதியோடு மண்வெட்டி, கத்தி ஆகிய உபகரணங்களும் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அபிவிருத்தி நதியிலிருந்து மூன்று மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் இத்தாவில், முகமாலை, வேம்பாடுகேணி, உழவனூர், நாதன்திட்டம்கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 123 விவசாயிகளுக்குமான விதை வழங்கும் நிகழ்ச்சி கடந்த 3ஆம் திகதி வேம்பொடுகேணி சி.சி.த.கபாடசாலையில்இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு விதைப் பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, பிரதிவிவசாயப்பணிப்பாளர்கள்ஜெ.ஜெயதேவி, அ.செல்வராசா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெறாத குடும்பங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி ஒப்படையுங்கள்

## துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்கள் தெரிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் , மாந்தை கிழக்கு ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வாழ்கின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இதுவரை சமுர்த்தி நிவாரணம் கிடைக்காத குடும்பங்கள் தாம் வசிக்கின்ற பகுதி கிராம அலுவலகரிடமுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை பிரதி செய்து பூரணப்படுத்தி எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக தமது பகுதி பிரதேச செயலகங்களில் உள்ள வாழ்வின் எழுச்சி முகாமையாளரிடம் ஒப்படைக்குமாறு மேற்படி மூன்று பிரதேச செயலர்களும் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை அமைச்சிற்குட்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்கி வருகின்றது.

இத் திணைக்களம் நிவாரண உதவிகள் கிடைக்காத குறைந்த வருமானம் பெறுகின்ற உங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் எனும் தலைப்பின் கீழ் விண்ணப்பப் படிவம் ஒன்றை பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அவ் விண்ணப்பப் படிவங்களின் மாதிரியை கிராம அலுவலரின் அலுவலகங்களில் மக்களின் பார்வைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த விண்ணப்பப் படிவத்தில் நிவாரணம் கிடைக்கப் பெறாத பிரதான குடியிருப்பாளரின் பெயர்,முகவரி,தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, மாதாந்த வருமானம், தொலைபேசி இலக்கம், கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்டம் ஆகியவற்றை பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தத்தம் பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள வாழ்வின் எழுச்சி பிரிவின் தலைமை முகாமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதேவேளை தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற அனைத்து குடும்பங்களுக்கும் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகவும் அவர்களும் தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி பிரதேச செயலாளர்கள் கூட்டாக இணைந்து அறிவித்துள்ளனர். (2-15)




# அனுமதியைப் பெற்றபின் கட்டடங்களை அமையுங்கள்

கரைச்சி பிரதேச சபையின் ஆளுமைக்குட்பட்ட திருநகரிலிருந்து ஜெயந்தி நகர் செல்லும் பிரதான வீதி குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியொதுக்கீடான 30 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றது.அதேவேளை குறித்த வீதிக்கான அகழிப்பு வேலைகளும் இடம்பெற்று வருகின்றது.

எனவே மேற்படி வேலைகளின் முன்னெடுப்புகளுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதுடன் இவ் வீதியின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டு வருகின்ற அனுமதியற்ற கட்டடங்களுக்கான வேலைகளை நிறுத்துவதுடன் கரைச்சி பிரதேச சபையின் அனுமதியை பெற்று அமைக்குமாறும் கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் இ.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (2-277)

# அதி முக்கிய வேலைகளுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குக

கரைச்சி பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

கரைச்சி பிரதேச சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் பொதுமக்கள் தமது பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அதிமுக்கிய வேலைகளுக்கான முன்மொழி வுகளை அடுத்துவரும் இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க முடியுமென கரைச்சி பிரதேச சபை செயலாளர் இ.கிருஷ்ணகுமார் தெரி வித்துள்ளார். (2-277)


# முல்லைத்தீவு மாவட்டத்தில் மதுபான பாவனை அதிகரிப்பு

## சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா எம்.பி சுட்டிக்காட்டு

போரின் பின்னர் அதிகளவு மதுபானம் நுகரப்படுவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளாா. அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் மதுபான நுகர்வு அதிகரித்துள்ளது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நூற்றுக்கு 34 வீதத்தில் மதுபான பயன்பாடு அதிகரித்துள்ளது.போர் காரணமாக அழுத்தங்களை எதிர் நோக்கியமை இதற்கான காரணமாக இருக்கக் கூடும். இளை ஞர்கள் மதுபானம் அருந்தப் பழகுவது மிகவும் ஆபத்தானதாகும். வரி வருமானம் அதிகளவில் கிடைக்கும் காரணத்தினால் மது பயன்பாட்டை தடுப்பதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் எடுப்பதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-281)

## பரந்தன்-முல்லை.பிரதான வீதியிலுள்ள

# பாலங்களின் ஒப்பந்தகாலம் முடிவுற்றும் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகவில்லை



வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 பிரதான வீதியில் 11/3, 15/3 ஆகிய இரண்டு பாலங்களின் நிர்மாணப் பணிகள் ஐக்கிய இராச்சிய நிதியுதவியின் கீழ் கடந்த வருடம் மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இவ்விரண்டு பாலங்களையும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் ஒரே தனியார் நிறுவனமே கைச்சாத்திட்டிருந்தது. இதன்படி இதற்கான நிர்மாணப் பணி முடிவுறுத்தப் படவேண்டிய ஒப்பந்தகாலம் 11.02.2014 முதல் 11.11.2014 என வரையறுக்கப்பட்டிருந்தபோதும் ஒப்பந்தகாலம் முடிவடைந்தும் இந்த மாதத்துடன் ஒருவருடம் பூர்த்தியாகும் நிலையில்கூட இப்பாலப் பணிகள் நிறைவு பெறாது காணப்படுகின்றது.

அத்துடன் தற்போதுகூட இப்பாலங்களில் எந்த ஒரு வேலையும் இடம்பெறுவதாக இல்லை. இந்நிலையில் இவ்வீதியூடாக பயணிக்கும் மக்களும் வாகனங்களும் இப்பாலங்களுக்கு சமாந்தரமாக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பாலங்களினூடேயே பயணிக்க வேண்டிய அவல நிலை உள்ளது. எனவே இப்பாலப் பணிகளை விரைவாக முடிவுறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய வழிவகைகள் செய்து உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-302)

# தீபாவளி முற்பணத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா காசோலை வழங்கப்படுகின்றது

## துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தீபத் திருநாளைக் கொண்டாடும் முகமாக சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துணுக்காய் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தீபதிரு நாளை கொண்டாடும் முகமாக விழா முற்பணத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவிற்கான காசோலை வழங்கப்படுகின்றது.

இதேவேளை தீபாவளிக்கு மறுநாளான புதன்கிழமை மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற பாடசாலைகள் தோறும் குறித்த விழா கொண்டாடப்படவுள்ளதோடு, சிறப்பு ஏற்பாடாக ஏ-9 வீதியிலுள்ள திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்திலும் சிறப்பு பூஜை வழிபாடும் மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் வலய ரீதியாக மாணவர்கள் பங்கேற்கும் சிறப்பு நிகழ்வுகளும் இடம் பெறும என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வகுப்பறை கட்டட வசதிகள் அமையப்பெற்றும் ஒன்றுகூடல் மண்டபம் அமைக்கப்படவில்லை

## பெற்றோர் கவலை

கிளிநொச்சி கல்வி வலயத்தின் தேசிய பாடசாலையான முழங்காவில் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒன்று கூடல் மண்டபத்தை அமைத்து தருமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 750 மாணவர்கள் கல்வி பயிலும் இப் பாடசாலையில், மீள்குடியேற்றத்தின் பின்னர் வகுப்பறைக் கட்டட வசதிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், மாணவர்கள் ஒன்றுகூடிநிகழ்வை நடத்தக்கூடிய மண்டப வசதி இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

இதன் காரணமாக பாடசாலையின் சகல நிகழ்வுகளும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்ட பழைய கட்டடத்திலேயே நிகழ்த்தப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் தேசிய பாடசாலையொன்றில் ஒன்று கூடல் மண்டபம் இல்லையென கல்விப் பணிப்பாளரிடமும் பூநகரி கோட்டக் கல்விப்பணிப்பாளரிடமும் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# திருப்புகழ் இன்னிசைக்கச்சேரி

கந்தசஷ்டி விரதத்தினை முன்னிட்டு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் நடத்தும் திருப்புகழ் இன்னி சைக் கச்சேரி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு , சங்க மண்டபத்தில் , நா.சேனாதிராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் சுருதிநாதன் , இசை வாணன், இசை இளவரசன், திருமுறைப் புரவலர், சிம்மக்குரலிசை வேந்தன், சிதம்பரம் இசை மைந்தன் நயினை ப. சிவமைந்தனின் விசேட திருப்புகழ் இன்னிசைக் கச்சேரி நடைபெறும். நிகழ்வின் பிரதம விருந்தினராக சிவநெறிப் புரவலர் சி.ஏ இராமசுவாமி கலந்துகொள்ளவுள்ளார். கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2)

# முதியோர் தின விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தின் முதியோர் தினவிழாவும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சோலைநகர் சேரமான் முனபள்ளி மைதானத்தில் கிராம மூத்த பிரஜைகள் குழுத் தலைவர் அ.நவரத் தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நயினை அன்னை சிவகாமி அறக்கட்டளை நிலைய இயக்குநரும் சிவகாமி கல்வி நிலைய முதல்வருமான சின்னததம்பி மகாதேவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்,கரைச்சி பிரதேச செயலர் பிரிவு முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி ச.காந்திமதி, புதுமுறிப்பு கிராம சேவை அலுவலர் திருமதி ம.பாலகுமாரன, முன்னாள் கிராம அலுவலர் சிசிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தர் திருமதி. சா.ஜோதிராஜ், புதுமுறிப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சி.துஷ்யந்தன், கிளிநொச்சி புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் ர.கண்ணபிரான், கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் ம.உமாசங்கர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-254)


## மோட்டார் சைக்கிள் பெற்றோல் தாங்கியில் சிறுவர்களை ஏற்றிக்கொண்டு செல்லத்தடை

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரகாரம் மோட்டார் சைக்கிள் பெற்றோல் தாங்கியில் சிறுவர்களை ஏற்றிக் கொண்டு செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.துஷார திலங்க ஜெயலால் தெரிவித்தார்.

சிறுவர்களை விபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் குறித்த சட்டம் இலங்கை பொலிஸ் மோட்டார் வாகனச் சட்டத்தின் 158 இன் முதலாவது சட்டம் எனவும் இதனை மீறும் மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு முதலாவது தடவை இறுதி எச்சரிக்கை வழங்க முடியும் எனவும் அதன் பின்னர் அதே தவறை மோட்டார் சைக்கிள் உரிமையாளர் மீண்டும் செய்யும் பொழுது அவருக்கு மோட்டார் வாகனச் சட்டத்தினை மீறியமைக்காக அவருக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனால் மோட்டார் சைக்கிள் பெற்றோல் தாங்கியில் சிறுவர்களை வைத்து கொண்டு செல்லும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் இதனை தவிர்த்து நடக்குமாறு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு வேண்டுகோள் விடுக்கின்றது. (இ-7-10)



# பழைய தவறுகளுக்குத் தண்டனை விதித்து தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது

## திஸ்ஸ அத்தநாயக்க ஆலோசனை

(கொழும்பு)

**பழைய தவறுகளுக்கு தண்டனை விதித்து தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என மைத்திரி அரசாங்கத்துக்கு முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.**



எமது நாட்டில் 30 ஆண்டுகள் போர் இடம்பெற்றது.

போர் இடம்பெறும் போது அனைத்து விடயங்களும் சட்ட ரீதியாக நடைபெறாது. இராணுவத்திற்கோ ஆட்சியாளர்களுக்கோ அல்லது போர் செய்தவர்களுக்கோ தண்டனை விதிப்பதனால் பிரச்சினைகளுககு தீர்வு காண முடியாது. சிங்களம் தமிழ் என்று பேதமில்லை. அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மீளவும் இயங்களை குரோதம ஏற்படாத வகையில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பக் கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென திஸ்ஸ அத்தநாயக்க சிங்கள ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார். (இ-7-10)

## அமைச்சர் திலக் மாரப்பன மீது சரத்பொன்சேகா குற்றச்சாட்டு

பீல்ட் மார்ஷல் சரத் பொனசேகா, சட்டம் ஒழுங்குத் துறை அமைச்சர் திலக் மாரப்பன மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார்.

அவன்கார்ட் கப்பல் சம்பவம் உண்மையாக இருக்குமானால் அது தொடர்பில் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர கோரியுள்ளார்.

சர்வதேச சட்டத்தின்படி ஆயுதக்கப்பல் ஒன்று துறைமுகத்தில் இருந்து 12 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் நங்கூரமிடப்படவேண்டும்

எனினும் அவன்கார்ட் கப்பல் துறைமுகத்திலேயே நங்கூரமிட்டிருந்தது.

எனவே இது சர்வதேச ஒழுங்கை மீறும் செயலாகும் எனக் குறிப்பிட்டுள்ள சரத் பொன்சேகா, பொலிஸாரின் நடவடிக்கை குறித்து சந்தேகம் ஏற்படுமானால் எதிர்காலத்தில் எவ்வாறு அவர்கள் மீது நம்பிக்கை வைத்து செயற்பட முடியும் என்று சரத்பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.(இ-7-10)

## அமைச்சர் மாரப்பனவின் கருத்துக்கு இரண்டு அமைச்சர்கள் கடும் எதிர்ப்பு

சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பனவின் கருத்துக்கு இரண்டு அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அவன்கார்ட் சம்பவம் தொடர்பில் அமைச்சர் மாரப்பன நாடாளுமன்றில் வெளியிட்ட கருத்து, அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது.

ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்களான ராஜித சேனாரட்ன மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அவன்கார்ட் சம்பவம் தொடர்பிலான விடயங்களை மூடிமறைக்க வேண்டிய அவசியமில்லை என தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான விடயங்கள் நடைபெற்றால் நான் அரசியல் ரீதியான தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க அமைச்சரவைக் கூட்டத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை அவன்கார்ட் விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவென்றால் நானும் அரசியல் ரீதியான தீர்மானம் எடுக்க தயார் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



இதனைத் தொடர்ந்து அவன்கார்ட் விவகாரம் குறித்து ஜனாதிபதி, அமைச்சர் மாரப்பனவிடம் விளக்கம் கோரியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரையில் அவன்கார்ட் சம்பவம் தொடர்பில் பேசப்பட்டதனால் வேறு விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

அவன்கார்ட் விவகாரத்தில் ஆளும் கட்சிக்குள் முரண்பாட்டு நிலைமை காணப்படுவதனால் நாமும் இப்போது எதிர்க்கட்சியை போன்று செயற்படத் தொடங்கியுள்ளோம் என அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தனியாக பேசுவதற்கு அமைச்சரவைக் கூட்டமொன்றை நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார். (இ-7-10)

## அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் பதவிநீக்கம்

நல்லாட்சி அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றியவர்களில் ஒருவரான தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக செயற்பட்ட மருத்துவர் நிலந்த சமரசிங்க, கடந்த ஜனவரி தொடக்கம் நல்லாட்சி அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வருவதில் முன்னின்று கடுமையாக உழைத்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணியில் இருக்கும் முக்கியமான அரசியல்வாதிகளுக்கு போதைப் பொருள் வர்த்தகத்துடன் இருக்கும் தொடர்புகளை துணிச்சலாக அம்பலப்படுத்தியிருந்த அவர், போதைப் பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தார்.

தெற்காசிய புலனாய்வு வலையமைப்பு ஒன்றினூடாக போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்கான முயற்சிகளிலும் மருத்துவர் நிலந்த சமரசிங்க பெரும் வெற்றிகளை ஈட்டியிருந்தார்.

இவ்வாறான நிலையில் மருத்துவர் நிலந்த சமரசிங்க எதுவித காரணமும் இன்றி நேற்று முதல் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அமைச்சர் திலக் மாரப்பன இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகர்களின் அழுத்தம் காரணமாக தான் பதவி விலக்கப்பட்டிருக்கலாம் என்று அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருந்தார். (இ-7-10)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் இலங்கை விஞ்ஞான சேவையின் II ஆம் வகுப்பின் பிரதிப் பணிப்பாளர் (உயிர் பல்வகைத் தன்மை) பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகமொன்றிலிருந்து சிறப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். தாவரவியல், உயிரியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதீகவியல், சுற்றாடல் முகாமைத்துவம், சுற்றாடல் பொறியியல், விவசாயம் மற்றும் இலங்கை விஞ்ஞான சேவையின் II ஆம் வகுப்பு உத்தியோகத்தராயிருத்தல் மற்றும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு நேர்முந்திய ஐந்து ஆண்டு காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, "சம்பத் பாய", இல. 82, ரஜமல் வத்தை வீதி, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதிஅல்லதுஅதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல்வேண்டும். மேலதிக தகவல்களை நேற்றைய தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவைப் பிரிவின் பரிசோதகர், III ஆம் தரம் (இல.தொ.சே.) மற்றும் சட்ட வரைஞர், பயிற்சியாளர் (இல. தொ. சே.) இற்காக ஆட் சேர்க்கும் திறந்தபோட்டிப் பரீட்சை பதவிக்கான இலங்கைப் பிரஜைகளிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறு ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தூய கணிதம்/பிரயோககணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் இரண்டு உள்ளடங்கலாக விஞ்ஞானம்/கணிதம் விடயத்திற் குரிய பாடங்கள் மூன்றில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையில் ஒரேஅமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக தாபனம், இல. 28/10, மலல சேகர மாவத்தை, கொழும்பு 07 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும். மேலதிக தகவல்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள்–68

# மரநடுகையும் அதன் முக்கியத்துவமும்





பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இயற்கையை அனுசரித்து அதன் இங்கிதத்தை உணர்ந்ததால் அனைத்து இன்பத்தையும் அனுபவித்து வாழ்ந்து வரலாறாகிய எம்முன்னோர்களைப் பார்த்தாவது நாம் வாழ தலைப்பட வேண்டும். பெரியவர்களின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவர்களின் அனுபவமும் ஆழ்ந்த அறிவும் எமக்கு நல்ல பாடமாகும். அனைத்தையும் கற்றுத் தேர்ந்து விடமுடியாது. வாழ்ந்து காட்டியவர்கள் என குறிப்பிடுவோமே அவர்களை இங்கே முத்தாய்ப்பாக முன்னிறுத்தியிருக்கின்றேன். வாழ்ந்து வரலாறாகியிருக்கும் அவர்களைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல. அனுபவமே நல்லாசான். இயற்கையாக கிடைக்கின்றவற்றை குறிப்பாக சுத்தமான நிறையுணவை உண்பதைத் தவிர்த்து அவசர உணவுக்கலவைகளுக்குள் அதுவும் பரட்டி, உருட்டி, சுருட்டி, வறுத்து, பொரித்து எடுத்து அதனையும் அவசரப்பட்டு திணித்து அதன் பிரதிபலனை பலவிதமான நோய்களாக நாம் கண்டும் அவதிப்பட்டும் இருக்கின்றோம். வயது வேறுபாடின்றி நோய்கள் ஆட்கொள்ளத் தொடங்கியிருக்கின்றது. வைத்தியசாலைக்கு என்றுமே செல்லாத இளவயதினர் ஒருவர் திடீரென்று மாரடைப்பால் காலமாகி விட்டார். என்ன ஏது என்பதற்குள் ஒருவரது வாழ்க்கை அஸ்தமித்து விடுகின்றது. மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் தற்போதுமா இப்படியென்றால் அதில் தான் இவையனைத்தும் அடங்கியிருக்கின்றன. இப்படியாக பலநிகழ்வுகள் தொடராக கேட்க முடிகின்றது. அடிப்படையில் எங்கோ தவறு நிகழ்ந்திருக்கின்றது என்பதை மட்டும் அனுமானிக்க முடிகின்றது. இயற்கையை அது தந்ததை விடுத்து அவசர உலகத்தினும் நாம் பயணிக்க தொடங்கியதாலான பலனிது. அந்த அவசரத்தில் அவசரமாகவே இல்லற வாழ்க்கையையும் முடித்துக்கொள்ள ஆசைப்பட்டுவிடுகின்றோம்.

இத்தாவர சங்கமத்துள் என மணிவாசகப் பெருமான் சிவபுராணத்தில் விழித்திருப்பது தாவரங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றின் அவசியத்தையும் கட்டியங் கூறியிருக்கின்றது. உலக இயக்கத்திற்கு மரங்களின் பயன்பாடு அளப்பரியது. இவ்வகையில் மாகாண விவசாய அமைச்சு காத்திரமான பணியில் இம்மாதம் இறங்கியிருக்கின்றது. விவசாய அமைச்சர் ஐங்கரநேசனின் நீண்டகால கனவும் இதனுள் உள்ளார்ந்திருப்பதனை காணலாம். சுற்றுசூழல் பற்றி பலவிடயங்களை இவர் அறிவு சார்ந்து தொகுத்திருந்தாலும் மரநடு கையை ஊக்கவிக்க பாரியளவில் ஐந்து மாவட்டங்களில் ஐந்து இலட்சம் மரங்கள் என்ற அளவை முன்வைத்து முழுமுயற்சியெடுத்திருப்பது மாகாண அமைச்சின் முக்கிய செயற்பாடாகவே கருதவேண்டும. சொல்லுவது சுலபம் செய்வது கடினம். மர நடுகை என்பது அதி முக்கியமான செயற்பாடாக எம்மவர்கள் கருத வேண்டும். வன வளம் குறைந்து அதனை நாமே குறைத்து அதனா லான இன்னோரன்ன இடர்களில் மாட்டி தற்போது திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றோம். வன வளத்தை பெருககுவது பலவிதமான நன்மைகளைத் தரும் என ஆய்விலேயே கண்டறிந்திருக்கின்றார்கள். மரத்தின் பயன்பாடு களிலொன்றாக கரியமில வாயுவை உள்ளிழுத்து ஒட்சிசனை வெளி விடுவதாகும். இந் நிலையில் மரங்களை நாம் அழித்துக் கொண்டே போனால் கடைசியில் நாம் வாழ நல்ல காற்றை ஒட்சிசனை தேடித் திரியும் காலமாகி விடும். இறுதியில் எம்மை நாமே அழித்துக கொள்வதுமாகும்.







மக்களுக்கு மரத்தின் பெறுமதியை விளக்க வேண்டும். பிறந்து தொட்டிலிலிடுவதிலிருந்து சுடுகாட்டில் எமது இந்த பூதவுடல் தகனிக்க எமக்கு துணையாயிருந்து தானும் எரிந்து சாம்பலாக்கி கொள்ளும் மரத்தின்பால் நாம் எந்தளவிற்கு ஈடுகாட்டுகின்றோம். பிறந்து வளர்ந்து எம்முடன் இறுதி வரை ஒன்றாக பயணிப்பதுவும் இந்த மரம்தான். அதனுடன் இவற்றின் பயன்பாடுகளைப் பட்டியலிட்டால் அனைவரும் பிரமித்துப் போகும் வழியில் பல நன்மைகளை தருகின்றதாக மரங்கள் இருக்கின்றன. இவ்வாறான மரங்களின் எண்ணிக்கையை நாம் இப்பூமியில் அதிகரிக்கும் போது அதன் நன்மைகள் அனைவருக்கும் கிடைக்கும். இந்த உள்ளார்ந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மரநடுகை செயற்றிட்டம் வெற்றிகரமாக அனைத்து பிரதேசத்திலும் நடைபெற நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். யாரோ நடுகை செய்கின்றார்கள் என்பதை விட நாமும் ஒரு மரத்தை நடுகை செய்தோம் என இருக்க வேண்டும். பாடசாலைப் பிள்ளைகளுக்கு மரத்தின் தேவையை அவசியத்தை உணர்த்துவதற்காகவேனும் இந்நிகழ்வுகளுக்கு மக்கள் முன்வந்து உதவிசெய்யலாம். மரம் வளர்த்து அதனை நாம் எதிர்கால சந்ததியின் நல்வாழ்வுக்காக கொடுப்பதைப் போல எதுவும் வராது.

மில்க்வைற் அதிபர் மறைந்த கனகராசா அவர்களின் முயற்சி இவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாகும். எமது பகுதியில் சுயமாக தொழில் முயற்சியினை ஆரம்பித்து மில்க்வைற் சோப் என பெயரிட்டு அந்தக்காலத்தில் கொடிகட்டிப்பறந்த அவருக்கிணையாக எவருமில்லை எனலாம். அந்த தொழில் முயற்சியிலும் ஊருக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவரே பனம் விதைகளை பலவிடங்களில் நடுகை செய்ததால் இன்று அவை வளர்ந்து விருட்சமாகி வருகின்றன. உதாரண புருஷர்களில் ஒருவராகியிருக்கும் அவர் போன்ற நல்ல உள்ளங்களை, சமூக வள்ளல்களை இன்னும் இந்த மண் பெறவேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் அதனது வனப்பிலும் எமது பிரதேசம் முன்னுதாரணமாக திகழவேண்டும். விவசாய அமைச்சரின் இந்த முயற்சி நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதாகும். மரங்களில் பல்பயன்தரும் மரங்களை அதிகம் நடுகை செய்யலாம். குறிப்பாக பழமரங்களையும் நடுகைசெய்யலாம். குறிப்பாக விளாம்பழம் அநேகம் பேர் தேடாத ஒரு பழம் ஆகும். ஆனால் அதில் பொதிந்திருக்கின்ற சத்துக்களையும் மருத்துவ குணத்தையும் பட்டியலிட்டால் அதனை எவரும் ஒதுக்கி விடமாட்டார்கள். அனைவருக்குமான நல்ல குடிபானமாகவும் எமது பிரதேசத்தில் நீரில்லை என்றாலும் நின்று வளரும் மரமாகும். புளி இன்னொன்று. நீருக்காக அதிகம் அலட்டிக்கொள்ளாத மரமிது. இலவு தற்போது பலரும் நடுகை செய்வதில்லை. ஒரு வேளை இலவு காத்த கிளி போல என்னும் நிலை தமக்கும் வரலாம் என்பதால் என்னவோ தெரியவில்லை. இதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கலாம். இலவம் பஞ்சு தொழிற்றுறையுடன் சம்பந்தப்பட்ட மரமாகியதால் அதனையும் நடுகை செய்யலாம். மகோகனி, மா, இவற்றுடன் பனை, தென்னை, பலா, தேக்கு என பலதரப்பட்ட மரங்களிருக்கின்றன. தேக்கு வீட்டுக்கொன்று வளர்க்கலாம். அதனில் வளரும் பக்க அரும்புகளை ஒடித்து நேராக நேர்த்தியாக வளராவிட்டால் ஒருகாலத்தில் அதன் பிரயோசனம் பலமடங்காகும். மண்புழு வளர்பபிற்கு தேக்கமிலை அதிகம் பயன்படுத்தலாம். வேம்பு, மலை வேம்பு என்பனவும் நடுகை செய்யலாம். வனவளத்தை அதிகரிப்பதே நோக்கமாக இருப்பதனால் விரும்பிய மரங்களை உங்கள் வீடுகளில், பாடசாலைகளல், பொது இடங்களில், வணக்க தலங்களில் என பல விடங்களிலும் நடுகை செய்யலாம்.

ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட வேண்டும். பனையை பெக்கோ இயந்திரம் கொண்டு பிடுங்கியெறிந்து விட்டு தென்னையை நடுகை செய்கின்றனர் எம்மவர்கள். இரண்டும் பாமே குடும்பத்தை சேர்ந் தவை. அண்ணனை பிடுங்கியெறிந்து விட்டு தம்பியை நடுகை செய்வதாக இருக்கின்றது இது. அண்ணனுக்கு அந்த மரியாதையை கொடுத்தால் வடபகுதி இன்னும் வளம் பெறும். பனையிலிருந்து பெறும் பயன்களை தரமுள்ளதாக புதியனவாக உலக சந்தையை நிரப்பும் பொருளாக மாற்றினால் வடபகுதிக்கான வளத்தின் சிறப்பு இன்னும் புலப்படும். ஆய்வாளர்களுக்கும் திறமையானவர்களுக்குமான சவாலாக இதனைக் கருதலாம். பனைமரத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதார எழுச்சிக்கு இந்த மாற்றம் அவசியம். பலவகைகளில்திட்டமிட்டு இதனை ஒப்பேற்ற வேண்டும்.

பொலித்தீன் பாவனையை, பிளாஸ்ரிக்கின் பாவனையை குறைப்பது அவசியமாகின்றது. அவற்றினால்சூழல்மாசடைவதை இனியும் அனுமதிக்க முடியாது. இவற்றுக்கு பதிலாக தாவர பொருட்களை பயன்ப டுத்துவதை அவசியமாக்க வேணடும். வளத்தை புத்தாக்கத்தினுள திணித்து இந்த பிரச்சினைக்கு விடைதேட முடியும். எமது சூழலை நாம் தானே சுத்தமாக வைத்தி ருக்க வேண்டும. அதற்கான ஆயத்தமாகவும் இந்த மரநடு கையை காணலாம. முயற்சிக்கு எழுதும் கைகளின் வாழ்த்துக்கள். இது போன்ற நிகழ்வுக ளை வடபகுதி இன்னும்எதிர்பார்த்திருக்கி ன்றது.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 65

### 17 வயது அவுஸ்திரேலிய சிறுவன்

# கணனியைவிட வேகமாக கணக்கிடும் முறையை கண்டுபிடித்து அசத்தல்



அவுஸ்திரேலியாவை சேர்ந்த சிறுவன் ஒருவன் கணனியை விட வேகமாக கணக்கிடும் வகையில் கணித தேற்றத்தை கண்டு பிடித்து அதிசயிக்க வைத்துள்ளான்.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பென் நகரை சேர்ந்தவர் ஜெலிச் (Ivan Zelich) பிறந்த 2 ஆவது மாதத்திலேயே பேச தொடங்கி பெற்றோருக்கு அதிர்ச்சியளித்த இவர் சிறு வயதிலிருந்தே மிகவும் புத்திசாலித்தனமாக செயற்படுவார் என்று கூறப்படுகிறது.

இதன்காரணமாக 14 வயதிலேயே பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு இடம் கிடைத்தது, எனினும் பாடசாலை கல்வியை முடிக்க வேண்டும் என்று அவர் அதை நிராகரித்தார்

இந்நிலையில் அமெரிக்காவில் உள்ள ஷுமிங் லியாங் (Xuming Liang) என்பவரும் ஜெலிச்சும் இணையம் மூலமாக ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாயினர்.

இருவரும் கணிதம் பற்றியே எப்போதும் விவாதித்துக்கொண்டனர். இதன் விளைவாக தற்போது இவர்கள் இருவரும் இணைந்து புதிதாக ஒரு கணித தேற்றத்தை கண்டுபிடித்துள்ளனர்.

லியாங்- ஜெலிச் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த தேற்றம் மூலம் கணக்கிடும் போது கணனியை விட வேகமாக விடை கிடைப்பதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக இவரது திறமையை விஞ்ஞானிகளும், அரசியல் தலைவர்களும பாராட்டியுள்ளனர். தற்போது 12 ஆம வகுப்பு தேர்வுக்கு தயாராகி வரும் இவரிடம், நீங்கள் உங்களை மேதையாக உணர்கிறீர்களா? என்ற கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு அவர், நிச்சயமாக இல்லை. நான் இன்னும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டிய பகுதிகள் என் வாழ்வில் ஏராளமாக உள்ளன என்று பதிலளித்துள்ளார். (3-7)

# விமானிகளின் அறையிலிருந்த 2 ஆவது கறுப்புப் பெட்டி சேதம்

ரஷ்ய விமானத்தின் 2 ஆவது கறுப்புப்பெட்டி சேதமடைந்துவிட்டது என எகிப்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி எகிப்து நாட்டின் சுற்றுலா நகரமான ஷரம் எல் ஷேக் நகரில் இருந்து 224 பேருடன் ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு புறப்பட்டு சென்ற Kolavia 7K9268 என்ற விமானம் சில நிமிடங்களிலேயே சினாய் தீபகற்பத்தில் வடக்கு பகுதியில் அமைந்துள்ள நெகேல் என்ற இடத்தில் விழுந்து நொறுங்கியதில், விமானத்தில் பயணம் செய்த 224 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இந்த விமானத்தை நாங்கள் தான் சுட்டு வீழ்த்தினோம் என ஐ.எஸ். தீவிரவாதிகள் வீடியோ ஒன்றை வெளியிட்டனர்.

ஆனால், இவை போலியான வீடியோ என்றும் இதில் சிறிதளவும் உண்மையில்லை எனறும் ரஷ்ய விமானப்படையின் முன்னாள் கமாண்டர் ஸ்டீவ் சட்விக் ஓபே மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டியை எகிப்து அதிகாரிகள் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர்.

விமானிகளின் அறை ஒலிப்பதிவுகளை கொண்ட 2ஆவது கறுப்பு பெட்டி பாதி சேதமடைந்திருப்பதால், அதில் உள்ள பதிவுகளை பெறவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா வான்வெளி தாக்குதலை நடத்தி வருகையில் இந்த சம்பவம் நடந்துள்ளதால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கொள்கை விவகாரங்களில் புடினுக்கு மோசமானதாக அமையும் என்று கூறப்படுகிறது. (3-7)

# பஹ்ரைனில் 47தீவிரவாதிகள் கைது ஈரான் ஏவிவிட்டதாக குற்றச்சாட்டு

நாசவேலையில் ஈடுபடும் நோக்கத்துடன் தங்கள் நாட்டில் செயற்பட்டு வந்த, ஈரானின் தீவிரவாத முகாமை அழித்துவிட்டதாக பஹ்ரைன் தெரிவித்துள்ளது. தீவிரவாத முகாமில் இருந்த 47 தீவிரவாதிகளையும் கைது செய்திருப்பதாக அறிவித்துள்ளது.


பஹ்ரைன் நாட்டின் உள்விவகாரத்தில், அண்டை நாடான ஈரான் தலையிட்டு வருவதாக கூறப்படுகிறது. குறிப்பாக, பஹ்ரைனுக்குள், பயிற்சி பெற்ற தீவிரவாதிகளை அனுப்பி, அந்நாட்டின் பாதுகாப்பை சீர்குலைக்கும் நோக்கில் ஈரான் மறைமுகமாக ஈடுபட்டு வருவதாக அந்நாட்டு அரசு குற்றம் சாட்டி வந்தது.

இந்த சூழலில், தலைநகர் மனாமா மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில், நேற்றுமுன்தினம் பஹ்ரைன் பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப் போது ஈரான் உதவியுடன், இரகசியமாக செயற்பட்டு வந்த தீவிரவாத முகாமை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அத்துடன், அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த் வெடிபொருட்கள், துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் பறிமுதல் செய்தனர். மேலும், தீவிரவாத பயிற்சியில் ஈடுபட்டிருந்த, 47 தீவிரவாதிகளையும் கைது செய்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, ஈரானில் உள்ள தங்கள் நாட்டு தூதரை, பஹ்ரைன் திரும்ப அழைத்து கொண்டது. (3-7)




# பிரித்தானிய சுற்றுலா பயணிகள் 20ஆயிரம் பேர் எகிப்தில் நிர்க்கதி



எகிப்து நாட்டின் சினாய் பெனின்சுலாவில் கடந்த சனிக்கிழமை மெட்ரோஜெட் 9268 என்ற விமானம் விழுந்து நொறுங்கியதில், அந்த விமானத்தில் பயணித்த 224 பேரும் பலியாகினர். இந்நிலையில், இந்த விமான த்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதற்கு கணிசமான சாத்தியம் இருப்பதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துளளார். அந்த நகரில் தற்போது தடைப்பட்டிருக்கும் சுமார் 20 ஆயிரம் பிரிட்டிஷ் சுற்றுலா பயணிகளையும் பிரிட்டனுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று பிரிட்டன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் இத்தனை வேகமாக இந்த முடிவுக்கு வந்தது தவறு என்று எகிப்து அரசு கருத்து தெரிவித்துள்ள நிலையில், எகிப்திய சுற்றுலா மையமான ஷரம் எல் ஷெய்க்குக்கான விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்துவதாகவும் பிரிட்டன் கூறியுள்ளது.

முன்னதாக, இந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ஐ.எஸ் தீவிரவாதிகள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (3-7)

# எகிப்துடனான விமான சேவையை இரத்து செய்யும் ஐரோப்பிய நாடுகள்



எகிப்தில் ரஷ்ய விமானம் விபத்துக்குள்ளாதையொட்டி பிரித்தானியா உட்பட பல்வேறு நாடுகளும் அங்கு செல்லும் தங்கள் நாட்டு விமானங்களை இரத்து செய்துள்ளன.

எகிப்து நாட்டின் சினாய் தீபகற்ப மலைப்பகுதியில் ரஷ்ய விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில 224 பேர் பலியாகினர். விமானத்தை தாங்கள் தான் சுட்டு வீழ்த்தியதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து கூறிவருகின்றனர்.

இதனை ரஷ்யா மற்றும் எகிப்து மறுத்து வருகின்றன. இந்நிலையில் இது தீவிரவாதிகளின் தாக்குதலாக இருக்கலாம் என்று கூறிய பிரித்தானியா எகிப்தின் ஷார்ம் எல் ஷேக் பகுதியில் உள்ள ரிசார்ட் பகுதிக்கு இடையிலான விமான சேவையை இரத்து செய்துள்ளன.

இதன் காரணமாக ஷார்ம் பகுதியில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரித்தானியர்கள் தவித்து வருவதாக தகவல் வெளியாகியது.

இதையடுத்து இன்று 20 இற்கும் மேற்பட்ட விமானங்கள் பலத்த பாதுகாப்பு சோதனைகளுக்கு பின் ஷார்மில் இருந்து பிரித்தானியாவுக்கு இயக்கப்படவுள்ளன.

எனினும் பயணிகள் தங்களின் உடைமைகளை எடுத்து செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரான்ஸ், நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளும் தங்கள் நாட்டின் மக்கள் யாரும் குறிப்பிட்ட அந்த பகுதிக்கு சுற்றுலா செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜேர்மனியும் தங்கள் நாட்டின் விமானங்களை இரத்து செய்துள்ளது. எனினும ரஷ்யா அந்த பகுதிக்கு தனது விமானங்கள் தொடர்ந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (3-7)

# அமெரிக்காவில் தீபாவளி கொண்டாட்டம் 30 அமெரிக்க எம்.பிக்கள் பங்கேற்பு



இந்துக்களின் முக்கியமான பண்டிகைகளில் ஒன்றான தீபாவளியை, உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த சுமார் 100 கோடி பேர் ஆண்டு தோறும விமரிசையாக கொண்டாடி வருகின்றனர். அமெரிக்காவிலும் ஆண்டு தோறும் இந்த பண் டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை 10ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் தீபாவளி சிறப்பு கொண்டாட்டங்கள் நடந்தன. இந்திய வம்சாவளியினரால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இந்த விழாவில் சுமார் 30 அமெரிக்க எம்பிக்களும் கலந்து கொண டனர்.

விழாவுக்குப்பின் செய்தியாளர்களிடம் பேசிய பிரதிநிதிகள் சபையின் ஒரே இந்திய வம்சாவளி உறுப்பினரான அமி பெரா, 'இந்தியா, அமெரிக்கா இடையிலான நல்லுறவுக்கு, இந்திய வம்சாவளியினர் முக்கிய பங்காற்றி வருகின்றனர்' என்று கூறினார்.

இந்த விழாவில் செனட் சபை உறுப்பினர்களான மார்க் வார்னர், டிம் கெயின், வெளிவிவகார கமிட்டி தலைவர் எட் ராய்ஸ், ஜோ கிரவ்லி உள்ளிட்ட பல்வேறு எம்.பி.க்கள் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவரும், தீபாவளி பண்டிகை நினைவாக அமெரிக்காவில் தபால் தலை வெளியிட வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (3-7)



©PA


லண்டன் மாநகரில் முதலாளித்துவத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. பக்கிங்காம் அரண்மனைக்கு அருகில் ஆயிரக்கணக்கில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தபொலிஸார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டனர் இந்த வன்முறைகளில் 3 பொலிஸார் உட்பட பலர் காயமடைந்தனர். 44 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மாலைதீவு துணை ஜனாதிபதி யாமின் பதவி பறிக்கப்பட்டது

## பாராளுமன்றில் கண்டன தீர்மானமும் நிறைவேற்றம்

ஜனாதிபதியை கொல்ல முயன்ற வழக்கில் கைதான மாலைதீவு துணை ஜனாதிபதிக்கு எதிராக் அந்நாட்டு பாராளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமின் கடந்த 10 நாட்களுக்கு முன் சவுதிக்கு குடும்பத்துடன் ஹஜ் புனித யாத்திரை சென்றார். ஹஜ் பயணத்தை முடித்து கொண்டு விமான நிலையத்தில் இருந்து தலைநகர் மாலேவுக்கு படகு மூலம் திரும்பிக் கொண்டிருந்தார்.



அப்போது மாலே துறைமுகம் அருகே படகு சென்று கொண்டிருக்கும் போது திடீரென வெடித்தது. இதில் ஜனாதிபதி யாமின் மனைவி மற்றும் 2 பேர் படுகாயம் அடைந்தனர். அப்துல்லா யாமின் காயமின்றி மயிரிழையில் உயிர் தப்பினார். இந்த குண்டு வெடிப்பில் தொடர்புடைய 2 பாதுகாப்பு அதிகாரிகள் அதிரடியாக கைது செய்யப்பட்டனர். ஜனாதிபதி பாதுகாப்பில் கவனக் குறைவாக செயற்பட்டதால் இராணுவ அமைச்சர் ஜலீல் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில் ஜனாதிபதியை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக அந்நாட்டின் துணை ஜனாதிபதி அகமது அதீப் காபர் கடந்த ஒக்டோபர் 24 ஆம் திகதி கைது செயயப்பட்டார். பின்னர் துணை ஜனாதிபதி அகமது அதீப்க்கு எதிராக கண்டன தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று கூடிய மாலைதீவு பாராளுமன்ற கூட்டத்தில், அந்த தீர்மானம் மீது இரண்டு மணி நேரமாக விவாதம் நடைபெற்றது. அதன் முடிவில், அத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. வாக்கெடுப்பில் 85 எம்.பிக்கள பங்கேற்றனர். அவர்களில், 61 பேர் கண்டன தீர்மானத்துக்கு ஆதர வாக வாக்களித்தனர். அதனால், கண்டன தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேறியது. கடந்த 5 மாதங்க ளில், கண்டன தீர்மானத்துக்கு ஆளான இரண்டாவது துணை ஜனாதிபதி அகம து அதீப் ஆவார். இதனால் அவரது பதவி பறிக்கப்படவுள்ளது. மேலும், நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட 30 நாள் நெருக்கடி நிலைக்கும் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தது.(3-7)

# மியன்மார் தேர்தலில் வெற்றி பெற்றால் ஜனாதிபதிக்கு மேலான பதவி வகிப்பேன்

### எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகி

மியன்மாரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள தேர்தலில் தனது கட்சி வெற்றி பெறுமானால் தான் ஜனாதிபதிக்கும் மேலான பதவியை வகிக்கவுள்ளதாக அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவியான ஆங் சான் சூகி தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி வெற்றி பெறும் என பரந்தளவில் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அரசியலமைப்பின் பிரகாரம் அவர் ஜனாதிபதியாக பதவிவகிப்பதற்கு தடையை எதிர் கொண்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு அந்நாட்டின் முதலாவது சிவிலிய அரசாங்கம் பதவியேற்றதையடுத்து இடம்பெறும் முதலாவது தேசிய மட்ட தேர்தலான இந்தத் தேர்தலில் 90 க்கு மேற்பட்ட கட்சிகள் போட்டியிடுகின்றன.

இந்நிலையில் ஆங் சான் சூகி தேர்தலுக்கு முன்னரான தனது இறுதி பத்திரிகையாளர் மாநாட்டில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றுகையில், "நான் ஜனாதிபதிக்கு மேலாக பதவி வகிப்பேன். இதுவே எனது மிகவும் எளிமையான செய்தியாகும்" என்று தெரிவித்தார். ஆங் சான் சூகி பிரித்தானிய கடவுச்சீட்டைப் பெற்றுள்ளதால் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாத நிலையில் உள்ளார். தேர்தல் செயற்கிரமங்கள் குறித்து குற்றஞ்சாட்டிய ஆங் சான் சூகி, தேர்தல் முழுமையாக நீதியும் சுதந்திரமானதுமான முறையில் நடைபெறும் எனத் தோன்றவில்லை என்று கூறியுள்ளார். (3-7)

### பிரதமர் மோடி விஜயம் செய்யவுள்ள நிலையில்

# காஷ்மீரில் எறிகுண்டு தாக்குதல் 11 இராணுவ வீரர்கள் படுகாயம்

பிரதமர் நரேந்திர மோடி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இன்று ஒருநாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள நிலையில், நேற்று முன்தினம் துணை இராணுவ வீரரகளின் இராணுவ முகாம்கள் மீது தீவிரவாதிகள் எறி குண்டு களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஸ்ரீநகரில் உள்ள முகாம் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் சுமார் 11 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்ததாகவும், அதில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவு சுமார் 7.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடைபெற்றது.

ஹிஸ்ப்புல் முஜாஹிதீன் அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் தான் இந்த தாக்குதலை நடத்தியிருக்க கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

காயமடைந்த இராணுவ வீரர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (3-7)

# கனடாவின் பாதுகாப்பு அமைச்சராக இந்திய வம்சாவளி சீக்கியர்

(டில்லி)

கனடாவின் 23 ஆவது பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜஸ்டின் டெர்டியூ நேற்று முன்தினம் பதவி ஏற்ற போது, அவருடன் 30 புதிய அமைச்சர்களும் பதவி ஏற்று கொண்டுள்ளனர்.

அவர்களில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சீக்கியரான ஹர்ஜித் சஜ்ஜன் என்ற தெற்கு வன்கூவரில் இருந்து எம்.பியாக வெற்றி பெற்ற நபர் கனடாவின் பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.

இந்தியாவில் பிறந்த சஜ்ஜன் தனது 5ஆவது வயதில் குடும்பத்துடன் கனடா சென்றுள்ளார்.

கனேடிய இராணுவத்தில் பணியாற்றிய சஜ்ஜன் போஸ்ன்பியா மற்றும் ஆப்கானிஸ்தானின் கந்தகாரில் பணியாற்றியுள்ளார்.

மேலும், கந்தகாரில் தலிபான்களின் செல்வாக்கை குறைக்க பணியாற்றியதற்காக கடந்த 2013 ஆம் ஆண்டு சேவை விருது பெற்ற அவர் இராணுவத்தில் பல விருதுகளை பெற்றுள்ளார். (3-7)

# கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் யேமனில் 11 பேர் உயிரிழப்பு

யேமனில் கிளர்ச்சியாளர்கள் நிகழ்த்திய சரமாரி எறிகுண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் 11 பேர் உயிரிழந்ததாக அரசுப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அந்த நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான தயீஸில் இந்தத் தாக்குதல் கடந்த புதன்கிழமை இரவு நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து ராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில்,

அரசுப் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் தயீஸ் நகரின் புறநகர்ப் பகுதியைக் கைப்பற்ற முயற்சிக்கும் ஹீதி கிளர்ச்சியாளர்களுக்கும் அரசு ஆதரவுப்படையினருக்கும் இடையே கடந்த சில நாட்களாக கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் அந்த நகருக்குள் ஹூதி கிளர்ச்சியாளர்கள் கடந்த புதன்கிழமை இரவு சரமாரியாக எறிகுண்டுகளை வீசி தாக்குதல் நிகழ்த்தினர். இதில் ஒரு பெண் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர். (3-7)

# வைகோவின் தாயார் நேற்று காலமானார்

(சென்னை)

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் தாயார் மாரியம்மாள் உடல் நலக்குறைவு காரணமாக பாளையங்கோட்டையில் உள்ள வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் தாயார் மாரியம்மாள் (வயது-96). இவர் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள கலிங்கப்பட்டியில் வசித்து வந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு இவருக்கு வயோதிபம் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இவரை பாளை ஐகிர வுண்டில் உள்ள தனியார் வைத் தியசாலையில் அனுமதித்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் மாரியம்மாள் சிகிச்சை பலனளிக்காமல் இறந்தார்.

இந்த தகவல் சென்னையில் இருந்த வைகோவிற்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து அவர் விமானம் மூலம் நெல்லை புறப்பட்டு வந்தார்.

வைகோவின் தாயார் அரசியல் சமூக பணிகளில் அதிக ஆர்வம் உடையவர். தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆகியோர் இவரது வீட்டிற்கு சென்று இவரை சந்தித்து பேசி உள்ளனர்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் ஒருமுறையும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்ட போதும் மாரியம்மாள் தன்னந்தனியாக உண்ணாவிரத போராட்டம் நடத்தினார்.


சமீபத்தில் மதுவிற்கு எதிராக கலிங்கப்பட்டியில் நடந்த போராட்டத்தின் போதும் மாரியம்மாள் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(3-7)

# இலங்கையில் நீதியை நிலைநிறுத்த முடியும்

**இலங்கையில் நீதியை நிலைநிறுத்த முடியும் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தின் மொழியாக்கம்...**

...உள்ளூர் விசாரணைப் பொறிமுறைகள் நன்கு செயற்படும் என்பதையே "உடலகம" மற்றும் "பரணகம" ஆணைக் குழுக்களிரண்டும் சந்தேகங்களெதற்கும் இடமில்லாத விதத்தில் நிரூபித்திருப்பதே அவற்றின் இறுதி விசாரணைப் பெறுபேறுகளாயிருந்தது. நீதியியல் துறையின் முக்கியமான இடங்களில் திட்டமிடப்பட்ட விதமான அரசியல் உள்நோக்கம் ஊட்டப்பட்ட தீய சக்திகள் ஆங்காங்கே ஏற்கனவே அமர்த்தப்பட்டிருப்பதற்காக நாட்டின் முழு நீதியியல்துறை நடைமுறைகளையும் ஒரே விதமாக நியாயம் தீர்க்க முற்படுவது நியாயமாகாது. சரியான கண்காணிப்புடன் அரசியல் விருப்பும் இருக்கும் வரை நாட்டில் நீதி வழங்கக் கூடிய பெருமைக்குரிய நல்லவர்களும் தொடர்ந்து இருப்பார்கள் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இந்த இரண்டு ஆணைக் குழுக்களுடன் முன்னைய 'LLRC' ஆணைக்குழுவையும் குறிப்பிட்டுக் காட்டலாம். இவ்விதம் இருக்குமானால் வெளிநாட்டு வழக்காளி தரப்பு சட்டத்தரணிகளுக்கோ அல்லது நீதிபதிகளுக்கோ நாட்டில் இடங்கொடுக்க வேண்டிய தேவையே இருக்காது.



ஐ.நா போர்க் குற்ற விசாரணை சம்பந்தமான நிர்ப்பந்தங்களுக்கு காரணமாயமைந்த 2009 ஆம் ஆண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற திருப்பமான நிகழ்வுகள் பற்றி முந்திய அரசாங்க நிர்வாகம் தவறான கணிப்பினையே கொண்டிருந்தது. இப்போது தவிர்க்க முடியாதபடி சேர்ந்தேயிருக்கும் ஒட்டுண்ணி போன்ற எதிர்க் கட்சியானது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்றே மக்களின் அறிவை மறைக்கும் புகை மூட்டமாக "தேசியம்" என்ற உணர்வை எழுப்புவதன் மூலம், அது முன்னர் புதிய அரசிடம் இழந்து போயிருந்த ஆதரவில் ஒரு சிறு பகுதியையாவது மீளவும் கைப்பற்றிக் கொள்வது அரசுக்கும் ஓரளவு பின்னடைவாகவே இருக்கும்.

போரினால் பாதிக்கப்பட்டு அநீதிக்குள்ளாக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற 'சுலோகம்' கேட்பதற்கு எவ்வளவோ இதமான ஒன்றாகவே தோன்றக்கூடும். இருப்பினும் நிச்சயமற்ற விதமான போர்ச் சூழல்களில், போர்க்குற்றங்களில் ஈடுபட்டோருக்கு போரின் விளைவாக தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நோக்கங்களுடன் கூடிய முடிவேயில்லாத 'மீன்பிடித் தொடர் அத்துமீறல் நடவடிக்கைகள்' அல்லது "நடந்து முடிந்தவை பற்றிய கண்டுபிடிப்புகளுக்கான நீண்ட பயணம்" போன்ற போருக்குப் பிந்திய செயற்பாடுகளால் பழைய காயங்கள் கீறிப் புதுப்பிக்கப்பட்டு இரணகளமாவது போன்ற விளைவுகளை உருவாகும். சூரிய உதயம் போன்ற பிரகாசமானதொரு எதிர்காலத்தை விடுத்து கடந்து வந்த இருண்ட காலத்தை நோக்கி திரும்பவும் காலடியெடுத்து வைப்பதா? இங்கு பெறுமதி மிக்க விதமான எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டியது அரசாங்கம் மட்டுமல்ல பழையவற்றை கிளறிவிட தூண்டுகோலாக இருப்பவர்களுமேதான்.


**அரசாங்கங்கள் மாறலாம்; ஆனாலும் அரசியல் காட்டுமிராண்டிகள் மாறப் போவதில்லை**

அரசுக்கு அதிகளவில் ஆதரவாக வாக்களித்து ஆட்சியிலமர்த்திய மக்களை ஒழுங்கு முறைப்படியானதொரு சர்வதேசப் போர்க்குற்றவியல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு தனது சக்தியனைத்தையுங் கூட்டி பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டிருக்கும் அதே நேரம் நட்பு ரீதியான (தீர்மானத்திற்கு அனுசரணையானவர்களுடன்) இந்த புதிய அரசின்



தெளிவானதும் இதமானதுமான அணுகுமுறையினால் ஐ.நா. மனித உரிமை சபையின் முன்னைய கடும்போக்குத் தீர்மானம் மென்போக்கிற்கு மாற்றப்பட்டது உண்மையேயாகும்.

மேலும் இலங்கையின் பொருளா



தார முக்கியத்துவத்திற்கு சற்றும் குறைந்து விடாதளவு முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான ஏனைய விடயங்கள் மட்டிலும் அவசர அவதானம் செலுத்த வேண்டிய தேவை அரசுக்கு இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் எவரும் தேர்தல் பிரசார த்திற்கென செலவிடும் தொகை என்பது ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்குரிய விடயங்களை விடவும் குறைந்தவோர் விடயமுமல்ல, இந்த வருடம் இரண்டு தேர்தல்கள் இலங்கையில் இடம்பெற்ற பிரச்சினைக்குரிய விடயம் ஏற்கனவே அரசியல் கட்சிகளதும் தேர்தல் ஆணையாளரதும் அவதானத்தை கவர்ந்திருந்ததென்றாலும்கூட அது இப்போது இலங்கையின் அந்த இரட்டைத் தேர்தல்கள் மட்டில் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் சமர்ப்பித்திருந்த அண்மைக்கால அறிக்கையைத் தொடர்ந்து அதுபற்றிய சூடான வாதப்பிரதிவாதங்களை மீண்டும் கிளப்பிவிட்டிருக்கிறது. எப்படியும் அந்தப் பேச்சுக்களுக்கு மத்தியிலுங் கூட அரசினது மாறா இந்நிலையை மாற்றுவதற்கு ஏதாவது நடக்காதோ என்பதுதான் பிரச்சினை!

அரசியலில் எப்போதுமே தொடர்ந்து இடம்பெறுவதும் முடிவேயில்லாது தொடரப் போவதும் தொழில் ரீதியான ஊழல் மோசடி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட போதைவஸ்து கடத்தல்- வர்த்தகம், சட்டவிரோத மதுபாவனை, இவை மட்டில் மக்கள் மத்தியிலும் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்புக்கள், உயிராபத்துமிக்க முறையற்ற வர்த்தகப் போட்டிகள், சட்டத் திற்குப் புறம்பான சொத்துக் குவிப்பு, சொத்துப் பிரகடன சட்ட மீறல்கள், சகலவிதமான பிரசார நடவடிக்கைகளுக்கும் முறையற்ற விதமான பணப் பரிமாற்றங்கள் போன்றவற்றுடன் எதிர்க்கட்சிகள் மற்றும் அரச தரப்புக்களிரண்டுமே பொதுப் பணத்தை உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பிரசார நடவடிக்கைகளுக்கு கணக்கற்ற விதத்தில் வாரியிறைத்த பின் பிரதிபலனாக மக்களையே கசக்கிப்பிழிந்து இரத்தமும் சதையுமாக கறந்தெடுப்பது போன்ற செயற்பாடுகள் சர்வதேச ரீதியிலும் பொதுவான ஒன்றாக இடம்பெற்றுக் கொண்டுதானுள்ளன. உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள், கொடையாளி நாடுகளின் தாராள உதவிகள் போன்ற பல்வேறு விடயங்களிலும் உள்ளூர ஊடுருவி இடம்பெறுப வற்றை உன்னிப்பாக அவதானித் தால் இவற்றை புரிந்து கொள்ளலாம்.

மாறாத இவ்விடயங்களுக்கு மாறாக சிறுமாற்றங்களையாவது எதிர்பார்க்கும் வாக்காளப்பெருமக்கள் பெறுவதென்னவோ



ஏமாற்றங்களேதான்!

மாற்றத்திற்கென வாக்களித்து புதிய அரசினை- ஆட்சியலமர்த்திய மக்கள் காண்பதெல்லாம் வெறும் ஆட்சி மாற்றமே தவிர அரசியல் காட்டுமிராண்டிகளின் மனமாற்றத்தை அல்ல! மறைமுகமாக நாட்டை ஆழுவது பழைய அரசியல் காட்டு மிராண்டித்தனங்களேயாகும்.

ஆட்டப்படும் கைப் பொம்மைகள் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளுமேயாவர்.

இந்நிலையேதான் தொடப் போகிறதா? எதிர்காலம்தான் பதில் கூறும்!

(முற்றும்)

தமிழில்.யோகர்

# ஜனாதிபதி மனதுவைத்தால் கைதிகளை விடுவிக்கலாம்

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

புலிகள் என்ற பேரில் அப்பாவி தமிழ் கைதிகளை தொடர்ந்தும் சிறைபிடித்து வைத்திருப்பதை நியாய மென கருதமுடியாது. குற்றமிலாத தமிழ் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும். ஜனாதிபதி மனது வைத்தால் தமிழ் கைதிகள் விடுவிக்கப் படலாம் என முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கவேண்டிய அவசியம இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

புலிப்பயங்கரவாத குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பிலும், வட மாகாணசபை தமக்கான பொலிஸ், காணி அதிகாரங்களை கோருவது தொடர்பிலும் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலகட்டத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட தமிழ் கைதிகள் மற்றும் உண்மையில் புலிகள் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய நபர்கள் என இரு சாராரும் கலந்தே இன்று கைதிகள் என்ற பொதுவான வரையறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் யார் புலிகளுடன் தொடர்பு பட்டவர், யுார் நிரபராதி என எமக்கு எதுவும் தெரியாது.

எனினும் தண்டனைகளை அனுபவிக்கும் குற்றவாளிகள் விடுதலையாக இந்த நாட்டில் இடம் உள்ளது. இலங்கையில் சட்டதிட்டங்களுக்கு அமையவும் அவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதையும் தாண்டி நாட்டின் சட்டத்திற்கு அமைய குற்றம் சுமத்தப்பட்டு சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை விடுவிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அவர் தீர்மானித்தால் யாராலும் அதை தடுக்க முடியாது. ஆகவே ஜனாதிபதி மனது வைத்தால் இப்போது தடுப்புக்காவலில் உள்ள தமிழ் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படலாம்.

யுத்தத்தை வெற்றிகொண்ட நானும் ஒரு காலகட்டம் வரை தேசத்துரோகி என்ற பேரில் சிறையில் தான் இருந்தேன். எனது உயிரையும் எமது இராணுவ வீரர்களின் உயிரையும் பணயம் வைத்து போராடிய நிலையிலும் தனிப்பட்ட ரீதியில் நான் பழிவாங்கப்பட்டேன். அதேபோல் சிறையில் இருந்த நிலையிலும் ஜனாதிபதியின் அனுமதியுடன் தான் நானும் விடுதலையாகினேன். ஆகவே ஜனாதிபதி நினைத்தால் இது சாத்தியமாகும். என்னைப்பொறுத்த வரையில் இப்போதும் இவர்களை தண்டிக்க வேண்டிய தேவை இல்லை. இது எனது தனிப்பட்ட கருத்தாகும். எனினும் நாட்டின் சட்டத்தை எப்போதும் நான் மதிக்கின்றேன்.

அதேபோல் மாகாணசபை அதிகாரங்களை பலப்படுத்த வேண்டும் என்ற தேவையோ அல்லது மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற அவசியமோ எமது நாட்டைப் பொறுத்தவரையில் தேவையற்றதாகும். இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளைப் பொறுத்தவரையில் இது சாத்திய மாக இருக்கலாம். ஆனால் அங்குள்ள மாநிலங்களின் ஒரு பகுதி அளவில் தான் எமது நாட்டின் மொத்த பரப்பளவும் உள்ளது. ஆகவே நாம் வாழும் சிறிய நாட்டில் இவ்வாறு அதிகாரங்களை பகிர்ந்து செயற்படவேண்டிய தேவை இல்லை. இது வடக்கு என்பதனால் கூறவில்லை, நாட்டில் எந்த மாகாணத்திற்கும் இந்த அதிகாரங்கள் அவசியம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மக்கள் கேட்பதனை நாம் கொடுப்போம்

## ரங்கே பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த அரசாங்கங்களைப்போனறு அல்லாது நாம் மக்கள் கேட்பதனைக் கொடுப்போம் என அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஏனைய அரசாங்கங்களைப் போன்று நாம் செயற்படவிலலை, மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவோம்.

வீடுகள், உட்கட்டுமான வசதிகள், தொழில் வாய்ப்பு உள்ளிட்ட மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.

வரவு செலவுத் திட்டத்துடன் பொருட்களின் விலை குறைப்பு மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

இந்த அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகளை வரையறுப் போம்.

அதன் மூலமாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும் என அவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத தெரிவித்தார். (இ-7-10)

# ஆசியாவில் இருந்து வருடாந்தம் 2.5 மில்லியன் பேர் புலம்பெயர்வு

(கொழும்பு)

வருடாந்தம் 2.5 மில்லியன் பேர் ஆசிய நாடுகளில் இருந்து தொழிலுக்காக வெளிநாடு செல்கின்றனர். இவர்கள் தத்தம் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பெருமளவில் பங்களிப்பும் நல்குவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

“கொழும்பு செயற்பாடு” தொடர்பான மூன்றாவது மாநாட்டின் ஆரம்ப அமர்வில் அவர் உரையாற்றினார். கொழும்பு ஒஸோ ஹோட்டலில் இம்மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது.

உலகில் வெளிநாட்டுத் தொழிலுக்கு ஆட்களை அனுப்பும் 10 நாடுகளுள் ஆறு நாடுகள் கொழும்பு செயற்பாட்டின் அங்கத்துவ நாடுகளாகவுள்ளன.

இலங்கை, இந்தியா, சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் ஆகியவை அந்த நாடுகளாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவினாலும் பெணகளை தொழிலுக்கு அனுப்பும் விடயத்தில் அதிக அவதானத்தை அங்கத்துவ நாடுகள் செலுத்த வேண்டும்.

இம்முறை இவ் விடயமாக கொழும்பு செயற்பாடு மாநாட்டில் நாம் கவனம் செலுத்துவோம். கொழும்பு செயற்பாட்டு நாடுகளிலிருந்து வெளிநாட்டுத் தொழில்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை 42 வீதமாக அதிகரித்து உள்ளது.

வெளிநாடுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிறந்த விடயங்கள் கிடைக்க வேண்டும்.

வெளிநாடுகளில் தொழில் புரிவோர் உழைக்கும் பணத்தை பாதுகாப்பாகவும் விசுவாசமாகவும் தத்தம் நாடுகளில் உறவினர்களுக்கு அனுப்புவதற்காக சிறந்த பொறிமுறை அவசியமாகும்.

இவ்விடயம் தொடர்பாகவும் அவதானம் செலுத்துவது அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஐ.நாவின் ஜெனிவா நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, அமைச்சின் செயலாளர் பீ.எஸ். விதானகே ஆகியோரும் இம்மாநாட்டில் உரையாற்றினர். (இ-7-1-0)

# இன்று ஒரு தகவல்

## நல்ல பெயர் வாங்குவது எப்படி?

‘‘நான் நல்ல காரியம் எல்லாம் செய்திருக்கிறேன். இருந்தாலும் எனக்கு ஒரு பெரிய குறை’’ என்று ஒருவர் கூறினார்.

“என்ன குறை?” என்று கேட்டார் இன்னொருவர்.

‘‘என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை! அதுதான் குறை’’என்றார்.

நல்ல செயல்களை செய்பவன் என்பது வேறு! நல்லவன் என்று பெயர் எடுப்பது வேறு.

நல்ல பெயர் வாங்குவது என்பது இலகுவான காரியமா? அதுசரி எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குவது எப்படி?

இதற்கு ஒரு அனுபவசாலி சில வழிகளைக் கூறுகிறார். முதலாவது வழி மற்றவர்களை உண்மையாகவே பாராட்டிப் பழக வேண்டும்.

சிலபேர் எப்படியென்றால் ஏனையவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு பதிலாக அவர்கள் மேலே பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கிறார்கள்.

அதனால் நமது பெயரும் கெட்டுப் போகிறது. இரண்டாவது வழி பிறர் மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உங்களுக்குப் பக்கத்தில் இருப்பவருக்கு தலைவலி. உங்களிடம் மாத்திரை இருக்கிறது. அப்படி என்றால் அதில் ஒன்றை அவருக்கு கொடுத்து உதவுவது. அந்தத் தலைவலி நீங்கள் பக்கத்தில் இருப்பதால் வந்திருக்கலாம்.

ஏனையவர்கள் ஒரு தவறு செய்து விட்டார்கள் என்றால் அதை மறைமுகமாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

“ ஐயையோ! இப்படி செய்து விட்டீர்களே’’என்று ஆரம்பிக்கக் கூடாது. தவறு என்பது திருத்திக் கொள்ளக் கூடியதுதான் என்பதை அவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும்.

‘‘பரவாயில்லை, இனிமேல் இதுமாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ளவும்!’’ என்று சொல்ல வேண்டும். மூன்றாவது வழி உங்களுக்கு எதிரில் இருப்பவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது! அவரும் முக்கியமானவர்தான் என்பதை அவரே உணர்கிற அளவுக்கு நீங்கள் நடக்கவேண்டும்.

அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேளுங்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள்.

அவரைக் கதைப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். அவர் பேசுவதைப் பொறுமையாகக் கேளுங்கள். அப்போதுதான் உங்கள்மேல் அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். அதுமாதிரி வாக்குவாதங்களில் இருந்து சிறந்த பலன் பெறவேண்டுமென்றால் அதில் இருந்து ஒதுங்குவதுதான் சிறந்த வழியாகும்.

நான்காவது விடயம் என்னவொன்றால் ஏனையவர்களை மகிழ்ச்சி அடைய வைப்பதன்மூலம் நாங்களும் மகிழ்ச்சியடைவது.

சிலருக்கு அடுத்தவர்களை அதிர்ச்சியடைய வைத்து வேடிக்கைப் பார்ப்பது என்பது ஒரு தனியான சுவாரஸ்யம். அது மிகவும் பிழையான விடயம்.

நல்ல பெயர் வாங்குவது எப்படி என்பதை ஒரு வெளிநாட்டு நிபுணர் இவ்வாறு தன் கருத்து மூலம் தெரிவிக்கின்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

48

## தமிழ்ப்பட உலகின் முதல் கனவுக்கன்னி

## டி. ஆர் ராஜகுமாரி

...எனக்குச் சாப்பாடு மட்டும்தானா? தட்டு கிடையாதா? என்று காந்தி சிரித்துக்கொண்டே கேட்க, விருந்து முடிந்ததும் தங்கத்தட்டை காந்தியிடம் வழங்கினார் கே.பி.எஸ்.

காந்தி அதை அங்கேயே ஏலத்தில் விட்டு பணத்தை கட்சி நிதியில் சேர்த்துவிட்டார்.

1958 இல் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது கே.பி.எஸ். தமிழக மேல்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மத்திய அரசு பத்மபூஷண் விருது வழங்கி கௌரவித்தது.


தர்மபுரம் ஆதீனம் ஏழிசை வல்லபி என்ற பட்டத்தையும் தமிழிசைச் சங்கம் இசைப் பேரறிஞர் பட்டத்தையும் வழங்கின.

தமிழ்நாட்டு சினிமா ரசிகர்களின் கனவுக்கன்னியாக விளங்கியவர் டி.ஆர். ராஜகுமாரி. அவர் நடிகையானது சற்றும் எதிர்பாராத நிகழ்ச்சியாகும்.

தஞ்சையைச் சேர்ந்த கலைக்குடும்பம் ஒன்றில் 1922 இல் பிறந்தவர், டி.ஆர்.ராஜகுமாரி. தாயார் பெயர் ரங்கநாயகி.

ராஜகுமாரியின் இயற்பெயர் ராஜாயி. பார்ப்பதற்கு கவர்ச்சிகரமாக இருந்தாலும் கறுப்பு நிறம்.

ராஜகுமாரியின் அத்தை எஸ்.பி. எல். தனலட்சுமி, சினிமாவில் நடித்து வந்தார். 1940 இல் நாதஸ்வர சக்ரவர்த்தி டி.என்.ராஜரத்தினம் பிள்ளை நடித்த காளமேகம் படத்தில் கதாநாயகியாக நடிக்க எஸ்.பி.எல். தனலட்சுமி ஒப்பந்தமானார்.



அவர் சென்னைக்கு படப்பிடிப்புக்காகப் புறப்பட்டுச் சென்றபோது ராஜகுமாரியும் உடன் சென்றார்.


சென்னையில் தங்கியிருந்த எஸ்.பி. எல்.தனலட்சுமியை ஒரு படத்திற்கு ஒப்பந்தம் செய்வதற்காக பிரபல டைரக்டர் கே.சுப்பிரமணியம் வந்திருந்தார்.

எம்.கே.தியாகராஜ பாகவதரையும் எம்.எஸ். சுப்புலட்சுமியையும் திரை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் அவர்.

### கறுப்பில ஒரு கவர்ச்சி

தனலட்சுமியுடன் சுப்பிரமணியம் பேசிக்கொண்டிருந்த போது ஒரு பெண், காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

கறுப்பு நிறம். வேலைக்காரியோ என்று நினைக்கத்தக்க உருவம்.



சுப்பிரமணியத்தின் கேமரா கண்கள் அந்தப் பெண்ணை எடை போட்டன.

கறுப்பாக இருந்தாலும் கேமரா கோணங்களில் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இப்பெண் தோன்றுவாள் என்று நினைத்தார், சுப்பிரமணியம்.

யார் இந்தப் பெண்? என்று விசாரித்தார். என் சொந்தக்காரப்பெண். எனக்கு உதவியாக வந்திருக்கிறாள் என்றார், தனலட்சுமி.

நாளைக்கு இவளை ஸ்டுடியோவுக்கு அழைத்து வாருங்கள்.

மேக்கப் டெஸ்ட் போட்டுப் பார்ப்போம் என்று கூறிவிட்டுச் சென்றார், சுப்பிரமணியம்.

ஒப்பனைக் கலைஞர் ஓட்டம்

மறுநாள் சுப்பிரமணியத்தின் ஸ்டுடியோவுக்குச் சென்றார், ராஜகுமாரி.

சுப்பிரமணியம், அன்றைய புகழ் பெற்ற மேக்கப்மேன் ஹரிபாபாவுக்கு டெலிபோன் செய்தார்.

ஒரு பெண்ணை அனுப்புகிறேன். மேக்கப் போட்டு அனுப்புங்கள் என்றார்.

மேக்கப் போடுவதற்குத் தயாராகக் காத்திருந்தார். ஹரிபாபு.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த பெண்ணைப் பார்த்து மிரண்டு போனார்.

யாரம்மா நீ? என்று விசாரித்தார்.

என் பெயர் ராஜாயி.

மேக்கப் டெஸ்டுக்காக டைரக்டர் சுப்பிரமணியம் சார் என்னை அனுப்பியிருக்கிறார்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 316

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...நீங்கள் பெற்றுக் கொண்ட எதற்காகவாவது ஒருவரை நோக்கிய நன்றியுணர்வுடன் இருந்தால் அது வெறுமனே மனதின் நன்றியுணர்வுதான். அது நன்றியுணர்வின் ஆரம்பப்பள்ளி நிலை.

உண்மையான நன்றியுணர்வு என்பது உங்களுக்குள் நிகழும் ஒரு ஆழமான தாங்க முடியாத உணர்வு.

அது ஏதேனும் கிடைத்ததன் விளைவாக வருவதில்லை; வெறுமனே இருத்தலினாலேயே வருவது.

பரிவுமிக்க உயிராற்றலாகிய பிரபஞ்ச இருப்புத் தன்மையை எண்ணுந்தோறும் எழுவது, அவ்வளவே.

இந்த நன்றியுணர்விற்கு எந்தவிதமான உறவு முறையும் தேவையல்ல.

அது யாரையும் அல்லது எதையும் சார்ந்து இருப்பதல்ல.

அது இச்சை, கோபம், வெறுப்பு அல்லது அன்பு போன்ற உணர்ச்சிகளால் ஊசலாடிக்கொண்டு இருப்பதில்லை. அது வெறுமனே இருக்கிறது, அவ்வளவே.

நீங்கள் உங்கள் நன்றியுணர்வை வார்த்தைகளால் வெளிப்படுத்தக் காரணம் உங்கள் அஹங்காரம்தான்.

நீங்கள் மரியாதை தெரியாதவர் என்று மக்கள் எண்ணுவதை நீங்கள் விரும்பவில்லை. அதனால் அதை வெளிப்படுத்தும் கணத்திலேயே அதன் மதிப்பைக் குறைந்து விடுகிறீர்கள் அல்லது அதைப் போலியாக்கி விடுகிறீர்கள்.



உண்மையில் உங்கள் உடல்மொழியே உங்களுடைய நன்றியுணர்வின் நிலையைத் தெரிவித்துவிடும்.

உங்கள் கண்கள் தெரிவிக்கும்; உங்கள் புன்னகை தெரிவிக்கும்; உங்கள் அன்பும் உற்சாகமும் அதை வார்த்தைகளைவிட இன்னும் நன்றாகவே தெரிவித்துவிடும்.

நன்றியுணர்வினால் பெருகும் கண்ணீர் அதை வேறெதை விடவும் இன்னும் நன்றாகத் தெரிவிக்கும்.

உங்களால் தாங்க முடியாதபோது நீங்கள் தளும்பிக் கொண்டிருக்கும் பொழுது கண்ணீர் பெருகுகிறது.

நான் உங்களை அழச் சொல்லவில்லை! நீங்கள் பொங்கிப் பிரவகித்துக்கொண்டிருக்கும் பொழுது அதை உங்கள் உடல் வெளிப்படுத்திவிடும், அதை உங்களால் மறைக்க முடியாது. அதுவே உங்களுடைய இருப்புத் தன்மையின் நிலையைக் காட்டும் உண்மையான அறிகுறி என்றுதான் சொல்கிறேன்.

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள், இந்தக் கண்ணீர் எந்த ஜாதியையோ, இனத்தையோ அல்லது மதத்தையோ சார்ந்ததல்ல!

அதை ஹிந்துக் கண்ணீர், முஸ்லீம் கண்ணீர் என்று வகைப்படுத்த முடியாது; அது எந்த மதத்தையும் சேர்ந்ததல்ல.

அது இருப்புத் தன்மையைச் சேர்ந்தது; இருப்புத் தன்மை இவையெல்லாவற்றையும் கடந்தது.

நன்றியுணர்வு மனிதனால் உருவாக்கப்பட்ட எல்லாத் தடைகளையும் நெறிப்படுத்தல்களையும் கரைத்து விடக்கூடிய ஒன்றாகும்; அதனால்தான் அது இறுதியான உயர்ந்த பிரார்த்தனையாக இருக்கிறது.

ஆழமான எதையுமே ஒருபோதும் முழுமையாக வெளிப்படுத்திவிட முடியாது. கவிஞர்கள் அதை வெளிப்படுத்த கவிதைகள் எழுதலாம். ஓவியர்கள் அதை வெளிப்படுத்த ஓவியங்கள் வரையலாம்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# வெளி.அமைச்சின் போலி கையொப்பத்துடன் மதுபானசாலைக்கு அனுமதி பெறமுயற்சி

## மாத்தறையில் சம்பவம்

(கொழும்பு)

**வெளிவிவகார அமைச்சர் மாங்கள சமரவீரவின் போலியான கையொப்பத்துடன் கூடிய கடிதம் ஒன்றைப் பயன்படுத்தி உணவு விடுதி ஒன்றிற்கு மதுபான அனுமதிப்பத்திரம் பெற முயன்ற சம்பவம் தொடர்பாக மாத்தறை குற்றவியல் விசாரணைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

மாத்தறை கெகனதுர பகுதியில் அமைச்சின் இணைப்பு செயலாளர் உப்புள்சிறி கங்கல ஆராய்ச்சி மேற் கொண்ட முறைப் பாட்டிற்கு அமைவாக பொலிஸார் விசார ணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சநதேக நபர் அமைச்சரின் போலி கையொப்பம் மற்றும் போலி இறப்பர் முத்திரை என்பவற்றுடன் கூடிய கடிதத்தைப் பயன்படுத்தி உள்நாட்டு அலுவல்கள் விவகாரங்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற முயற்சிக்கப்பட்டுள்ளதாக முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபானசாலைகளுக்கு புதிதாக அனுமதிப் பத்திரம் வழங்கும் திட்டம் இல்லாத நிலை யில் புதிய அனுமதிப்பத்திரம் கோரும் கடிதம் கிடைக்கப் பெற்றதனால் மாத்தறை பிரதேச செயலர் ரஞ்சித் யாப்பா இது குறித்து சந்தேகம் கொள்ள நேரிட்டுள்ளது. இதனால் மேற்படி கடிதம் குறித்து ஆய்வு செய்தபோது அது போலியானது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக மாத்தறை பொலிஸாரினால் மாத்தறை நீதி வான் நீதிமன்ற நீதிபதி உரேஷா டி சில்வாவுக்கு அறிவிக்கப் பட்டதையடுத்து மேற்படி கடிதத்தின் உண்மைத்தன்மை பற்றி ஆராய்வதற்கு அத்னை அரசாங்க பகுப்பாய்வா ளர்களுக்கு அனுப்பி அது தொடர் பான அறிக்கையை சமர்ப்பிக்கு மாறு பணித்துள்ளார். இதேவேளை சந்தேக நபரை கைது செய்யும் பொருட்டு சம்பந் தப்பட்ட கடிதங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

சந்தேகநபரான வர்த்தகர் கடந்த அரசின் காலத்தில் மதுபான அனு மதிப்பத்திரம் பெறமுயன்ற போது பொதுமக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டிருந்தது. (3)

### கைத்துப்பாக்கி வைத்து மிரட்டி

# பல்கலைக்கழக மருத்துவ மாணவன் வங்கியில் ரூ.5 இலட்சம் கொள்ளை

பாணந்துறை வங்கி அதிகாரிக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து 5 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்த இலங்கை பிரஜையான ரஷ்ய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாண வருக்கு 10 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளதுடன் அரச செலவாக ரூபா 3000 ரூபாவை செலுத்துமாறும் பாணந்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதியும் மேலதிக மாவ ட்ட நீதிபதியுமான ருச்சிர வெலிவிட்ட உத்தரவிட்டுள்ளார்.

காலியில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு கடந்த 8 ஆம் திகதி சென்ற மேற்படி நபர் கைத்துப்பாக்கியைத் தன்னுடன் வைத்திருப் பதாகவும் சத்தமிட்டாலோ அல்லது அலாரம் ஒலியை எழுப்பினாலோ சுடப்படுவார் என எச்சரித்த பிரஸ்தாப நபர் 5 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

பிரஸ்தாப மாணவன் கடந்த 4 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, தனது கல்வி நடவடிக்கைகளுக்காக பணத்தை கொள்ளையடித்ததாக ஒப்புக் கொண்டுள்ளார். இதனை கவனத்திற்கு எடுத்துக் கொண்ட நீதிபதி குற்றச் செயலுக்கான தண்டனையை ஒத்தி வைத்ததுடன் அரச செலவை செலுத்துமாறும் உத்தரவிட்டார். (3)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயமலர் செல்வராஜா (மலர்)



யாழ். கொக்குவில் பிரம்படியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயமலர் செல்வராஜா அவர்கள் 03.11.2015 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதன், மனோன்மணி அம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், தங்கமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வராஜா (ஓய்வு பெற்ற சிறாப்பர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், விஜயநாதன் (லண்டன்), மகாநாதன் (ஓய்வு பெற்ற கணித ஆசிரிய ஆலோசகர், யாழ். கல்வி வலயம்), செல்வநாதன் (லண்டன்), யோகநாதன் (லண்டன்), மாலினி (மாலா), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுலோஜனா (லண்டன்), வானதி, இரட்னேஸ்வரி (லண்டன்), ஜெயநந்தினி (லண்டன்), விஜ யேந்திரன் (சவுதி அரேபியா), சுவர்ணா (ஜேர்மனி), தாமோதரம்பிள்ளை (தேவராசா- தொழில்நுட்ப உத்தியோகத்தர்), ரவிராஜா (சுவிஸ்) ஆகி யோரின் அன்பு மைத்துனியும், ஜெயந்தி, வசந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகலியும், ஜனார்த்தனி, லலிந்திகா, சாம்பவி- ஐங்கரன், சுமந் திரன், கௌரங்கன், சஞ்ஜய், விஜய், திவ்வியா, கஜானி, கஜப்பிரியா, கஜீனா ஆகியோரின் அன்பு மாமியும், துளசிதா, யதார்த்தன், கவாஸ்கர்- நிவேதிகா, தர்மினா- றஜீகரன், ஷாலினா, ரஜீஸ்கர், கவாஸ்கர், சுபாஸ் கர் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், அனுப்பிரியாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 08.11.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


(2253)

**இல-57, பிரம்படி லேன்,**
**கொக்குவில்.**
**021 205 2353**


**தகவல்:**
**இ.செல்வராஜா(கணவர்)**
**நாகநாதன் குடும்பத்தினர்.**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 539


சுரேஷ் குமார்




சஜீ




பாலா பாலேந்திரன்




சேவராஜா




ஜாக்ஷன்




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# வடக்கில் மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின்விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

அந்த வகையில், 07.11.2015 சனிக்கிழமை யாழ்.பிரதேசத்தில் கூளாவடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதி, சேச் லேன், முள்ளிம் ஒழுங்கை, கூளாவடி இராணுவ முகாம், உடுப்பிட்டி V.C. இலந்தைகாடு, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை, ஆலடி, நெடிய காடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி, பொக்கணைச்சந்தி, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி, அண்ணாசிலையடி, மணடான் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்,

08.11.2015 ஞாயிறுக் கிழமை யாழ். பிரதேசத்தில் கல்வியங்காடு இராமலிங்கம் சந்தி, கல்வியங்காடு ஆடியபாதம் வீதி, கோப்பாய் பொலிஸ நிலையம், பாற்பண்ணை, முடமாவடி கிளிகடை சந்தி, திருநெல்வேலி சந்தை பிரதேசம், இரும்புமதவடி, சக்களாவத்தை, மயிலப்புலம், மடத்துவெளி, ஆலடி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், செட்டிப்புலம், வங்களாவடி, வேலணை, புங்குடுதீவு கடற்படைமுகாம், கலைப்பீடம் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும கிளிநொச்சி பிரதேசத்தில் உமையாள்புரம், ஆனையிறவு, தட்டுவன் கோட்டை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம், பட்டாணிச்சூரிலிருந்து செட்டிக்குளம் வரை, நெளுக் குளத்திலிருந்து பம்பைமடு வரை, வவுனியா தொழிநுட்பக் கல்லூரி, வவுனியா கல்லூரி, மாமடு விலிருந்து பொகஸ்வேவ வரை, மடுகந்த, கருவேலப்புளியங் குளம், மலையா பருத்திக்குளம், CEC கல்லுடைக்கும் ஆலை, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, மடுகந்த தொலைத்தொடர்பு நிலையம், செட்டிக்குளம் வைத்தியசாலை, ஒமேகா லைன், செட்டிக்குளம் தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பிரமனாலங்குளத்திலிருந்து மடுப்பிரதேசம் வரை, முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்டமுசலி, மறிச்சுக்கட்டி, கூளாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, அரிப்பு, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 06.11.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 139.09 | 143.65 |
| பவுண்ட் | பிரிட்டன் | 210.74 | 219.31 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 150.37 | 157.21 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.75 | 145.32 |
| டொலர் | கனடா | 104.97 | 109.87 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.35 | 103.53 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.42 | 102.71 |
| யென் | ஜப்பான் | 1.137 | 1.1881 |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரையின் | டினார் | 375.4711 |
| குவைத் | டினார் | 446.8931 |
| ஓமான் | ரியால் | 367.6840 |
| கட்டார் | ரியால் | 38.8933 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.7463 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.5402 |

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சுன்னாகம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 300 | 300 | 350 |
| தக்காளி | 140 | 140 | 160 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 80 | 120 | 80 |
| கரட் | 80 | 100 | 80-120 | 160 | 80 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 120 | 70 | 120 | 160 | 70 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 110-130 | 160 | 160 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 280 | 220 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 160 | 150 | 100 | 200 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 30 | 40 | 80 | 50 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 150 | 200 | 200 |
| போஞ்சி | 240 | 220 | 200 | 240 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | – | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 50 | 40 | 50 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – |
| வெங்காயப்பூ | 200 | – | 80 | – | 200 |
| முள்ளங்கி | 40 | 60 | 200 | 120 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 30 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் ஆனார் 29



நேருவுடன் பண்டாரநாயக்க குடும்பத்தினர்

### தபால் ஆபீஸ்

ஏப்ரல் 14 ஆம் திகதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, அவர் அரசு தபால் நிலையத்துக்குச் சென்றார்.

தபால் அதிகாரி (போஸ்ட் மாஸ்டர்) இருக்கையில் அமர்ந்து, தபால் தலைகளைப் பொது மக்களுக்கு வழங்கினார்.

அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

### நெருக்கடி நிலை

இதைத் தொடர்ந்து ஏப்ரல் 17 ஆம் திகதி நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது.



செல்வநாயகமும் தமிழரசுக் கட்சியின் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

தொண்டர்களும் வேட்டையாடப்பட்டனர்.

தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை ஒடுக்க இராணுவம் பயன்படுத்தப்பட்டது.

போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு இராணுவம் ஒடுக்கியது.

செல்வநாயகமும் மற்றும் 8 பேர்களும் 6 மாதங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

மற்றவர்கள் 3 ஆண்டு ஜெயில் தண்டனை அனுபவித்தனர்.

### தமிழ்ப் பள்ளிகள்

தமிழ்ப் பள்ளிக்கூடங்களை அரசுடமை ஆக்கி சிறிமாவோ உத்தரவிட்டார்.

அந்தப் பள்ளிக் கூடங்களில் பாடத் திட்டங்கள் மாற்றப்பட்டன.

சிங்கள இனத்தின் வரலாறு போதிக்கப்பட்டது.

புத்த மதத்தின் சிறப்பை விளக்கி பாடம் நடத்தப்பட்டது.

தமிழர்கள் இதை எதிர்த்த போதிலும் பலன் ஏதும் இல்லை.

சிங்களப் பகுதிகளில் இருந்த பல தமிழ்ப் பள்ளிகள் மூடப்பட்டன.

பல பள்ளிகள் சிங்களப் பள்ளிகளாக மாற்றப்பட்டன.

தமிழர்களின் குழந்தைகள் சிங்களம் படித்தே தீர வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர்.

### அரசு ஊழியர்களுக்கு ஆபத்து

இந்த நிலையில் 1961 டிசெம்பரில் புது உத்தரவு ஒன்றை சிறிமாவோ பிறப்பித்தார்.

அரசு ஊழியர்கள், வேலையில் நீடிக்க வேண்டுமானால், சிங்களம் படிக்க வேண்டும். சிங்கள மொழியில் புலமை பெற வேண்டும். அப்போது தான் வேலையில் நீடிக்க முடியும் என்பதே அந்த உத்தரவு!

சிங்களம் படிக்க விரும்பாத தமிழ் ஊழியர்கள், மலேசியா, கானா, நைஜீரியா, ஜாம்பியா முதலிய நாடுகளில் வேலை தேடிக் கொண்டு இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

தமிழர்கள் புதிதாக அரசு வேலையில் சேர முடியாத நிலைமை ஏற்பட்டது.

சிங்களம் தெரிந்தவர்கள் மட்டுமே வேலைக்கு விண்ணப்பிக்க முடியும்.

### நேரு மறுப்பு

இலங்கையில் பிரஜா உரிமை மறுக்கப்பட்டு நாடற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்ட தமிழர்கள் எண்ணிக்கை 10 லட்சமாக உயர்ந்திருந்தது.

அவர்களை இந்தியா ஏற்க வேண்டும் என்று சிறிமாவோ வலியுறுத்தத் தொடங்கினார்.

அப்போது இந்தியாவின் பிரதமராக நேரு இருந்தார்.

சிறிமாவோவின் கோரிக்கையை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினரை ஏற்றுக் கொள்ள நேரு சம்மதித்துவிட்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியது.

அதைப் பார்த்து நேரு கோபம் அடைந்தார்.


இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் பிரஜா உரிமை தரவேண்டும்.

அவர்களை ஆடு- மாடு போல் கருதி சிங்கள அரசு பேச்சு நடத்த முயன்றால் நான் சம்மதிக்க மாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இந்த நிலையில் 1964 மே 27 ஆம் திகதி நேரு காலமானார். (தொடரும்)

# 10 இலட்சம் தொழில் வழங்கும் திட்டம் ஐந்து வருடத்தில் பூர்த்தி செய்யப்படும்

## இடைக்கால பொருளாதார திட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிவு



10 இலட்சம் தொழில் வழங்கும் திட்டம் 5 வருடத்தில் பூர்த்தி செய்யப்படும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளுடன் புதிய அரசாங்கத்தின் இடைக்கால பொருளாதார கொள்கைத் திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பூாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

மூன்றாவது பரம்பரையை இலக்கு வைத்ததாக தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் ஊடாக கடந்த ஆட்சியினால் வீழ்ச்சியடைந்த எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் நாட்டை முன்னேற்றவும் அவசியமான பல வேலைத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மூன்றாவது பரம்பரைக்கான பொருளாதார கொள்கையை இலக்கு வைத்ததாகவே 20ஆம் திகதி புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்படும் எனவும், 2023 ஆம் ஆண்டில் நாடு சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் நிறைவடையும் நிலையில் ஆசியாவின் பலம் வாய்ந்த பொருளாதாரத்தைக் கொண்ட இராச்சியமாக மாறுவதற்கு இலங்கைக்கு அவகாசம் கிடைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணிக்கு பாராளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. வாய்மொழி மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் புதிய அரசாங்கத்தின் இடைக்கால பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தை பிரதமர் பாராளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிற்பகல் 1.55 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலங்கள் பிரதமர் உரையாற்றியிருந்தார். அரசின் பொருளாதார கொள்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்கள் வருமாறு.

* 10 இலட்சம் தொழில் வழங்கும திட்டம் 5 வருடத்தில் பூர்த்தி

* கல்வி, சுகாதாரத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல்

* 10 வருடங்கள் அரச காணிகளில வாழ்வோருக்கு நிரந்தர உறுதி

* நகர், நகரை அண்மித்த பகுதிகளில் வாழ்வோருக்கு மாடி வீட்டுத் திட்டம்

* நெல் கொள்வனவுக்கு புதிய முறை, விவசாய காப்புறுதியும் அறிமுகம்

*காலத்துக்கேற்ற பொருத்தமான தேசிய ஓய்வூதிய முறை

* ஐந்து வருட காலத்தில் கிராமிய நகர மற்றும் நகரை அண்டிய பிரதேசங்களில் ஐந்து இலட்சம் வீடுகள் நிர்மாணிக்க நடவடிக்கை

*தற்காலத்துக்குப் பொருத்தமான வகையில் புதிய தேசிய ஓய்வூதிய முறை அறிமுகம்

* நெல் கொள்வனவு நடவடிக்கைகள் முழுமையாக புனரமைக்க நடவடிக்கை. விவசாய உற்பத்திகளுக்கு காப்புறுதி முறை அறிமுகம்

*முதலீட்டாளர்களுக்கு வழங்கும் வரிச் சலுகைகள் குறித்து மீளாய்வு குறைந்த வரி அறவிடும் நாடாக மாறுவதே இலக்கு

* இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவுடன் வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்து. ஜீ.எஸ்.பி சலுகை ஊடாக ஐரோப்பிய சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்க நடவடிக்கை

* உலகில் முதல் தரமான சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கும் நகரமாக மேல்மாகாணத்தை மாற்றுதல்

*பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கு மூன்றுவருட வட்டியில்லா கடன்

*வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் வகையில் விமான சேவைகளுக்கு முன்னுரிமை

* நாட்டில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தி துரித அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு கிடைத்துள்ள இந்தப் பொன்னான சந்தர்ப்பம் மீண்டும் கிடைக்காது.

* எதிர்வரும் இரண்டு வருட காலத்தில் பொருளாதார அரசியல், சமூக, கல்வி மற்றும் சுகாதார துறைகளை பலப்படுத்தி மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

* மந்த் கதியான உலகப் பொருளாதார அபிவிருத்தி சூழலில் இலங்கையின் பொருளாதாரத்தை நடுநிலையாக பேணுதல்

* பொருளாதார இலக்குகளை அடைவதற்காக சாதகமான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்ப்பு

* கடன்சுமையைக் குறைத்து நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நம்பகரமானநடவடிக்கைமுன்னெடுப்பு

* வியாபாரத் துறையின் நம்பகத் தன்மையை பலவீனப்படுத்தும் எதிர்காலத்தை இலக்குவைத்த வரிகளை இரத்து செய்தல்

*முதலாம் பரம்பரையை இலக்குவைத்து ஜே.ஆர்.ஜயவர்த்தனவினால் சமூக பொருளாதார புனரமைப்பு அறிமுகம். இரண்டாவது பரம்பரைக்கான பொருளாதார புனரமைப்பு ஆர்.பிரேமதாசவின் ஆட்சியில் அறிமுகம். பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் மூன்றாவது பரம்பரைக்கான பொருளாதார புனரமைப்பு செயற்றிட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் அறிமுகம்.

* அரச தொழில்முயற்சிகளை முன்னேற்ற முழுமையான அரசுக்குச் சொந்தமான தனியார் நிறுவனமொன்றை ஸ்தாபித்தல்

* உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை

* ஊழியர்சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை ஒன்றிணைத்து தேசிய ஓய்வூதிய பணிக்கொடை நிதியம் என்ற பெயரில் புதிய நிதியம் உருவாக்குதல். 1.7 ட்ரில்லியன் ரூபா சொத்துக்களை இந்த நிதியத்தின் கீழ் கொண்டுவருதல். அரசியல் வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் தேவையானவாறு இதிலுள்ள நிதியை வீணடிக்க இடமளிக்கப்படமாட்டாது.

*மத்திய வங்கியின் பொறுப்பிலிருந்து ஊழியர் பொறுப்பு நிதியம் மற்றும் பங்கு பரிவர்த்தனை பொறுப்புக்களை அகற்றுதல்

* சகல அரசாங்க கொள்வனவுகள், கேள்விப் பத்திரங்கள் அனைத்தையும் கையாள மத்திய கொள்முதல் செயலக அலுவலகம் ஒன்றை ஸ்தாபித்தல்

* விவசாயிகளின் பொருளாதார மேம்பாடு, கிராமிய பொருளாதார மேம்பாடு என்பவற்றுக்கென குறுங்கால துரித அபிவிருத்தி வேலைத்திட்டம்

* கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த கிராம அரச அபிவிருத்தி கேந்திரங்கள் 2005 ஸ்தாபிப்பு

*விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்காக முழுமையான அதிகாரம் கொண்ட தேசிய விவசாய விநியோக அதிகார சபையை நிறுவுதல்

* சிறிய மட்டத்திலிருந்து பாரிய மட்டம்வரை விவசாயத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு உச்ச நிவாரணங்கள் மற்றும் வசதிகள்

* அரசாங்கம் பொறுப்பேற்ற தனியார் தொழில்முயற்சிகளை மீள வழங்குவது குறித்து மீளாய்வு

*முதலீட்டாளர்களுக்கு வழங்கும் வரிச் சலுகைகள் குறித்து மீளாய்வு குறைந்த வரி அறவிடும் நாடாக மாறுவதே இலக்கு

* தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் இடையூறுகளை நீக்க நடவடிக்கை

*தொழில்முயற்சியாளர்களுக்கு 2016 முதல் வரிச்சலுகை

* இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவுடன் வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்து. ஜீ.எஸ்.பி சலுகை ஊடாக ஐரோப்பிய சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்க நடவடிக்கை

*உலகில் முதல் தரமான சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கும் நகரமாக மேல்மாகாணத்தை மாற்றுதல்

* ஒரு நாளைக்கு 40 முதல் 50 டொலர்கள் செலவிடுவதற்குப் பதிலாக 150 முதல் 200 செலவிடும் சுற்றுலாப் பயணிகளை அழைப்பதற்கு நடவடிக்கை

* வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் வகையில் விமான சேவைகளுக்கு முன்னுரிமை

* மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றை வருமானம் ஈட்டும் பயனுள்ள நிறுவனங்களாக மாற்ற ஏற்பாடு

* யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களை முன்னேற்றுவதற்கான 2016ஆம் ஆண்டில் உதவி வழங்கும் மாநாடொன்றை நடத்துவது குறித்து ஜப்பானுடன் பேச்சுவார்த்தை

* உயர்தரம் வரை பாடசாலை கல்வியை கட்டாயமாக்குவோம். ஒரு வகுப்புக்கான மாணவர் தொகையை 35 ஆக மட்டுப்படுத்தல்

* பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கு மூன்றுவருட வட்டியில்லா கடன்

*சகல பல்கலைக்கழகங்களிலும் இலவச வைபை வசதி

* பல்கலைக்கழகம் நுழையாத உயர்தர வகுப்பில் சித்தியடைந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக வவுச்சர் முறையை அடுத்த வருடம் முதல் பரீட்சார்த்தமாக ஆரம்பித்தல்

*அறிவு மற்றும் திறமைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வரி நீக்கம் முதற்கட்டமாக புத்தகம், விளை யாட்டுப் பொருட்களுக்கான வரி நீக்கம்

* உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிக்கும் வேலைத்திட்டத்தை உடனடியாக செயற்படுத்தல். உழைக்கும் தாய்மார் அடங்கலான சகல பெண்களினதும் வருமானம் வாழ்க்கைத்தரம் என்பவற்றை மேம்படுத்த நடவடிக்கை.

* சகலரையும் திருப்திப்படுத்தும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல். அபிவிருத்தியின் பலன்கள் பகிர்ந்து செல்வதில் உள்ள முரண்பாட்டைக் கட்டுப்படுத்தும் பொருளாதாரம். நிரந்தர அபிவிருத்திக்கு வழியமைக்கும் பொருளாதாரமே அரசாங்கத்தின் இலக்கு

* மூன்றாவது பரம்பரைக்கான பொருளாதார கொள்கையை இலக்கு வைத்ததாகவே 20ஆம் திகதி புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் முன்வைப்பு. எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவைப் பிரிவின் பரிசோதகர், பயிற்சித் தரம் (இல. தொ. சே.) மற்றும் சட்ட வரைஞர், பயிற்சியாளர் (இல. தொ. சே.) இற்காக ஆட்சேர்க்கும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறு ஒருபாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரேஅமர்வில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக தாபனம், இல. 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர் வரும் நவம்பர்மாதம் 30ஆம் திகதிஅல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

## 60 குடும்பங்களுக்கு இன்று மரக்கன்றுகள்

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் விவசாய வனவியல் திட்டத்தின் கீழ் மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதியில் புத்தூர் வாதரவத்தை கிராமத்தில் உள்ள 60குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று மு.ப.10மணிக்கு வாதரவத்தை விக்னேஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் கீ.சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைப்பதோடு முக்கிய நிகழ்வாக பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகளும் வழங்கி வைக்கப்படும். இத் திட்டத்தில் அடுத்த கட்டமாக அரியாலை கிராமத்தில் உள்ள 91 குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கலைவிழா நிகழ்வும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்.மல்லாகம் பகுதியில் அமைந்துள்ள Little Mas ters Montesoori முன்பள்ளி நிலையத்தின் கலைவிழா மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் பகுதியில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்விவலய உடற் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்திருமதிகு.சோகலை, வலிகாமம் கல்வி வலய முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரி, தெல்லிப்பழை பிரதேச செயலக முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.பிரதீபன், தெல்லிப்பழை ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ஜெ.மயில்வாகனம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மாவட்ட உள சமூக அதிகாரி கு.கௌதமன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக இ.அ.சே. தரம்-1 ஓய்வுநிலை அதிபர் அ.மு. அருணாச்சலம், யாழ். சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் பொ.தவரஞ்சினி, யாழ். கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலய ஆசிரியர் எஸ்.ஜெயந்தன், யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்யா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)



# சிறுவர் அரங்கம்

1285

## குட்டி இளவரசி!

....ஒருமுறை வானத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தவள் என்னிடம் இப்படிக் கேட்டாள்:-

"வானம் ஏன் இவ்வளவு பெரிசா இருக்கு? குட்டி வானம் ஏதாச்சும் இருக்கா சித்தப்பா?"

தும்பைப் பூவிலிருந்த பனித்துளியை அவளிடம் காட்டினேன். அதையே ஆச்சரியத்துடன் ரொம்ப நேரம் பார்த்தாள்.

"ஐ! இந்த வானம் தான் ரொம்ப அழகா இருக்கு சித்தப்பா. இதுலே நானும் தெரியிறேன் சித்தப்பா" என்று வியந்துபோனாள் ஆனந்தி.

தும்பைப் பூ
வானம்
துளித்துளியாய்
வானம்
ஆனந்தியின்
வானம்
அழகான
வானம்

என்று நான் பாடியதும், குட்டி இளவரசி கையைத் தட்டிக்கொண்டே ஆட ஆரம்பித்தாள்.

ஒருநாள் வீட்டுக்கு அருகே இருந்த புல்மேட்டில் எதையோ பார்த்துக்கொண்டு கைதட்டிச் சிரித்துக்கொண்டிருந்தாள்.

"என்னோட ஆனந்திக் குட்டிக்கு, இன்னைக்கு என்ன ஒரே குஷி?" என்று கேட்டேன். "அங்க பாரு சித்தப்பா, தட்டான் நிறையப் பறக்குது" என்றாள்.

"ஆமாம். தரையோடப் பறக்குது. அப்படின்னா மழை வரப் போகுதுன்னு அர்த்தம்" என்றேன்.

"ஏன் சித்தப்பா?" என்று கேட்டாள் ஆனந்தி.


"தட்டான்கள் தாழப் பறந்தா, மழை வரும்னு சொல்லுவாங்க" என்றேன்.

"மழை வரப்போறது எனக்கும் தெரியனும்னா, நான் என்ன செய்யணும் சித்தப்பா?" என்று கேட்டாள்.

நான் சொன்னேன், "அதுக்கு நீயும் தட்டானா ஆகணும்" என்றேன்.

அதைக் கேட்டுவிட்டு ரொம்ப நேரம் யோசித்துக்கொண்டிருந்தாள்.

எதையோ பார்த்துவிட்டு என்னை இப்படிக் கேட்டாள், "நான் தட்டானா ஆனேன்னா, என்னையும் இதுமாதிரி கரிச்சான் குருவி பிடிச்சுத் தின்னுடுமே?" - அங்கே ஒரு கரிச்சான் குருவி தட்டான்களை பறந்து பறந்து வேட்டையாடிக் கொண்டிருந்தது. "கரிச்சானுக்குள்ளேயும் வானம் இருக்கும். அதிலும் தட்டான் பறக்கும்" என்றேன்.



"அப்படின்னா, தட்டானுக்குள்ளேயும் வானம் இருக்குமா சித்தப்பா?" என்று கேட்டாள்.

"ஆமாண்டி குட்டி. தட்டானுக்குள்ளேயும் வானம் இருக்கும். அதில் நீதான் பறந்துகிட்டிருக்கே" என்றேன்.

"ஐ தட்டானுக்குள்ள வானம். அதுல நானா? சித்தப்பா, நீங்க சொன்னது அழகா இருக்கு. இத அப்படியே பாட்டா சொன்னா நல்லா இருக்குமில்லே!" என்று கேட்டாள். (முற்றும்)

11.2015
07

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 - உலகின் மிகப் பழமையான விண்கல் மோதல் பிரான்சில் இடம்பெற்றது.
- 1502 - கொலம்பஸ் ஹொண்டூராஸ் கரையை அடைந்தார்.
- 1665 - உலகின் பழமையானதும் இப்போதும் வெளிவரும் த லண்டன் கசெட் (The London Gazette) முதலாவது இதழ் வெளியானது.
- 1893 - கொலராடோ மாநிலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1910 - உலகின் முதலாவது விமானத் தபால் பொதிச் சேவை ரைட் சகோதரர்களால் ஒகையோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1917 - அக்டோபர் புரட்சி: விளாடிமிர் லெனின் தலைமையில் கம்யூனிசப் புரட்சியாளர்கள் ரஷ்யாவின் இடைக்கால அரசாங்கத்தைக் கவிழ்த்தனர்.
- 1917 - முதலாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் ஓட்டோமான் பேரரசிடமிருந்து காசாப் பகுதியைக் கைப்பற்றின.
- 1918 - மேற்கு சமோவாவில் பரவிய ஒருவித நச்சு (வைரஸ்) நோய் காரணமாக 7,542 பேர் ஆண்டு முடிவிற்குள் இறந்தனர்.
- 1931 - மா சே துங் சீன சோவியத் குடியரசை ஒக்டோபர் புரட்சியின் நினைவு நாளில் அறிவித்தார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: "ஆர்மேனியா" என்ற சோவியத் மருத்துவக் கப்பல் ஜேர்மனிய விமானங்களின் குண்டுவீச்சில் மூழ்கியது. 5,000 பேர் வரையில் இதில் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1728 - ஜேம்ஸ் குக், ஆங்கிலேய நாடுகாண் பயணி, கடற்படை அலுவலர் (இ. 1779)
- 1867 - மேரி க்யூரி போலந்து மற்றும் பிரஞ்சு வேதியியல் அறிஞர், நோபல் பரிசு பெற்றவர், (இ. 1934)
- 1879 - லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர், (இ. 1940).
- 1888 - சி. வி. இராமன், இந்திய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர், (இ. 1970).
- 1913 - அல்பேர்ட் காம்யு - நோபல் பரிசு பெற்ற பிரஞ்சு எழுத்தாளர், (இ. 1960).
- 1954 - கமல்ஹாசன், தமிழ் நடிகர்.
- 1959 - ஸ்ரீநிவாசு, பாடகர்
- 1981 - அனுஷ்கா செட்டி, இந்திய நடிகை

### இறப்புகள்

- 644 - உமறு இப்னு அல்-கத்தாப், இசுலாமியக் கலீபா (பி. 590)
- 1862 - பகதுர்ஷா ஜஃபர், பேரரசர், விடுதலைப் போராட்ட வீரர்
- 1913 - ஆல்ஃவிரடு அரசல் வாலேசு, ஆங்கில உயிரியலாளர் (பி. 1823)
- 1947 - கோ. நடேசையர், இலங்கையின் மலையகப் பத்திரிகையாளர் (பி. 1887)
- 1962 - எலினோர் ரூசுவெல்ட், அமெரிக்க அரசியல்வாதி (பி. 1884)
- 1993 - திருமுருக கிருபானந்த வாரியார், ஆன்மீகவாதி, (பி. 1906)
- 2000 - சி. சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி, (பி. 1910)

### கமல்ஹாசன்



கமல்ஹாசன் நவம்பர் 7, 1954, ஆம் ஆண்டு பிறந்தார். இவர் புகழ் பெற்ற இந்தியத் திரைப்பட நடிகர் ஆவார். இவர் சில திரைப் படங்களை இயக்கியும் உள்ளார்.

இவரின் மாறுபட்ட வேடங்களைக் கொண்ட நடிப்பிற்காக பரவலாக அறியப்படுகிறார்.

கமல்ஹாசன் 4 தேசிய விருதுகள், 19 பிலிம்பேர் விருதுகள் உள்ளடங்கலாக பல இந்திய விருதுகளை வென்றுள்ளார், இவர் சிறந்த பிறமொழிப்படத்திற்கான அகாதமி விருதிற்கு இந்தியாவிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட திரைப்படங்களில் அதிக மானவற்றிலும் நடித்திருந்தார்.

நடிகராக மட்டுமல்லாது திரைக்கதையாசிரியர், இயக்குநர், பாடலாசிரியர், பின்னணிப்பாடகர், நடன அமைப்பாளர் எனப் பன்முகத்தன்மை கொண்டவராக விளங்குகின்றார்.

இந்திய திரைத்துறைக்கு ஆற்றிய பணிக்காக பத்மஸ்ரீ விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சத்தியபாமா பல் கலைக்கழகம் கமல்ஹாசனிற்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

2009 இல் 50 ஆண்டுகளை திரைத்துறையில் நிறைவு செய்த இந்திய நடிகர்கள் மிகச்சிலரில் ஒருவரானார்.

கமல்ஹாசன், தமிழ் தவிர இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், வங்காளம் ஆகிய மொழித் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். ராஜ்கமல் பிலிம்ஸ் என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நடத்தி வருகின்றார்.

உயர்ந்த எண்ணங்கள் உடையோர் ஒருநாளும் தனித்தவராகார்.

– சாப்லிப் சிட்னி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருக்கு ஓர் அன்பு மடல்

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது அவைத் தலைவர் என்ற பெருமை தங்களுக்குரியது. தாங்கள் நல்லூர்க் கந்தன் மீது அளவு கடந்த பக்தி கொண்டுள்ளமையை நாம் நன்கு அறிவோம்.

எனவே அரசியல்வாதிகளை விட நல்லூர்க் கந்தப் பெருமானின் மீதே உங்களுக்கு அதீத நம்பிக்கை இருக்கும் என்பது நம் எண்ணம்.

நிர்வாக சேவையில் மிகுந்த அனுபவம் வாய்ந்த தாங்கள் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படுவது போன்ற நிலைமையை காண முடிகிறது. வடக்கின் முதலமைச்சரை எதிர்க்க வேண்டிய தேவை தங்களுக்கு இருக்க மாட்டாது என்று நாம் கருதுகிறோம்.

இருந்தும் கொழும்புத் தமிழ் அரசியல் தலைமையின் வழிப்படுத்தலில் நீங்கள் செயற்படுவது போன்ற பாங்கு தெரிகிறது.

நல்லூர்க் கந்தனால் உங்களுக்கு வடக்கு மாகாண சபையின் உன்னதமான அவைத் தலைவர் பதவி தரப்பட்டுள்ளது. அந்தப் பதவியில் இருந்து கொண்டு உங்கள் நிர்வாகத் திறனைக் காட்டுவீர்கள் என்று நாம் நம்பினோம்.

ஆனால் வடக்கு மாகாண சபையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதாக சபை நடவடிக்கைகள் அமைந்திருப்பது கண்கூடு.

அதிலும் குறிப்பாக தாங்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகச் செயற்படுவது தெட்டத்தெளிவாகிறது.

வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக தாங்கள் செயற்படுவது எந்தளவுக்கு நியாயமானது என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

பாராளுமன்றத்தில் சபாநாயகர், பிரதமரிடம் கேள்வி கேட்டால் அந்தப் பாராளுமன்றத்தின் நிலைமை எப்படி ஆகும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தச் சிந்தனையில் உங்களுக்கு நியாயம் இருப்பதாக தெரியாவிட்டால், வடக்கின் முதலமைச்சராக குழப்பம் செய்கின்ற ஒருவர் இருப்பாராக இருந்தால் உங்களின் கேள்விகளுக்கு அவரின் பதில் என்ன வடிவமாக அமையும் என்பதை ஒரு கணம் கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்போது நிலைமை தெரியும்.

அன்புக்குரிய அவைத் தலைவர் அவர்களே! உங்கள் மீது மிகுந்த மதிப்பு எமக்கு உண்டு. அதே நேரம் உங்களின் நிர்வாகத்திறன் வடக்கு மாகாண சபைக்கு நல்லதொரு வளமாக அமையவேண்டும் என்பது நம் எதிர்பார்ப்பு.

அதற்காகவே இக் கடிதம் எழுதுகின்றோம். தயவு செய்து தமிழினத்தை விற்றுப் பிழைக்கும் கொழும்புத் தமிழ் அரசியல் தலைமைக்கு விசுவாசமாக நடக்க நினைத்து வடக்கின் முதலமைச்சரை நோகடிக்காதீர்கள்.

நல்லூர் முருகா என்று உச்சரிக்கின்ற நீங்கள் இதைச் செய்யக் கூடாது. உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள் எங்கள் இனத்துக்கு கொழும்பு தமிழ் அரசியல் தலைமை செய்வதெல்லாம் சரியா என்று.

எனவே உங்களை தெரிவு செய்தவர்கள் தமிழ் மக்கள். அதே தமிழ் மக்கள்தான் முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் தெரிவு செய்தார்கள்.

இந்நிலையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை பிரித்து முதல்வருக்கு எதிராகச் செயற்படும் ஓர் அணியை சபையில் உருவாக்கி குழப்பம் விளைவிக்கும் நோக்கங்களுக்கு தாங்கள் இடம் கொடுக்காமல் முதலமைச்சருக்கு நீங்கள் உதவியாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம்.

## முன்னாள் எம்.பியின் உருவச் சிலை திறப்பு

(கரணவாய்)

வடமராட்சி நெல்லியடி பேருந்து நிலையத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி சபாநாயகரும் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் உருவச்சிலை திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு உருவச்சிலையினை திறந்து வைக்கவுள்ளார். (இ-5,60)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 4ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## யாழ்.செயலகத்துக்குள்ளேயே மக்கள் இலவச சேவைகளைப் பெற முடியும்
## இடைத்தரகர்களிடம் செல்லாதீர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு சேவைகளை பெற்றுக்கொள்ள வரும் பொது மக்கள் அருகிலுள்ள இடைத்தரகர்களிடம் செல்ல வேண்டாம் எனவும் பொதுமக்களுக்கான இலவச சேவைகளை மாவட்டச் செயலகத்தினுள்ளேயே பெற்றுக்கொள்ள முடியுமென யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு சேவைகளை பெற்றுக்கொள்ளவரும் பொதுமக்களிடம் மாவட்டச் செயலகத்துக்கு அருகில் வீதியோரங்களில் அமர்ந்திருக்கும் இடைத்தரகர்கள் சிலர் அவர்களை வலுக்கட்டாயமாக செயற்பட சொல்லுவதாகவும் அதிகப்படியான பணத்தினை பெற்றுக்கொள்கின்றனர் என்றும் இதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்களால் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆகவே பொதுமக்களுக்கான அனைத்து சேவைகளும் குறிப்பாக படிவங்களை நிரப்புதல், மொழிபெயர்ப்பு செய்தல் போன்ற செயற்பாடுகள் அனைத்துமே மாவட்டச் செயலகத்தால் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது

எனவே சேவைகளை பெறவருபவர்கள் மாவட்டச்செயலகத்தினுள்ளேயே பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## குடும்பப் பெண் கடத்தல் சம்பவம்; 11 பேருக்கு 18வரை விளக்கமறியல்

(கரணவாய்)

வடமராட்சி – வல்வெட்டித்துறை கம்பர் மலைப்பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த பெண்ணின் கணவர் உட்பட பதினொரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்கக் கோரி சட்டத்தரணி காண்டீபன் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிணைமனுவும் நேற்றைய தினம் நிராகரிக்கப்பட்டது.

அத்துடன் இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சட்டத்தரணியையும் எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த வழக்கு விசாரணையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (செ-5-60)

## போதையில் அட்டகாசம் புரிந்தவர் சிறைக்குள்

(கரணவாய்)

மதுபோதையில் அட்டகாசம் புரிந்த நபர் ஒருவருக்கு 5 வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

துன்னாலை இராஜகிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராகவே மேற்படி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (இ-60)

## மாலைதீவில் கைதான இலங்கையர் இராணுவத்தில் பணியாற்றவில்லை
### இலங்கை இராணுவம் மறுப்பு

மாலைதீவில் கைது செய்யப்பட்ட ஸ்னைப்பர் தாக்குதல்தாரி என்று கூறப்பட்டவர் இலங்கையின் இராணுவத்தில் பணியாற்றவில்லை என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

மாலைதீவின் வரலாற்றில் முதல் தடவையாக ஸ்னைப்பர் ரவை, கைக் குண்டுகள், ரி 56 ரக துப்பாக்கி, குண்டு தயாரிக்கும் பொருட்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்தே குறித்த இலங்கையர் தடுத்து வைக்கப்பட்டார்.

இந்தநிலையில் அவர் இலங்கையின் இராணுவத்தில் பணியாற்றியவர் என்று மாலைதீவின் ஹவீரு செய்திச் சேவை தகவல் வெளியிட்டிருந்தது

எனினும் அவர் கைது செய்யப்பட்டாரா? என்ற தகவலை அந்த செய்தி சேவை வழங்கவில்லை.

இதனையடுத்து குறித்த இலங்கையர் தமது இராணுவத்தில் பணியாற்றவில்லை என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. (செ-12)

## சிவதீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் சிவதீட்சை செய்து வைக்கப்படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபையின் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவதீட்சை பெறும் நிகழ்வு இடம்பெறும்.

சிவதீட்சை பெற்றுக்கொள்ள விரும்புவோர் சைவ பரிபாலன சபையில் தமது பதிவு களை மேற்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 021 222 7678 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சைவபரிபாலன சபையின் செயலாளர் இரா.செல்வவடிவேல் கேட்டுள்ளார். (இ-5)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

1988-1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடமாகாணத்தின் பாதுகாப்பற்ற புகையிரத கடவையாளர்களாக கடமையாற்றி தற்போது தொழிலை இழந்து நிற்கும் வடமாகாண பாதுகாப்பற்ற புகையிரத கடவையாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்கன்குளம் சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

எனவே அத்தினம் கட்டாயமாக தங்களது ஆவணங்களுடன் வருகை தருமாறும் முக்கியமான விடயங்கள் எட்டப்பட்டு இருப்பதையும் அறிவிக்கும் முகமாக இந்த ஒன்றுகூடல் அமைகிறது எனவும் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-10)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



நல்லதோ கெட்டதோ நமது பாத்திரத்தை நாம் நடிக்கிறோம். கனவு முடிந்ததும் நாடக மேடையை விட்டு இறங்கியதும் இதையெல்லாம் எண்ணி மனமாரச் சிரிக்கலாம். இந்த அளவுக்கு நான் உறுதியாக உள்ளேன்.

நன்மை எல்லாம் இறைவனால் செய்யப்படுகின்றன. தீமையைச் செய்பவன் நான் என்று கொள்ள வேண்டும். மனத்தை தூய்மைப்படுத்த இதுவே எளிய வழி.

படிப்படியாக மனத்தை வலிமைப்படுத்த வேண்டும். ஒரு மனிதன் உருவாகிவிட்டால் போதும் நூறாயிரம் சொற்பொழிவுகள் செய்யும் வேலையை அது செய்துவிடும். எண்ணமும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். அது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆன்மாவை உணர்ந்தவனின் அறிவு எல்லாவற்றையும் தழுவிய முழுமையான அறிவு. ஆன்மாவை உணர்ந்ததும் விஞ்ஞானம், தத்துவம் எல்லாமே உனக்கு எளிதில் கைவரப் பெறும்.

சாதாரண தேவையான எளிய உணவும் உடையும் கொடுக்க முடியாத நாட்டுக்கு எதற்கெடுத்தாலும் மற்றவர்களை எதிர்பார்த்து நிற்கின்ற ஒரு நாட்டிற்கு பெருமை என்ன வேண்டிக் கிடக்கிறது? மதம், கர்மம் எல்லாவற்றையும் கங்கையில் வீசியெறிந்துவிட்டு முதலில் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிபெற உன்னைத் தளயார் செய்து கொள்.

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் வலுவான நிலையில் அவுஸ்திரேலியா





அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்று வருகிறது. நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 556 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

வோர்னர் 163 ஓட்டங்களும், கவாஜா 178 ஓட்டங்களும் குவித்தனர். நியூசிலாந்து அணி சார்பில் சவுத்தி, போல்ட், நீசம், வில்லியம்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினார்கள்.

பின்னர் நியூசிலாந்து முதல் இன்னிங்சை தொடங்கியது. குப்தில, லாதம் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

குப்தில் 23 ஓட்டங்களிலும், லாதம் 47 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தார்கள். அதன்பின் வில்லியம்சன் களம் இறங்கினார்.

இவரை எதிர்த்து களம் இறங்கிய அனைவரும் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

டெய்லர் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும், மக்கல்லம் 6 ஓட்டங்களிலும், நீசம் 3 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர்.

அதன்பின் 6 ஆவது விக்கெட்டுக்கு வில்லியம்சனுடன் வாட்லிங் ஜோடி சேர்ந்தார். வில்லியம்சன் அரை சதம் அடித்ததுடன் நேற்றைய 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டார்.

நியூசிலாந்து அணி 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்துள்ளது. தற்போது வரை நியூசிலாந்து அணி 399 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. பாலோ- ஆன் தவிர்க்க இன்னும் 200 ஓட்டங்கள் எடுக்க வேண்டும்.

இதனால் நியூசிலாந்து பலோ- ஆன் ஆக அதிக வாய்ப்புள்ளது. அப்படி பாலோ- ஆன் ஆனால் தொடர்ந்து நியூசிலாந்தை துடுப்பாட அவுஸ்திரேலியா வலியுறுத்தும். இன்னும் மூன்று நாட்கள் உள்ளதால் அவுஸ்திரேலியா இந்த டெஸ்டில் பெரிய அளவில் வெற்றி பெற வாய்ப்புள்ளது. போட்டியின் மூன்றாம நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து சென்னையை வீழ்த்தியது கோவா



8 அணிகளுக்கு இடையிலான இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டித் தொடரில் சென்னை நேரு விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 50 ஆவது லீக் ஆட்டத்தில் சென் னையின் எப்.சி.-எப்.சி.கோவா அணிகள் மோதின.

சம பலம் வாய்ந்த சென்னை, கோவா அணிகள் மோதிய இந்த போட்டி மிகவும் விறுவிறுப்புடன் காணப்பட்டது. இறுதிவரை யாராலும் நேரடியாக கோல் அடிக்க முடியவில்லை. ஆனால் கோவா அணி ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் தனக்கு கிடைத்த இரண்டு பனால்டி வாய்ப்புகளை கோலாக மாற்றியது. அதனால், இந்தப் போட்டியில் 2-0 என்ற கணக்கில் கோவா அணி, சென்னை அணியை வீழ்த்தியது.

சொந்த மண்ணில் சென்னை அணி தோல்வியை தழுவியது ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலம் கோவா அணி 14 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்தது. (க)

## சதுரங்கப் போட்டிகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான முதலமைச்சர் சதுரங்கக் கிண்ணப்போட்டிகள் இன்று சனிக்கிழமை நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன.

இன்று ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ள போட்டியில் ஆண்,பெண் இருபாலாருக்குமான 12,14,16,18 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டிகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியில் 6,8,10 வயதுப் பிரிவுகளுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# செல்போனை திருடிச் சென்ற நபரை மடக்கி பிடித்த செரினா வில்லியம்ஸ்

அமெரிக்காவை சேர்ந்த உலகின் 'நம்பர் வன்' டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் காயம் காரணமாக தற்போது ஓய்வில் இருந்து வருகிறார். கடந்த செவ்வாய்க்கிழமை செரீனா வில்லியம்ஸ் அமெரிக்காவில் உள்ள சீன உணவகத்தில் அமர்ந்து சாப்பிட்டு கொண்டு இருந்தார். 4 பேர் அமரக் கூடிய அந்த மேசையில் இரண்டு பேர் மட்டுமே சாப்பிட்டு கொண்டு இருந்தனர்.

அப்போது செரீனாவின் மேசை அருகில் ஒரு நபர் வந்து நின்றார். அவர் சிறிது நேரம் அந்த இடத்திலேயே நின்று கொண்டு இருந்ததால் சந்தேகம் அடைந்த செரீனா வில்லியம்ஸ் அவரது நடவடிக்கைகளை ஓரக்கண்ணால் கவனித்தபடி சாப்பிட்டார். சில நிமிடங்களில் அந்த நபர் செரீனா வில்லியம்ஸ் நாற்காலியில் வைத்து இருந்த செல்போனை எடுத்து கொண்டு நைசாக நழுவினார்.

இதனை உடனடியாக கவனித்த செரீனா சத்தம் போட்டபடி அந்த நபரை துரத்தினார். அந்த நபரோ ஓட்டம் பிடித்து தப்ப முயற்சித்தார்.

களத்தில் வேகமாக ஓடக்கூடிய செரீனா வில்லியம்ஸ் களத்துக்கு வெளியேயும் தனது ஓட்ட திறனை வெளிப்படுத்தி செல்போனுடன் தப்பி ஓடிய நபரை மடக்கி பிடித்தார். அந்த நபரிடம் தவறுதலாக செல்போனை எடுத்து வந்து விட்டீர்களா? என்று கேட்டபடி செரீனா வில்லியம்ஸ் தனது செல்போனை பெற்றுக் கொண்டார்.

செல்போனுடன் மீண்டும் உணவகத்துக்கு திரும்பிய போது அங்கு சாப்பிட்டு கொண்டு இருந்த அனைவரும் எழுந்து நின்று கைதட்டி செரீனா வில்லியம்சை பாராட்டினார்கள்.

இந்த சம்பவத்தை செரீனா வில்லியம்ஸ் சுப்பர் கேர்ள உடை அணிந்த புகைப்படத்துடன் தனது 'டுவிட்டர்' பக்கத்தில் வெளியிட்டுள்ளார். (க)



# இந்தியா நிதான ஆட்டம் தடுமாறும் தென்னாபிரிக்கா


மொஹாலி டெஸ்ட் போட்டியின் 2-ம் நாளான நேற்று ஆட்ட முடிவில் இந்திய அணி தன் 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்துள்ளது.


இரண்டு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 68 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 201 ஓட்டங்கள் எடுத்தது.

அதிகபட்சமாக முரளி விஜய் அரைசதம் கடந்து 75 ஓட்டங்கள் எடுத்தார். புஜாரா 31 ஓட்டங்களும், ஜடேஜா 38 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதனையடுத்து களமிறங்கிய தென்னாரிக்க அணி முதல்நாள் முடிவில் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. இத னையடுத்து நேற்று களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்டத்தை இந்தியாவின் அஷ்வினும், ஜடேஜாவும் பதம் பார்த்தனர்.

தென்னாபிரிக்க அணிஅனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அதிகபட்சமாக டி வில்லியர்ஸ் 63 ஓட்டங்களும், அம்லா 43 ஓட்டங்களும் எடுத்தனர்.





பந்துவீச்சில் அஸ்வின் 51 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டும், ஜடேஜா 3 விக்கெட்டும், மிஸ்ரா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனையடுத்து இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரராக களமிறங்கிய தவான் ஓட்டங்களின்றி ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான முரளி விஜய் 47 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். புஜரா மற்றும் முரளி விஜய் ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 86 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து விராட் ஹோலி, புஜாராவுடன் ஜோடி சேர்ந்தார். புஜாரா சிறப்பாக விளையாடி அரை சதம் அடித்தார்.

நேற்றைய 2-வது நாளின் கடைசி ஓவரை தாஹிர் வீசினார். இந்த ஓவரின் 5-வது பந்தை புஜாரா சிக்சருக்கு தூக்கி அசத்தினார்.

கடைசி பந்தில் அவர் ஒரு ஓட்டம் எடுக்க இந்தியா 2-வது நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 125 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

புஜாரா 63 ஓட்டங்களுடனும், விராட் ஹோலி 11 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# அனைத்து நட்சத்திர கிரிக்கெட் தொடர் நியூயோர்க்கில் இன்று ஆரம்பம்

அனைத்து நட்சத்திர கிரிக்கெட் தொடருக்கான அணிகளில் இலங்கையின் முன்னாள் நட்சத்திர கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்கார, ம்ஹேல ஜயவர்தன மற்றும்




முத்தையா முரளிதரன் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் போட்டியை அமெரிக்காவில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் கிரிக்கெட்டின் முன்னாள் நட்சத்திர வீரர்களை கொண்டு அமெரிக்காவில் இருபது-20 போட்டித்தொடர் ஒன்று இடம்பெற உள்ளது.

இரு அணிகளின் தலைவர்களான சச்சின் டெண்டுல்கரும், ஷேன் வோர்னும் தமது விபரத்தை அறிவித்துள்ளனர்.

இதில் சச்சின் தலைமையிலான "சச்சின் பிளாஸ்டர்ஸ்" அணியில் 2 இலங்கை வீரர் உட்பட 15 பேர் இடம் பெற்றுள்ளனர்.

வோர்ன் தலைமையிலான அணியில் குமார் சங்கக்கார உட்பட 14 பேர் இடம் பெறுகிறார்கள்.

நியூயோர்க் உட்பட 3 அமெரிக்க நகரங்களில் இந்த இரு அணிகளும் 3 இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ளன. முதல் போட்டி இன்று 7ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறும்.

நேற்று முன்தினம் நியூயோர்க்கில் கூடி இரு அணிகளின் வீரர்களும் தேர்வு செய்யப்பட்டனர். குலுக்கல் முறையில் அணி வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் சச்சின் அணியில் மொத்தம் 15 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

மேலும் இந்தியாவின் நான்கு நட்சத்திர வீரர்களான சச்சின், ஷேவாக், கங்குலி, லட்சுமண் ஆகியோரும் சச்சின் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

**சச்சின் பிளாஸ்டர்**

சச்சின் (அணித் தலைவர்), ஷேவாக், வி.வி.எஸ்.லட்சுமண், பிரையன் லாரா, கங்குலி, மஹேல ஜயவர்தன, கார்ல் கூப்பர், மொயின் கான், முத்தையா முரளிதரன், கிரீம் ஸ்வான், கர்ட்லி அம்புரோஸ், ஷோன் பொலக், கிளேன் மெக்ராத, லான்ஸ் குளூஸ்னர், சொயிப் அக்தர்

**வோர்ன் வோரியர்ஸ்**

ஷேன் வோர்ன் (அணித் தலைவர்), மத்யூ ஹெய்டன், மைக்கல் வோகன், ரிக்கி பொன்டிங், ஜொன்டி ரோட்ஸ், ஜக் கலிஸ், அண்ட்ரூ சைமன்ட்ஸ், குமார் சங்கக்கார, சக்லைன் முஷ்டாக், டானியல் வெட்டோரி, கர்ட்னி வால்ஷ், வசிம் அக்ரம், அலன் டொனால்ட், அஜீத் அகாக்கர். (க)

# இலங்கை – மே.தீவுகள் 3வது ஒருநாள் போட்டி இன்று

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3ஆவதும் இறுதியுமான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்குபற்றுகிறது.

டக்வேர்த் லூயிஸ் முறையிலான முடிவைத் தந்த முதலிரு போட்டிகளின்நிறைவில் இலங்கை (1ஆவது போட்டி, ஒரு விக்கெட்டாலும், 2ஆவது போட்டி, 8 விக்கெட்டுக்களாலும்) 2:0 என்ற கணக்கில் தொடரை ஏலவே கைப்பற்றியிருந்தது.



ஆர்.பிரேமதாச அரங்கில் நடந்த போட்டிகள் இரண்டும் மழையின் தாக்கத்தினால் பூரணமான போட்டிகளாக அமையவில்லை.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி இன்று கண்டி பல்லேகலேயில் ஆரம்பமாகிறது. (க)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி வேலுப்பிள்ளை சரஸ்வதி



வலம்புரி குடும்பத்தைச் சேர்ந்த
**திரு.வே.ஆனந்தராசா**
அவர்களின் அன்புத் தாயார் **திருமதி வேலுப்பிள்ளை சரஸ்வதி** அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

- வலம்புரி குடும்பம்

(ஐ)

## மடுக்கல்வி வலய புதிய பணிப்பாளராக ஜோன்குயின்தாஸ்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள மடுக்கல்வி வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக தீவக வலயக் கல்வி பணிப்பாளராக கடமையாற்றிய தி.ஜோன்குயின் தாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி இடமாற்றத்தின்படி நாளை மறுதினம் 9-ம் திகதி திங்கட்கிழமை தனது கடமைகளை இவர் பொறுப்பேற்கவுள்ளார்.

மடு கல்வி வலயத்தின் பணிப்பாளர் ஆ.ஐ.குருஸ் ஓய்வுபெற்றதையடுத்து புதிய பணிப்பாளர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தீவக கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக தென்மராட்சி கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எஸ்.சுந்தரசிவம் எதிர்வரும் 9-ம் திகதி திங்கட்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12-15)

## ஆணைக்குழுக்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவையின் நிறைவேற்று சபை நேற்று நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் கூடிய போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து இராஜினாமா செய்த உறுப்பினருக்கு பதிலாக வேறொருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கும் ஜனாதிபதியின் அனுமதி பெறப்படவுள்ளது. (செ-12)


WORLD EDUCATION CONSULTANCY (WEC)
No:377. sangathanai, chavakachcheri. (Near the c/hindu college)

IELTS (Acedamic/General)
student visa, Work visa, settlement visa க்கு தேவையான ஆங்கிலப்பரீட்சை. மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் பரீட்சையில் 100% சித்தியடைவதற்குரிய தயார்ப்படுத்தல் வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

IELTS (Life Skills) A1
திருமணம் முடித்து LONDON (UK) செல்பவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள ஆங்கிலப்பரீட்சை. கடந்த 08.10.2015 நடைபெற்ற பரீட்சையில் எமது மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்து கல்லூரிக்கு 100% பெறுபேற்றினை பெற்றுத்தந்துள்ளனர்.

Study in UK & Australia
Europe (Lithuania,Latvia,Portugal)
மேற்படி நாடுகளிற்கு செல்லவுள்ளவர்களுக்கு தூதரகத்தினால் கேட்கப்படும் கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேசுவதற்குரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு விசா ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.
(விசா கிடைக்கமுன்னர் எவ்வித முற்பணமும் அறவிடப்படமாட்டாது)
(C-2629)

தயார்ப்படுத்தும் புதிய வகுப்புக்கள் அனைத்தும் 14.11.2015 மற்றும் 15.11.2015 அன்று 11am க்கு ஆரம்பம்.

0779265447, 0217200989



Branded கணனி பிரியர்களே...
மிகக்குறைந்த விலையில் Lenovo, Dell, Hp கணனி, Laptop களை பெற்று கொள்ளலாம்.



Rs.8750/- இல் இருந்து
Warranty 06 Months
(C-2634)
Micro System Manipay
077 2487082
021 2256165


## ஏமாற்றப்ப...

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான த.தே.கூட்டமைப்பு மற்றும் அரசாங்கத்தின் அறிவிப்புக்களை நிராகரித்துள்ள அரசியல் கைதிகள் தாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

நிபந்தனையின்றிய பொதுமன்னிப்பின் அடிப்படையிலான விடுதலையை கோரி கடந்த மாதம் 12-ம் திகதியிலிருந்து 14 சிறைகளில் உள்ள 253 தமிழ் அரசியல் கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் விடுதலைக்கான உறுதிமொழிகளுடன் ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கைவிடச் செய்யப்பட்டது.

எனினும் வழங்கப்பட்ட உறுதிமொழியின் படி அரசியல் கைதிகளுக்குரிய பொதுமன்னிப்போ அல்லது அவர்களால் ஏற்கக்கூடிய விடுதலை தொடர்பான தீர்வோ இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையிலேயே தமக்கான விடுதலையை கோரி சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தை நாளை 8-ம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நாளை மறுதினம் அரசியல் கைதிகள் 32 பேர் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற த.தே.கூட்டமைப்பின் அறிவிப்பையும் விடுவிக்கப்படுபவர்கள் பிணை அடிப்படையிலேயே முதற்கட்டமாக விடுவிக்கப்படவுள்ளனர் என்ற நீதியமைச்சரின் கூற்றையும் அரசியல் கைதிகள் முற்றா நிராகரித்துள்ளனர். (செ-12)

## ஒலி...

தொடரப்பட்ட கேள்வியின் போதே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி கொழும்பு அதிவேக வீதியின் எஞ்சிய பகுதி வேலைகள் நிறைவுறுத்தப்படாமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும பல கேள்விகளை பெருந்தெருக்கள் அமைச்சரிடம் முன்வைத்தார்.

இதற்கு, பிரதமர ரணில் விக்கிரமசிங்க பதில் வழங்க முற்பட்ட போதே ஒலிவாங்கி செயலிழந்தது.

இதற்கான காரணம் குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பிரதமர் நாடாளுமன்ற செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.(செ-12)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## தாக்குதல் சம்...

யப்பட்ட 2 முறைப்பாடுகள் மற்றும் சம்பவம் தொடர்பிலான காணொளிகள் சிலவற்றையும் விசாரணைக்காக பயன்படுத்தியதாக ஆணைக்குழுவின் விசாரணை மற்றும் கண்காணிப்பு பிரிவின் பதில் பணிப்பாளர் சித்தாரா தெம்பிலியகொட குறிப்பிட்டார்.

இது குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்காக முறைப்பாட்டாளர் தரப்புகளால் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் சத்தியக்கடதாசிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும் பதில் பணிப்பாளர் கூறினார்.

இதுதவிர சம்பவத்தின்போது தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்ற மாணவர்களின் மருத்துவ அறிக்கைகளை வைத்தியசாலையிடம் இருந்துபெற்றுக்கொள்வதற்கும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் பின்னர் எச்.என்.டி.ஏ மாணவர்கள் மீதான தாக்குதல் தொடர்பிலான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் என்றும் ஆணைக்குழுவின் விசாரணை மற்றும் கண்காணிப்பு பிரிவின் பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.(செ-12)

## பொன்சேகாவு...

வும், அவர் ஒரு திருடன் என்றும் பீல்ட் மாஷல சரத் பொன்சேகா நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

பொன்சேகாவின் இந்தக் கூற்றினால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய தனது சட்டத்தரணிகள் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நீதியமைச்சா் இதனைக் குறிப்பிட்டார். (செ-12)

## ஆயுத களஞ்சி...

குறித்து அரசாங்கத்துக்குள் ஏற்பட்டிருக்கும கருத்து முரண்பாடு தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அமைச்சர்கள் பலரும் தமது கருத்துக்களை கூறியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கடந்த அமைச்சரவை கூட்டத் தொடரின் போது இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததாகவும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (செ-12)

## அளவுக்கதிகமான...

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள மதுபானசாலைகள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து பல முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

அந்த முறைப்பாடுகளின் அடிப்படையிலும சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்காகவும் அளவுக்கதிகமாக அமைந்துள்ள மதுபானசாலைகளை குறைக்கும் நடவடிக்கைகள் வடமாகாண ஆளுநரின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றது.

அதனடிப்படையில் பாடசாலை, கோவில், வைத்தியசாலை போன்ற பொது இடங்களுக்கு அருகில் உள்ள மதுபானசாலைகளை அகற்றுவதற்கும் சட்டரீதியற்ற முறையில் இயங்கும் மதுபானசாலைகளை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டத்துக்கு எதிர்வரும 11 ஆம் திகதி மதுபான நிலையங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள அதிகாரிகள் வருகைதரவுள்ளனர்

அன்றைய தினம் அவர்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் மதுபானசாலைகளுக்கெதிராக முறைப்பாடு செய்த பொதுமக்களிடத்தில் இருந்து நேரடியாக முறைப்படுகளை பதிவு செய்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் வடமாகாண ஆளுநரின் அனுசரணையுடனும் வெகு விரைவில் யாழ்.மாவட்டத்தல் அளவுகதிகமாக உள்ள மதுபானசாலைகள் மற்றும் சட்டரீதியற்ற முறையில் இயங்கும் மதுபானசாலைகள் நிரந்தரமாக அகற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## வாக்காளர் இடா...

கள் இருப்பார்களாயின் அவர்கள் தமது உரிமை கோரிக்கை கடிதத்தை தேர்தல்கள் செயலகத்திற்கு எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர சமர்ப்பிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

தமது பெயர் 2015ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் உள்வாங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதனை தேர்தல்கள் செயலக இணையத்தளத்திற்குள் பிரவேசித்து, உறுதிச் செய்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு தமது பெயர் பரிந்துரை செய்யப்படாவிடத்து, அவர்களுக்கான உரிமை கோரும் விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்க முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் கூறினார்.

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவையாளர் அலுவலங்களில் அதற்கான விண்ணப்பங்களை பெற்று, மாவட்ட செயலகங்களுக்கு அதனை ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வெளிநாட்டில் உள்ள இலங்கை பிரஜைகளின் பெயர்களும் 2015ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் உள்வாங்கப்படவில்லை என கருதும் பட்சத்தில், தேர்தல்கள் செயலகத்திலுள்ள "ஆ" விண்ணப்பத்தை நிரப்பி செயலகத்திடம் கையளிக்க வேண்டும என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த இலங்கை பிரஜைகளின் உறவினர்களினால் இந்த விண்ணப்பத்தை நிரப்பி தேர்தல்கள் செயலகத்தில் கையளிக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவில்லையாயின் 2015ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பெயர்கள் உள்வாங்கப்படமாட்டாது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம். எம்.மொஹமட் குறிப்பிட்டார்.(செ-12)

## 23 - 29-ம் திகதி...

கண்டி, காலி, யாழ்ப்பாணம், அனுராதபுரம், மாத்தறை, மட்டக்களப்பு மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களில் சட்ட ஆலோசனை நிலையங்கள் நிறுவப்பட்டு அதனூடாக மக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன என நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

நீதித்துறை தொடர்பான பிரச்சினைகளுக்கு 0113133864, 0113133862 ஆகிய உடனடிய இலக்கங்களுடன் தொடர்புகொண்டு ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி தேசிய சட்ட வாரத்தின் நிறைவு விழா பிரதமர் ரணில் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## விசேட அமைச்ச...

தொடர்பில தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வமைச்சரவை கூட்டத்தில் அவன் கார்ட் ஆயுத விவகாரம் மற்றும் ஏனைய மோசடி விவகாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

## ஓய்வுபெற்றோரு...

யானது ஓய்வூதியம் பெற்றுக்கொள்வது தொடக்கம் எதிர் காலத்தில் மின்கட்டணம் செலுத்தல்- காப்புறுதி விடயங்கள் என பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஓய்வுபெற்றவர்களின் திறமைகளை பயன்படுத்தும் நோக்கில் எதிர்காலத்தில் அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கவும் தான் எதிர்பார்த்துள்ளதாகவும் ஓய்வுபெற்றவர்கள் செயற்பாட்டுடன் கூடியவர்களாக சமூகத்தில் இருப்பதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.